விலை ரூபா 20
பக்கங்கள் 32

# உதயன்

30°c - 23°c
தெளிவான வானம்

சுடர் 31 கதிர் 76 வள்ளுவர் ஆண்டு 2047 தை 27, புதன்கிழமை 10.02.2016

## ஊடகங்களை கண்டிக்க முடியாது

*வடக்கு அவைத் தலைவர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 10
மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் உறுப்பினர் பக். 27

# ஐங்கரநேசனுக்கு எதிராக ஆளும்கட்சி போர்க்கொடி

### *ஏகமனதாகப் பிரேரணையும் நிறைவேறியது*

யாழ்ப்பாணம், பெப். 10
வடக்கு மாகாணவிவசாயஅமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக, ஆளும் கட்சி உறுப்பினர்களால் பல்வேறு குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் முதலமைச்சர் விசாரணை நடத்தவேண்டும் எனக் கோரிய பிரேரணை சபையில் நேற்று ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது.
வடக்கு மாகாண சபையின் 45 ஆவது அமர்வு நேற்று இடம் பெற்றது. இதன் போது ஆளும் பக். 30

## கேப்பாப்பிலவில் வீதி, காணிகளை விடுவிக்கவேண்டும் இராணுவம்

*மாகாண சபையில் நேற்றுத் தீர்மானம்*

யாழ்ப்பாணம், பெப். 10
முல்லைத்தீவு கேப்பாப்பிலவில் இராணுவம் பிடித்து வைத்துள்ள மக்களின் காணி மற்றும் அதனுடன் இணைந்த வீதியும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
அத்துடன் மன்னார் மாவட்டத்தில் பேசாலையில் உள்ள கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணியை இராணுவத்தினருக்கு உத்தியோகபூர்வமாகக் பக். 05

## கருத்தறியும் அமர்வு இரண்டு நாள்கள் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,பெப்.10
உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை யாழ்.மாவட்ட மக்கள் முன்வைப்பதற்காக மக்கள் கருத்தறியும் குழுவின் அமர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமையும், 16 ஆம் திகதி பக். 26

# சர்வதேச பங்களிப்புடன் போர்க்குற்ற விசாரணை

## ஜனாதிபதியும் பிரதமரும் உத்தரவாதம் என்கிறார் ஐ.நா. ஆணையாளர் ஹூசேன்



கொழும்பு, பெப்ரவரி 10
இலங்கையின் நீதித்துறை, அரசியல் மயப்படுத்தப்பட்டதாக - நம்ப முடியாததாக - சமநிலையற்றதாக இருப்பதால் தான், போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் சர்வதேசப் பங்களிப்பு வலியுறுத்தப்பட்டது.
எனவே, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தில் தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக இலங்கை ஜனாதிபதியும், பிரதமரும் உத்தரவாதத்தை வழங்கியுள்ளனர். பக். 26

முச்சந்தி முரளி



அந்த மனுசனும் விடுகிறேல எண்டு நிக்கிது கண்டியளே...

## ஐ.நாவின் தீர்மானத்தை முழுமையாக-முறையாக செயற்படுத்தவேண்டும்

*ஆணையாளர் ஹூசேனிடம் கூட்டமைப்பு வலியுறுத்து*



கொழும்பு, பெப்.10
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முழுமையாக – முறையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.
இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அல் – ஹூசேனிடம் நேற்று நேரில் வலியுறுத்தியது பக். 30

## சர்வதேசக் கண்காணிப்பு விசாரணையில் அவசியம்

**எம்.பியாகப் பதவியேற்ற பின் சரத் பொன்சேகா தெரிவிப்பு**

கொழும்பு, பெப்.10
சர்வதேசக் கண்காணிப்பாளர்களுடைய பங்களிப்புடனேயே போர்க்குற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட வேண்டும் என்று முன்னாள் இராணுவத் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினராக நேற்றைய தினம் பதவியேற்ற சரத்பொன்சேகா ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இதை வலியுறுத்தி பக். 05

## ரணிலுடன் ஹூசேன் பேச்சு

கொழும்பு, பெப்.10
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹூசேனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் பக். 27

## ஐ.நா. தீர்மானம் குறித்து மைத்திரி-ஹூசேன் பேச்சு



கொழும்பு, பெப். 10
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹூசேன் நேற்றுப் பகல் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஐ.நா. தீர்மானத்தின் நடைமுறை குறித்துப் பேசப்பட்டது எனத் தெரிய பக். 27

## நிர்ணய விலையில் நெல் கொள்வனவு

*துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண சபையில் தீர்மானம்*

யாழ்ப்பாணம், பெப். 10
விவசாயிகளிடமிருந்து நிர்ணயித்த விலையில் நெல் கொள்வனவைத் துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் பக். 30

## அரசியல் கைதிகள் விரைவில் விடுவிக்கப்படுதல் வேண்டும்

**இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பேன் எனக் கூட்டமைப்பினரிடம் ஹூசேன் உறுதி**

கொழும்பு, பெப். 10
சர்வதேச சட்டத்தின் பிரகாரம் போர்க்குற்றம் செய்தோர் தண்டிக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கோருவது பொருத்தமற்ற விடயம். ஆனால், பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் பக். 05




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள் மூலம் மணல் கடத்தல் வடமராட்சி கிழக்கில் முறியடிப்பு

யாழ்ப்பாணம். பெப்.10

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மணல் கடத்தும் குழுக்கள் மேற்கொண்டு வந்த வித்தியாசமான மணல் கடத்தல் பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு குடத்தனை மணற்காடு நாகர்கோவில் உட்பட கரையோரப் பகுதிகளில் மணல் கடத்தல் நடவடிக்கையாக சைக்கிளில் ஒவ்வொரு மூடையாகக் கொண்டு வர எடுக்கப்பட்ட முயற்சி மணல் கடத்தலை தடுக்கும் விசேட பொலிஸ் குழுவால் முறியடிக்கப்பட்டது என்று வடமராட்சிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். ஏ. ஜவ்பர் தெரிவித்தார்.

நேற்றுக்காலை பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்புக்களில் சைக்கிள்களில் கொண்டு செல்லப்பட்ட 40 மணல் மூடைகள் தம்மால் கைப்பற்றப்பட்டன என்றும், சந்தேக நபர்களை மடக்கும் முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்குக் கரையோரப் பகுதிகளில் வாகனங்களில் சட்டவிரோத மணல் கடத்தல் நடவடிக்கைகள் அண்மைக்காலமாகத் தீவிரமாகியிருந்தன. அதை முறியடிக்க உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தலைமையில் விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்தக் குழுக்கள் கடந்த வருடத்தில் மட்டும் சுமார் 70இக்கு மேற்பட்ட மணல் கடத்தல் நடவடிக்களை முறியடித்ததுடன், வாகனங்களையும் கைப்பற்றியுள்ளன என்று பொலிசார் தெரிவித்தனர். சில சந்தர்ப்பங்களில் கடத்தல் கும்பல்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் மோதல் சம்பவமும் இடம்பெற்றது. பொலிஸார் பதிலுக்குத் துப்பாக்கிச் சூட்டையும் நடத்தியிருந்தனர்.

அத்துடன் பல டிப்பர்கள், பார ஊர்திகள், உழவு இயந்திரங்கள் பொலிஸாரால் கலைத்துப் பிடிக்கப்பட்டும் இருந்தன. இதேவேளை கடந்த மாதம் முதல் மணல் கடத்தல் இடம்பெறும் இடங்களில் விசேட அதிரடிப்படையினரும், பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டதுடன் அந்தப் பகுதிகள் பொலிஸாரின் தீவிர கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டன. தீவிர ரோந்து செயற்பாடுகளையும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.

இந்த நிலையில் கடத்தல் கும்பல்கள் அண்மைக்காலமாக மணல் கடத்தலுக்கு புதிய யுக்தியைக் கையாண்டு வந்தனர். கடற்கரையில் இருந்து மணலை உரப் பைகளில் கட்டி ஒவ்வொரு மூடைகளாக சைக்கிள்களில் ஏற்றி கொண்டு வந்து விற்பனை செய்வதை அண்மைக்காலமாக மேற்கொண்டு வந்தனர்.

இந்த மூடைகள் சுமார் 300 ரூபா முதல் 400 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடத்தலும் நேற்றுப் பகல் பொலிஸாரால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு மணற் காடு பகுதியில் பொலிஸார் நடத்திய திடீர் சுற்றி வளைப்பில் சைக்கிள்களில் 40க்கு மேற்பட்ட மணல் மூடைகள் கைப்பற்றப்பட்டன என்றும், அதனை அகழ்ந்த சந்தேக நபர்கள் தப்பிச்சென்றுள்ளனர் என்றும் தெரிவித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளும் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தார். (ற-ஜ-109)

# பொது இடத்தில் கோழிக் கழிவு கொட்டியவர் திட்டமிட்டு பிடிப்பு

## *தெல்லிப்பழைப் பகுதியில் சம்பவம் சிக்கியவருக்கு ஒத்தி வைத்த சிறை*

தெல்லிப்பழையில் பல இடங்களிலும் தொடர்ச்சியாக இரவு நேரங்களில் கோழிக் கழிவுகளைக் கொட்டி வந்தவர் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டுள்ளார்.

அவருக்கு ஒரு வருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்த மல்லாகம் நீதிமன்று அதனை 5 வருடங்கள் ஒத்திவைத்தது. தவிர 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சுன்னாகம் பகுதியில் உள்ள கோழிப்பண்ணையாளர் ஒருவருக்கே மல்லாகம் நீதிவான் ஏ.யூட்சன் மேற்படி தீர்ப்பு வழங்கினார்.

தெல்லிப்பழைப்பகுதியில்உள்ள வீதியோரங்களில் அண்மைக்காலமாக பொதுமக்கள் செல்ல முடியாதவாறு கோழிச் செட்டைகள், குடல்கள் நிரம்பிய பைகள் வீசப்பட்டு வந்துள்ளன. ஆனால் அதனை வீசுவது யார் என்பது தெரியாதிருந்தது. பொது இடங்களில் இவ்வாறு கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுக்குமாறு அப்பகுதி மக்கள் தொடர்ச் சியாகப் பொது சுகாதார பரிசோதகர்களைக் கோரி வந்துள்ளனர்.

அதையடுத்து இந்தச் செயலில் ஈடுபடுபவரைக் கண்டறிவது என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் முடிவெடுத்தனர். அதற்கு அப்பகுதி இளைஞர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டனர்.

அதன்படி அங்குள்ள சுமார் 25 இளைஞர்கள் ஒன்று சேர்ந்து அதனைக் கண்டறிய முற்பட்டனர். இரவு நேரம் இடம்பெறும் இந்தச் செயலைக் கண்டறிவதற்கு, தெல்லிப்பழை பொதுச் சுகாதார பரிசோதகர் ராஜமேனன் மற்றும் கீரிமலை பொதுச் சுகாதார பரிசோதகர் நிசாந்தன் ஆகியோருடன் இளைஞர்கள் 25 பேர் இரவு நேரம் வீதிகளில் நிறுத்தப்பட்டு அவதானிக்கப்பட்டது.

அதன்போது இரவு 11 மணியளவில் பட்டா வாகனத்தில் சென்ற இருவர் 2 பெரிய பைகளில் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு முன்பாகக் கழிவுகளைக் கொட்டும் போது இளைஞர்களினால் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டனர்.

பின்னர் அவர்கள் தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு கோரப்பட்டது.

தெல்லிப்பழை பொதுச்சுகாதார பரிசோதகருடன் இணைந்து தெல்லிப்பழை பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன் போதே கோழிப்பண்ணைஉரிமையாளருக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறை மற்றும் அபராதம் விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார். (ற-4,107)

# கல்வி, சுகாதார நியதிச் சட்டங்களுக்கு ஒப்புதல்

## *வடக்கு ஆளுநர் வழங்கினார்*

வடமாகாண சபையின் கல்வி மற்றும் சுகாதார நியதிச் சட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கான ஒப்புதல்கள் ஆளுநர் பளிகக்காரவால் வழங்கப்பட்டுள்ளன என்று வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் 45 ஆவது அமர்வு கைதடியில் அமைந்துள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அவைத் தலைவர் அறிவிப்பின் போதே மேற்படி விடயத்தை அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையால் கடந்த அமர்வுகளில் சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு என்பவற்றால் கொண்டு வரப்பட்ட சுகாதார சேவைகள் நியதிச் சட்டம், கல்விக்கான நியதிச்சட்டம் என்பன திருத்தம் மேற்கொள்ளப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்டன. அவை சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிசீலனைக்கு ஆளுநரால் அனுப்பப்பட்டிருந்தன.

தற்போதைய ஆளுநர் ஓய்வு பெற்றுச் செல்ல இருப்பதனால், இவற்றுக்கான அங்கீகாரம் கோரி ஆளுநரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினேன். இதற்கு மாகாணசபைச் சட்டத்திற்கு அமைவாக அங்கீகாரம் வழங்கச் சம்மதம் தெரிவித்தார். எனவே குறித்த நியதிச் சட்டங்கள் இன்று மாகாண சபைக்குக் கிடைக்கக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-5,ரி5)

# யாழ். நகர் நகைக் கடையில் மின் ஒழுக்கால் தீ விபத்து

யாழ்ப்பாணம்.பெப்.10

யாழ். நகரப்பகுதியில் உள்ள நகை வியாபார நிலையத்தின் குளிரூட்டியில் ஏற்பட்ட மின் ஒழுக்குக் காரணமாக, குறித்த வியாபார நிலையத்தின் பின் புறத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. யாழ். மாநகர சபையினரின் தீயணைப்புப் பிரிவினர் அங்கு வந்து நிலை மையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் நடந்துள்ளது.

யாழ். நகரப் பகுதியில் வின்சர் சந்திக்கு அண்மையில் உள்ள குறித்த நகைக் கடையில் பின் புறம் திடீர் எனத் தீப்பற்றிக் கொண்டுள்ளது. அதையடுத்து கடையில் இருந்த தீயணைப்புக் கருவி மூலம் தீ அணைக்கப்பட்டது. ஆயினும் கடை முழுவதும் பெரும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது. அதையடுத்து தீயணைப்புப் பிரிவினருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அங்கு வந்த தீயணைப்புப் பிரிவினர் வியாபார நிலையத்தின் எந்தப் பகுதியில் தீ பிடித்துள்ளது



என்பதை இனம் கண்டதோடு வேறு இடங்களிலும் தீ அபாயம் இருக்குமா என்று ஆராய்ந்தனர். இதன் போது வியாபார நிலையத்தின் பின் பகுதியில் உள்ள குளிரூட்டி மூலமே மின் ஒழுக்கு ஏற்பட்டது என தெரியவந்தது.

நகை வியாபார நிலையத்தின் பின் பகுதியில் குறித்த தீ விபத்து ஏற்பட்டதால் பொருள்கள் எதுவும் சேதமாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21,ரி2)

# பயிர்ச்செய்கையை பாதுகாப்பதற்கு விவசாயிகளுக்கு நாட்டுத் துப்பாக்கி

## *வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஆலோசனை*

யாழ்ப்பாணம், பெப்.10

விவசாயிகளுக்கு நாட்டுத் துப்பாக்கி வழங்க வேண்டும் என்று ஈ.பி.டி.பி.யின் மாகாண சபை உறுப்பினர் தவநாதன் தெரிவித்தார். நீங்கள் மாகாண சபைக்குள் கொண்டு வரமாட்டீர்கள் என்றால் வழங்கலாம் என்று ஆளும் கட்சியின் உறுப்பினர் கே.சயந்தன் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில், வவுனியா மாவட்ட உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா உள்ளிட்ட வடக்கு மாகாணத்தின் பிரதேசங்களில் தென்னிலங்கையிலிருந்து கொண்டு வரப்படும் யானைகளால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் குறிப்பிட்டதோடு அவற்றைக் கட்டுப்படுத்த வனஜுவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரும் பிரேரணையை முன்மொழிந்தார்.

வவுனியா வடக்கில் கடந்த வருடத்தின் பின் அரைப் பகுதியில் மாத்திரம் யானைத் தாக்குதல் தொடர்பில் 69 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு எதுவும் வழங்கப்படவில்லை. தென்னிலங்கையிலிருந்து கனரக வாகனங்களில் கொண்டு வரப்படும் யானைகள் காடுகளினுள்ளே இறக்கி விடப்படுவதனாலேயே இந்த நிலைமை ஏற்படுகின்றது என்று, பிரேரணையை முன்மொழிந்து கருத்துத் தெரிவிக்கையில் லிங்கநாதன் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் கருத்துத் தெரிவித்த எதிர்கட்சி உறுப்பினர் தவநாதன், யானை மாத்திரமல்ல குரங்குகளாலும் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இதனைக் கட்டுப்படுத்த ஆரம்ப காலங்களில் வழங்கப்பட்டதைப் போன்று விவசாயிகளுக்கு நாட்டுத் துப்பாக்கி வழங்க வேண்டும் என்றார்.

இதன் போது எழுந்த ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன், நீங்கள் மாகாணசபைக்குள் கொண்டுவரமாட்டீர்கள் என்றால் வழங்கலாம் என்றார். (ற-5,ரி5)

# பஸ்ஸில் சங்கிலி அறுத்த இரு பெண்களுக்கு மறியல்

சாவகச்சேரி,பெப்.10

பஸ்ஸில் பயணித்த சக பயணி அணிந்திருந்த 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்த புத்தளம் பகுதியைச் சேர்ந்த இரு பெண்களை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முன்தினம் கொடிகாமம் சென்ற தனியார் பஸ்ஸில் ஏறிய இரு பெண்களும், சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் பஸ்ஸிலிருந்து இறங்கிய பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு மீசாலையில் இறங்கும் போது பொலிஸாரிடம் அகப்பட்டனர்.

இந்த இருவரையும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியபோது இருவரையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார். (ற-ஐ-9,122)

# டெங்கு வழக்குக்கு செல்லாத நால்வருக்கும் 40 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், பெப். 10

டெங்கு பரவக்கூடிய வகையில் சூழலை வைத்திருந்த 4 பேருக்கு மல்லாகம் நீதிமன்று 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. ஒவ்வொருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் அவர்களது வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அளவெட்டி பொதுச்சுகாதார பரிசோதகர் கடந்த மாதம் 25 ஆம் திகதி 4 பேருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார். ஆனால் அன்று குறித்த நான்கு வீட்டு உரிமையாளர்களும் நீதிமன்றில் முன்னிலையாகத் தவறியிருந்தனர். அதனால் அழைப்பாணை விடுக்கப்பட்டது.

அதன்போது அவர்கள் நீதிமன்றில் முன்னிலையாகினர். அவர்களை எச்சரித்த நீதிமன்று அவர்களுக்கு அதியுச்ச தண்டனையாக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தது. (ற-4,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன சாரதிகளுக்கு ஓர் அறிவுபூர்வமான வேண்டுகோள்

திருநெல்வேலியில் கடந்த 3ஆம் திகதி மினிபஸ்ஸும், முச்சக்கர வண்டியும் மோதி விபத்துக் குள்ளானதில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்தசிறுவன்சிகிச்சை பயனின்றி உயிரிழந்த சம்பவம்தொடர்பில் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இனி ஒரு விதி செய்வோம் என மாணவனின் பெயரில் குறித்த துண்டுபிரசுரம் விநியோகிக்கப் பட்டது.

அதில், அன்பான வாகன சாரதிகளுக்கு ஓர் அறிவுபூர்வமான வேண்டுகோள். வாகனம்செலுத்தும்போது கைத்தொலைபேசியை துண்டித்து - மது அருந்துவதை விடுத்து - போட்டியை விடுத்து-வேகத்தை குறைத்து, வாகனத்தை செலுத்துவோமே ,நீங்கள் விதியை மீறியதால் என் விதி முடிந்தது. சாதிக்க வேண்டிய என்னை சாகடித்து விட்டீர்கள். நானும் உங்கள் குழந்தை தானே,உங்கள்பசிக்கு பலியானது நானே கடைசிஆளாக இருக்கட்டும். இப்படிக்கு , இனி உங்களோடு காற்றாக வாழும் சுபஸ்தீகன் என அந்த துண்டு பிரசுரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

(வ-101)


## ஆங்கிலம்

O/L, A/Lஎழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

2 வது சனி, ஞாயிறு பிரிவுகள்ஆரம்பம் 13.02.2016 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

13-02-2016 இற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை ஒப்படைத்தல் வேண்டும்.

SAMSON
Expert in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486


## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
## 2016 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்கள்

உதயனில் 01.02.2016 திங்கட்கிழமை 4 ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் அட்டவணையில் முதலாவது வரியில்

கடை இல. 08 இல் ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக் குறைந்த கேள்வித்தொகை 60,000 என பிரசுரமகியுள்ளது.

இதனை 600,000 என திருத்தி வாசிக்கவும்.

செயலாளர் — நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

(#29066)(05.17)


## நியத்த ஜய

வெற்றி வாரம் : 435
திகதி : 09-02-2016
வர்ணம் : மஞ்சள்

11 15 29 51 C

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ. 11,066,080/-

தொ.பே: 011 4062002 / 0114062052 Web: www.dlb.lk
1919

## லக்சின

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

திகதி 09.02.2016
வெற்றி வாரம் 1940
வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்
25 36 48 61

வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,836,140/-

தொ.பே: 011 4062002 / 0114062052 Web: www.dlb.lk
1919


## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்ட செயலரால் "தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டத்தின் அலுவலர்களுக்கான சுற்றுலா விடுதியாகப் (Circuit Bungalow) பயன்படுத்தக் கூடிய சகல வசதிகளுடன் கூடிய வீட்டுக்கான" விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது கீழ்வரும் நிபந்தனைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.
2. வீட்டின் அமைவிடமானது யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலிருந்து 02 கிலோமீற்றர் சுற்று வட்டாரத்தினுள் இருத்தல் வேண்டும்.
3. குளியலறை வசதிகள் மற்றும் தளபாடங்கள் ஏனைய வசதிகளைக் கொண்ட தங்குவதற்கேதுவான ஐந்து அறைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.
4. வாகனங்கள் சென்று வரக்கூடிய போக்குவரத்து வசதியினையும் குறைந்தது இரண்டு வாகனங்கள் தரித்து நிற்கக்கூடிய தரிப்பிட வசதியினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
5. மேற்குறித்த நிபந்தனைகளுடன் கீழ்வரும் விவரங்களையும் உள்ளடக்கியதாக தங்களது கேள்வி ஆவணம் அமைதல் வேண்டும்.

I. விண்ணப்பதாரர் பெயர்
II. ஆதன உரிமையாளர் பெயர், தொலைபேசி இல (வதிவிடம், கையடக்க தொலைபேசி)
III. ஆதன உரிமையினை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் போட்டோப் பிரதி
IV. அறைகளின் எண்ணிக்கையும் விஸ்தீரணமும் (சதுர அடியில்)
V. கட்டட அமைவு வரைபடம் (இருப்பின்)
VI. மாவட்டச் செயலகத்திலிருந்து குறிப்பிட்ட ஆதனத்துக்குச் செல்வதற்கான பாதை வரைபடம்
VII. தங்களால் மாதமொன்றுக்கு எதிர்பார்க்கப்படும். வாடகை

6. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 021 2222771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. மூடி பொறியிடப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 24.02.2016ஆம் திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்புதல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரச அதிபர் அலுவலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப் பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 24.02.2016 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும், நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்துக்கு அமைவானதாகும்.

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(C/29069)(10.17.20)


## ஆள் தேவை

வார்னிஸ் வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை.
நிரந்தர வேலை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 076 821 9414 (68816)(05.17)

## கார் தேவை
தொடர்பு: 077 6258 242

பாவித்த நல்ல நிலையிலுள்ள
Maruti, Alto கார் உடன் தேவை.

(68810)(15.17)

## வேலைக்கு ஆள் தேவை

யாழ் நகரிலுள்ள பான்சி கடை ஒன்றிற்கு ஆண்/பெண் 18 - 35 வயதிற்குட்பட்ட வேலையாள் தேவை
யாழ் நகரை அண்டியவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 790 5333

## அன்பார்ந்த வாடிக்கையாளர்களே

சுத்தமான ஆட்டுக்கடா இறைச்சி தங்களது நாளாந்தம் மற்றும் விசேடகால தேவைகளுக்கும், சில்லறையாகவும், மொத்தமாகவும், உடனுக்குடன் முன்னறிவித்தலுடன் பெற்றுக் கொள்ளலாம்.

நா. வேண்டிய இடம் :
அளவெட்டி மலைவேம்படி
பொதுச் சந்தைக் கடை.

கிழமை நாள்கள் - சனி, ஞாயிறு, புதன்

உரிமையாளர் - க.சிவலிங்கம்
T.P No: 077 9276 150 (68815)(15.17)

## வேலைக்கு ஆள்கள் தேவை

வடமராட்சியில் இயங்கும்
"தமிழ்ப்பாவை"
இணைய வானொலிக்கு
பெண் அறிவிப்பாளர்கள்
மற்றும்
எடிட்டர்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 021 226 1623,
www.tamilpavai.com 077 4988 118


## அறிவித்தல்
## க.பொ.த (உ/த) பரீட்சை - 2016

மேற்படி பரீட்சைக்கு இரண்டாம் தடவையாகத் தோற்றும் மாணவிகள் அனைவரும் 12.02.2016 வெள்ளிக்கிழமை காலை 8.15 மணிக்கு கல்லூரிக்குத் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அதிபர்
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.


## இலவச தையல் பயிற்சி வகுப்பு

நூற்றுக்கு மேற்பட்ட யுவதிகளுக்கு இலவச தையல் பயிற்சியை வழங்கிய எமது நிறுவனம் மீண்டும் இலவச தையல் வகுப்பை ஆரம்பித்து உள்ளது. இதில் பங்கு பற்றி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

Nitha Gokulam
Woman Children Wel Fare Center.
Amman Road, Kondavil.

தொடர்புகளுக்கு:
077 815 4345
077 888 6102

## விற்பனைப் பிரதிநிதி தேவை

ANDRA BOOKS

புத்தக விற்பனை
(BOOK SALES)
செய்வதற்கு
விற்பனைப்
பிரதிநிதி தேவை

**தகைமைகள்:**
தமிழ், சிங்களம் சரளமாகப் பேசக்கூடியவர்.

**அனுபவம்:**
குறைந்தது 2 வருட அனுபவம் விரும்பத்தக்கது.

ANDRA PUBLICATIONS
379 Kasthuriyar Road, Jaffna
0776622981 | 0777481696


## நல்லூர் பிரதேச சபை
## கொக்குவில் உப அலுவலகம்
## ஆதன பெயர் மாற்றம்

**வட்டாரம் - 12, கோண்டாவில் புகையிரத நிலைய வீதி,**

**ஆதன இலக்கங்கள் : 91.**

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் உப அலுவலக வட்டாரம் - 12, கோண்டாவில் புகையிரத நிலைய வீதி, ஆதன இல-91 என்ற இலக்கங்களைக் கொண்ட ஆதனம் முத்தையா பெண் இராசாத்தி எனும் பெயரில் எமது ஆதன பதிவேட்டில் காணப் படுகின்றது.

இந்த ஆதனத்தை காலஞ்சென்ற தாயார் முத்தையா இராஜேஸ்வரிக்கு சீதனமாகக்கொடுக்கப்பட்டது என்றும் 1992ஆம் ஆண்டளவில் தனக்கு நன்கொடை அளித்திருந்தார் என்றும் முத்தையா ரவீந்திரன் என்பவர் நொத்தாரிசு ஆர்.சபேசன் முகதாவில் 5442 ஆம் இலக்க 15.05.2014 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனது பெயருக்கு வெளிப்படுத்தல் செய்துள்ளார்.

தற்போது இந்த ஆதனம் முத்தையா ரவீந்திரன் என்பவர் தனது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வானத்துக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராத விடத்து, குறித்த ஆதனமானது முத்தையா இரவீந்திரன் என்ற பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன்,


இந்த ஆதனப் பெயர் மாற்றம் செயவ தால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**

(C/29064)(10.20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**DIABETIC SANDALS & SLIPPERS**



நீரிழிவு நோயாளர்களின்
பாதங்களுக்கு இதமான
மெதுமையான காலணிகள்
DIABETIC SANDALS & SLIPPERS
இருபாலாருக்கும் உரியது எம்மிடம்
இருப்பில் உண்டு.
(68773) (14,16,20)

**VANIKAA SURGICALS**
203, Hospital Road - Jaffna (சத்திரச்சந்தி அருகாமை)
T.P : 222 0077 Hot Line : 077 442 2367



**Vijayalanka Exports& Contracts Co. Pvt Ltd**

VIEXCO

*TIN # 174190623*

*MF-240*
50HP



UK, USA தயாரிப்பாளர்களின் ஒப்பந்தத்துடன் பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட புத்தம் புதிய (Brand New) MF-240 வகையைச் சேர்ந்த 50HP வலுச் சக்தி உடைய உழவு இயந்திரங்கள் 10 இறக்குமதி செய்யப்படுகின்றன. யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,மன்னார்,வவுனியா போன்ற இடங்களுக்கு விநியோகிப்பதற்கு 17.5 இலட்சம் ரூபா மட்டுமே. இவ்விலையானது சுங்கவரி, பதிவு(Vehicle registration) உட்பட 3வருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளமுடியும்.

10 இயந்திரங்கள் மட்டும்
வரவழைக்கப்படுவதால்
முன்பதிவு செய்பவர்களுக்கு
முன்னுரிமை வழங்கப்படும்.

இந்த இயந்திர உதிரிப் பாகங்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளமுடியும்.

**தொடர்புகளுக்கு :-**
*Tp.No - 021 205 8999*
*Mobile No :- 071157 3116*
*Email :- vijayalankaexport @gmail.com*

Point pedro road,
Puttur East,
Puttur. (northern Province)
(68794)(10.17.18.19)



## துனுக்காய்
## பகுதி ப.நோ.கூ.சங்கம் துனுக்காய்.
## ஏல விற்பனை

துனுக்காய்ப் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கடந்த இடப்பெயர்வின் போது கைவிடப்பட்டு மீளவும் கொண்டு வரப்பட்ட பின்வரும் பொருள்கள் 20.02.2016ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு சங்க தலைமை அலுவலகக் காரியாலயத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விடப்பட இருக்கின்றது. பெறவிரும்புவோர் ஏலத்தில் பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொள்வதோடு உடன் முழுப் பணத்தையும் செலுத்தி பொருளை பெறவேண்டும். பொருள்களை பார்வையிட விரும்புவோர் தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

**பொருள்களின் விவரம்**

| தொ.இல. | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | மில் பொருள்கள் தூள் கிறைண்டர் | 01 |
| 02. | பொலிசர் 50 | 01 |
| 03. | பொலிசர் 70 | 01 |
| 04. | 2½" சாப் | 01 |
| 05. | புள்ளி | 07 |
| 06. | சோமசிறி பெட்டி கெற்றுடன் சைனா | 01 |
| 07. | சோமசிறி பெட்டி சைனா | 01 |
| 08. | தீட்டல் எஞ்சின் (மல்லாகம்) | 03 |
| 09. | தீட்டல் எஞ்சின் | 01 |
| 10. | ஆட்டி சொப்பின் றேசர் | 01 |
| 11. | 10 கோஸ் பவர் றொப்லான் எஞ்சின் | 01 |
| 12. | சீனச்சட்டி பிறாக்கட் | 04 |
| 13. | 2 இஞ்சி பம் | 01 |
| 14. | 16 கோஸ் பவர் எஞ்சின் | 01 |
| 15. | யொயின்ற் | 01 |
| 16. | ஏனையவை கலப்பை பெட்டி லான்மாஸ்ரர் | 01 |
| 17. | இரும்புக் கதிரை | 07 |
| 18. | மிக்சி | 01 |

**தலைவர்**
**துனுக்காய் ப.நோ.கூ.சங்கம்,**
**துனுக்காய்.**
(C 29062)(10.17.18.19)


# புத்தூர் நிலவெடிப்புத் தொடர்பில் 2ஆம் கட்ட ஆய்வு அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், பெப் 10

புத்தூர், நவக்கிரிப் பகுதியில் இடம்பெற்ற நிலவெடிப்புத் தொடர்பான இரண்டாம் கட்ட ஆய்வுக்காக இடர் முகாமைத்துவ அமைச்சின் தேசிய கட்டட ஆய்வு நிறுவன அதிகாரிகள் குழு அடுத்த வாரம் இங்கு வருகை தரவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தூர், நவக்கிரிப் பகுதியில் கடந்த மாதம் இடம்பெற்ற நிலவெடிப்புத் தொடர்பான ஆரம்ப கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் அடிப்படையில் குறித்த பிரதேசத்தில் இரண்டாம்கட்ட ஆய்வுக்காக இடர் முகாமைத்துவ அமைச்சின் தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தினர் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தந்து ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் குறித்த பகுதியின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சகல விதமான ஆய்வுகளும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு மேற்கொள்ளப்படும் ஆய்வின் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றதும் அவை தொடர்பில் உடனுக்குடன் அறியத் தரப்படும்- என்றார். (த-101)


## வேலையாள்கள் தேவை

வடமாகாணத்தில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.

01. கணிய அளவீட்டாளர் (QS)
Nct அல்லது அதற்கு சமமான தகைமையுடைய Excelமற்றும் Bill செய்ய தெரிந்தவர்களிடம் இருந்து தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.
வேலை அமைவிடம் யாழ் மாவட்டமாகவே அமையும்.
02. Exchauater/Bobcat Operater
மேற்குறிப்பிட்ட இயந்திரங்களை இயங்குவதில் 2 வருட அனுபவம் குறைந்த தகைமையாக எதிர்பார்க்கப்படுகின்றது.
03. மேசன் மற்றும் கூலியாள்கள்.

தொடர்பு : முகாமையாளர்
076 824 5454, 076 824 5456
தரங்கினி இஞ்சினியரிங்





யாழ். இந்திய துணைத் தூதுவராலயத்தின்
அனுசரணையில் வட இலங்கைச் சங்கீத சபை வழங்கும்
**சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்**
**169** ஆவது இசை ஆராதனை - 2016
காலம்: நிகழும் மன்மத ஆண்டு மாசித் திங்கள் முதலாம்
நாள் 13.02.2016 சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை
இடம்: வட இலங்கைச் சங்கீத சபை தற்பரானந்தன் அரங்கு மருதனார் மடம்
தலைவர்: திரு.ந.தெய்வேந்திரராஜா அவர்கள்
யாழ். வலயக்கல்விப் பணிப்பாளரும்
வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்
பிரதம விருந்தினர்: கௌரவ A. நடராஜன் அவர்கள்
யாழ். இந்தியத் துணைத் தூதுவர்
சிறப்பு விருந்தினர்: திரு. இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
வட இலங்கைச் சங்கீத சபை, மருதனார்மடம்.
சி.சிவராஜன் செயலாளர்



**வீட்டுப் பணிப்பெண் தேவை**
வீட்டைப் பராமரிப்பதற்கும்
குழந்தைகளைப் பராமரிப்பதற்கும்
யாழ் நகரில் வேலை செய்யக்கூடிய
வீட்டுப் பணிப்பெண் தேவை.
077 362 7055, 077 468 2951





- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)



**உடனடி வேலை வாய்ப்பு**
வலைப்பக்க வடிவமைப்பு.கிராபிக்ஸ் வேலைகள் ஓடியோ வீடியோ எடிட்டிங் தெரிந்தவர்கள் உடன் தேவை
(66802)(12.17.18.20)
**077 927 7080**

**வீடு வாடகைக்குத் தேவை**
பருத்தித்துறை வீதி. கோப்பாயிலும் கோயில் வீதி. நல்லூர் மற்றும் காரைநகர் வீதி. சங்கானை ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.
(6/29056)(12.18.20)
077 362 7055, 077 468 2951

**தேவை**
நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு சமையல் செய்வதற்கு பெண் தேவை.
தொடர்பு: 075 991 0060

**வேலைக்கு ஆள் தேவை**
தட்டாதெரு சந்தியிலுள்ள எமது கடைக்கு ஆண்/பெண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 075 991 0060

**நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம்(வ/து)**
ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி
**வெற்றுப்பொருள் விற்பனைக்கு**
எமது சங்கத்தின் வெற்று சாக்கு,உரப்பை.பரல்.20 லீற்றர் கான் என்பன விற்பனைக்கு உள்ளன. தேவைப்படுவோர் 15.02.2016 இற்கு முன் தங்கள் கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும்.
தொலை பேசி இல: 021 222 2143
**பொது முகாமையாளர்**
(6/29059)(12.18.20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேப்பாப்பிலவில்

கையளிக்க எடுக்கும் நடவடிக்கையையும் உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் மாகாண சபையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 45 ஆவது அமர்வு கைதடியில் அமைந்துள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது கேப்பாப்பிலவு தொடர்பான பிரேரணையை முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் முன்மொழிந்து உரையாற்றினார்.

அவர் அங்கு தெரிவிக்கையில், போர் நிறைவடைந்தும் ஆறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கேப்பாப்பிலவுமக்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படவில்லை. தமது மண்ணில் மீள் குடியேறும்படி வேண்டி நிற்கின்றார்கள். ஜனநாயக நாடு தானே என்று எண்ணி அறவழிப் போராட்டங்கள் பலநடத்திவிட்டார்கள். முன்னைய அரசும் கண்டுகொள்ளவில்லை. தற்போதைய நல் லாட்சி என்று சொல்லப்படும் ஆட்சியிலும் கண்டு கொள்ள வில்லை. அந்த மக்கள் கலங்குகின்றார்கள். குடியேற்றம் மட்டுமல்ல பிரதான பாதையையும் மூடி வைத்துள்ளார்கள். அடர்ந்த காட்டின் வழியே பாதுகாப்பற்ற இடத்தில் பாதை அமைத்து நாளாந்தம் மக்கள் பயந்த நிலையில் பயணிக்கின்றார்கள். தனியாக பெண்கள் செல் வதற்கு அச்சப்படுகின்றார்கள். துணையுடன் செல்ல வேண்டிய நிலைமை உள்ளது. முக்கால் கிலோ மீற்றர் நேரிய பாதையை மூடிவிட்டு மூன்று கிலோ மீற்றர் பாதையைச் சுற்ற வைக்கின்றனர். பாதையைத் திறந்து நல்லெண்ணத்தைக் காட்டி குடியிருப்புக் காணிகளையும் விடுவித்து அந்த மக்களைச் சொந்த இடத்தில் மீள்குடியேற்றவேண்டும். கடந்த வாரம் அந்த மக்கள் என்னை அழைத்து தாங்கள் உண்ணாவிரதம் இருப்பதே இறுதி முயற்சி எனவும் படிப்படியாக தங்களை மாய்த்து கொள்வதே இறுதி முடிவு என்கிறார்கள். அவர்களின் மண்பற்றுதனைப் பாராட்டி அவசர முடிவு எடுக்கவேண்டாம். உங்களு டைய நியாயமான இந்தக் கோரிக்கைகளை வடக்குமாகாண சபை அமர்வில் கொண்டு வருகின்றேன் என்று ஆறுதல் கூறினேன். மாற்று இடத்தில் தற்காலிகமாகக் குடியிருத்திவிட்டு அந்த மக்களை இன்றுவரை ஏமாற்றிக்கொண்டு இருக்கின்றார்கள். அந்த மக்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற முதலமைச்சர் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

இந்தப் பிரேரணையை பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனிஜெகநாதன் வழிமொழிந்தார். இதன் போது அவர் கருத்துத் தெரிவிக்கையில், மக்களை ஏமாற்றக் கூடாது. அந்தக் காணிகள் இராணுவத்தினரால் விடுவிக்க முடியாது என்றால், அந்த மக்களுக்கு மாற்றுக் காணிகளையும் நட்டஈட்டையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பில் முதலமைச்சர் உடனடியாக, ஜனாதிபதி - பிரதமருடன் பேசவேண் டும்-என்றார்.

இதனைத் தொடர்ந்து, மன்னார் மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் சிராய்வாவினால் பொது முக்கி யத்துவம் வாய்ந்த பிரேரணை கொண்டு வரப்பட்டது. பேசாலையில் அமைந்துள்ள இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 12 ஏக்கர் காணியில் 2010 ஆம் ஆண்டு இராணுவத்தினர் முகாம் அமைத்தனர். தற்போது அந்தக் காணியை, நிரந்தரமாக இராணுவத்தினருக்கு கையளிக்க கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் இன்று (நேற்று) மன்னாருக்கு வருகைதந்துள்ளார். இந்த விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்து இராணுவத்தினருக்கு கையளிப்பதை தடுக்க வேண்டும் - என்று கோரிக்கை விடுத்தார். (த-5-ரி5)

## அரசியல்

நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள- காரணமின்றிப் பொய்க்குற்றச்சாட்டின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் ஏதோவொரு ஒழுங்கில் விரைவில் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதில் எனக்குக் கருத்து வேறுபாடில்லை. ஆகவே, அவர்களின் விடுதலை தொடர்பில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வாக்குறுதியளித்தார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணை யாளர் அல் - ஹுசேன்.

பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று கூட்டமைப்பினர் கூறினர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உதயனிடம் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகளைப் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்க முடியாது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட கருத்து அவருடைய கருத்தாகும். சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் அந்தக் கருத்தை அவர் வெளியிட்டிருக் கின்றார். பொதுமன்னிப்பின் அடிப்படையில்தான் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டியதேவை யில்லை. அவர்களை விடுவிப்பதற்கு வேறு பல ஒழுங்குகள் காணப்படுகின்றன.

நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள - காரணமின்றிப் பொய்க் குற்றச்சாட்டின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் ஏதோவொரு ஒழுங்கில் விரைவில் விடுவிக்கப் படவேண்டும் என்பதில் அவர் உறுதியாக உள்ளார் - என்றார். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவிக்கையில், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக் கிடையாது என்பதை நாம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடத்தில் வலியுறுத்தியபோது அவ்விடயம் தொடர்பில் தனது நிலைப்பாட்டை அவர் தெளிவாக விளங்கப்படுத்தினார். சர்வதேச சட்டத்தின் பிரகாரம் போர்க் குற்றம் செய்தோர் தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், தமிழ் அரசியல் கைதிகளுக் குப் பொதுமன்னிப்பு வழங்கப் படவேண்டும் எனக் கோரு வது பொருத்தமற்ற விடயம். ஆனால், பயங்கரவாதச் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள் ளவர்கள், தவறான தீர்ப்பு வழங்கப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதில் தனக்குக் கருத்து வேறு பாடில்லை என்று அவர் கூறினார். ஆகவே, அவர்களின் விடுதலை தொடர்பில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப் பேன் என்று அவர் எமக்கு வாக்குறுதியளித்தார் -என்றார். (த-சி)

## சர்வதேசக்

யுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர்க்குற்ற விசாரணைகளின் போது சர்வதேச கண்காணிப் பாளர்களின் பங்களிப்பும், ஆலோ சனைகளும் அவசியமானது. இராணுவத்தினருக்கு எதிராகத் தற் போது பல குற்றச்சாட்டுக்களும், சந்தேகங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு வெளிப்படையான விசாரணைகள் அவசியம். எனவே இறுதிக்கட்டப்போரின்போது இராணுவத்தினருக்குக் கட்டளை பிறப்பித்தவன் என்ற வகையில் அந்த இராணுவத்தினரைக் குறித்த குற்றச்சாட்டுக்களில் இருந்து மட்டுமல்லாது அவர்களுடைய கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டிய கடமை எனக்கு உள்ளது.

எனவே போர்க்குற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படும்போது சர்வதேசக் கண்காணிப்பாளர்களு டைய பங்களிப்புடனும், ஆலோச னைகளுடனும் நடைபெற்றாலே அது நம்பகத் தன்மை வாய்ந்தாக அமை யும். இதுவே எனது நிலைப்பாடு.

தற்போது உள்ள புதிய அரசின் நல்லாட்சியைச் சீர்குலைப்பதற்கு ஒரு குழு முயற்சித்து வருகின்றது. அந்தச்சதி முயற்சிகளைத் தோற்கடித்து நல்லாட்சியைப் பாதுகாப்பதற்கு முழுப் பங்களிப்புடன் செயற்படுவேன். எனக்கு விரைவில் அமைச்சு பதவி வழங்க உள்ளதாக ஜனாதிபதியும், பிரதமரும் தெரிவித்திருக்கின்றார்கள். அது கிடைக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

கடந்த 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி என்னை சிறையிலே அடைத்தார்கள். அதே மாதம் அதே திகதியில் எனக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குச் சிபார்சு செய்த தகவல் வெளிவந்துள்ளது - என்றார்.

இதேவேளை, ஜனநாயகக்கட்சியின் தலைவரான முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நேற்றுப் பதவியேற்றுக் கொண்டார்.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. இதன் போதே சபாநாயகர் முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கையில் பீல்ட் மார்ஷல் பட்டம் பெற்ற முதலாவது இராணுவத் தளபதி பொன்சேகா ஆவார். பீல்ட் மார்ஷல் பதவி பெற்ற ஒருவர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான முதல் சந்தர்ப்பம் இதுவாகும். (த-5-21)


சொலெக்ஸ்
நீர் பம்பிகள்
உயர்ந்த நம்பிக்கையான


ரூபா.8450/- முதல்...
0773 658869
விற்பனைப் பிரிவு - அவசர தொடர்புகளுக்கு
சொலேக்ஸ் வரையறுக்கப்பட்ட இஞ்சினியரிங் தனியார் கம்பனி
இல. 39, புதிய நகே வீதி, பேலியகொடை, இலங்கை.

இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்
செபஸ்ரியன் நிறஞ்சினி தம்பதியரின்
செல்வப்புதல்வன்
ஸ்மீபன் (கிளின்ரன்)



தனது இரண்டாவது
பிறந்தநாளை
10.02.2016 புதன்கிழமை தனது
இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அப்பையா, அம்மம்மா ஜேர்மனியில் வசிக்கும் பெரியமாமா, மாமி, மச்சான்மார், மச்சாள், ஆசை மாமா, மாமி, குட்டி மாமா, லண்டனில் வசிக்கும் சின்ன மாமா, மாமி, தொட்டப்பா, தொட்டம்மா, மச்சாள்மாரும், பெரியம்மா, பெரியப்பா, அக்கா, அண்ணா மற்றும் பிரான்சில் வசிக்கும் சித்தப்பா, சித்தி முல்லைத்தீவில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, பெரிய அத்தை, சின்ன அத்தை, மாமா, மச்சான், சித்தப்பாமார்கள் அனைவரும் குழந்தை யேசு துணை கொண்டு ஸ்மீபனை பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.
அ.க. புஸ்பராசா செல்வராணி தம்பதிகள்
159, குருசோர் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(68260) (13.12.15.16)


இணுவில் திருப்பதி
அருள்மிகு ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலயம்
ஸ்ரீ சனீஸ்வர பகவான் பிரதிஷ்டா
மகா கும்பாபிஷேகம்
அடியார்களே !
இணுவில் கிராமத்தில் விஸ்வரூபமாக எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் திருவேங்கடேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் மாமல்லபுரத்தில் இருந்து தருவிக்கப்பட்ட மூன்றரை அடி உயரமான சனீஸ்வர பகவான் பிரதிஷ்டை செய்யப்பட்டு 12.02.2016 வெள்ளிக்கிழமை காலை 08.30 மணியளவில் திருமுழுக்கு நடைபெற இறை அருள் கைகூடியுள்ளது.
இந்தியாவில் திருநள்ளாறில் இருந்து தருவிக்கப்பட்ட தீர்த்தத்தை சங்கமித்த, நளபுஸ்பகரணி என்ற தீர்த்த நிலையில் நீராடி சனீஸ்வரனைவணங்கி கிரக தோஷத்தை நிவர்த்தி செய்ய வேங்கடேஸ்வரப்பெருமான் அருள்புரிந்திருக்கின்றார்.

கிரியைகள் ஆரம்பம்
10.02.2016 புதன்கிழமை
எண்ணெய்க்காப்பு
11.02.2016 வியாழக்கிழமை காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணி வரை
மகா கும்பாபிஷேகம்
12.02.2016 வெள்ளிக்கிழமை காலை 08.30 மணி
தர்மகர்த்தா
உபயகாரர்
www.inuvilthirupathi.org
Tel: 021 224 2300

யாழ் வணிகர் கழகம்
வருடாந்த பொதுக்கூட்டம்
2016 ஆம் வருடத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளன.
திகதி : 12.03.2016 சனிக்கிழமை
நேரம்: காலை 9.30 மணி
இடம்: யாழ். வணிகர் கழக மண்டபம்
165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
செயலாளர்
யாழ் வணிகர் கழகம்
(அ)29080(12.15.25)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோ.சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 10

வதிரி, கரவெட்டியில் வீடு ஒன்றுக்கு முன் பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக் கிள் ஒன்று நேற்றுமுன்தினமிரவு திருடப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சுமார் 1லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளே திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவித்த நெல்லியடி குற்றத்தடுப்புப் பொலிஸார் அது தொடர் பில் விசாரணைகளை முன்னெடுத்துள் ளதாகவும் தெரிவித்தனர்.

(த-4-107)


## கும்பாபிஷேகம்

காரைநகர் வாரி வளவு கற்பக விநாயகர் ஆலய மகா கும்பாபி ஷேகம் நாளை மறுதினம் வெள் ளிக்கிழமை காலை இடம்பெற வுள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியை கள் கடந்த சனிக் கிழமை ஆரம்ப மாகி நடைபெற்று வருகின்றன. பக் தர்கள் எண் ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு நாளை வியாழக் கிழமை இடம் பெற்று மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கோபுர கும்பாபி ஷேகமும் தொடர்ந்து மகா கும்பாபிஷேக மும் நடைபெற வுள்ளது.(த-250)


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 . 10 . 1944



மறைவு
30 . 01 . 2006

யாழ்ப்பாணம் முருகன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் பொன்னுத்துரை அரியரட்ணம்

(ஓய்வுபெற்ற வலிகிழக்கு பிரதேசசபை உரும்பிராய் உப அலுவலகம்)

திதி: 10.02.2016

ஆண்டுகள் பத்து ஆகிவிட்டாலும் - உங்களை எம்மால் மறக்க முடியவில்லையே - அப்பா
முப்பது வருட காலத் திருமண வாழ்வு முப்பது நாள்கள் போல் ஓடி மறைந்தது
உங்கள் அன்பினால் தான் உங்களது கடமைகள் அனைத்தையும் முடித்துவிட்டு
நிம்மதியாக வானுலகம் சென்றுவிட்டீர்களே- அப்பா
ஆனால் எமது பணிவிடைகளை உங்களுக்குச்
செய்வதற்குப் போதிய காலம் தரவில்லையே
நீங்கள் கூறிய புத்திமதிகளும் கதைகளும் இன்றும்
எம் வாழ்வில் நாம் கடைப்பிடிக்கும் பழக்கங்கள்
ஒளிமயமான எதிர்காலம் தெரிகின்றது எனக்கூறும் நீங்கள்
ஒளிமயமான வாழ்க்கையை நீண்டகாலம் வாழ்வதற்கு ஆண்டவன் இடம் தரவில்லையே
மனைவி, பிள்ளைகளாகிய எம்முடன் உங்கள் முகம் தெரியாத
பேரப்பிள்ளையும் கலங்கித் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

95/32, முதலாம் ஒழுங்கை,
தேவாலய வீதி, வேப்பங்குளம்,
வவுனியா.

மனைவி, மகன்மார்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(68203)(11,18,20)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20 . 08 . 1945



மறைவு
22 . 01 . 2015

### திருமதி அன்ரனிபற்றிக் பர்மாராணி(சந்திரா)

கணங்கள் நிமிடமாகி நிமிடங்கள் மணியாகி
மணிகள் நாளாகி நாள்கள் முந்நூற்றி அறுபத்தைந்தாகி
அம்மா உன் நினைவலைகள் நெஞ்சில் வந்து மோதுதம்மா
பிள்ளைகள் எங்களுக்காய் சிறப்பார்ந்த
வாழ்வு தந்தே பார்போற்றும் உத்தமியாய்
இறைபதம் சேர்ந்தீரோ தெய்வமே !!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (2016.02.10) புதன்கிழமை 43, கலட்டி அம்மன் வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள மகனின் இல்லத்தில் மு.ப 11.00மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இடம் பெறும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

43, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
மகன் - பிறேம்குமார்(அப்பலோ)
077 684 9006

(68773) (14,18,20)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

குணக்குன்றாகவும் மனித நேயத்தின் இமயமாகவும்
உயர்ந்து நின்ற மாமனிதர்

### அமரர் லயன் கனகசபை உருத்திரகுமாரன்

(BA, MA PGDE SLTS -1 அகில இலங்கை சமாதான நீதிவான், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் - தீவகம்)

அவர்களின் கண்ணீரால் கரைந்த
ஆண்டொன்று

தாயின் மடியில்
10.12.1955

அம்பாள் பாதத்தில்
22.01.2015



நல்லருள் நயினை அம்பாள் நற்பதியின்
கல்வியாளன் சொல் நயம் மிக்க கலைச்
சொற்பொழிவாளன் பைந்தமிழ் ஞானம் நிறை
பாவலன் பண்பாளன் கல்விப் பயணத்தில்
முப்பத்திநான்காண்டுகள் முழுமையாய்த்
தமிழ்ப் பணிக்காய் அர்ப்பணித்த நல்லாசான்
முப்பதாண்டுகள் சீரும் சிறப்பாய் வாழவைத்த
அன்புத் தெய்வம் முப்பது நிமிடத்தில் எங்களை
பரிதவிக்கவிட்டு அம்பாளிடம் சென்றீரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல அம்பாளை வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி - சுபோதினி
கௌரிசங்கர் (மகன் - பிரான்ஸ்)
அபிராமி (மகள் -அமெரிக்கா).
சஞ்சீவன் (மருமகன்-அமெரிக்கா). குடும்பத்தினர்
ஜோதிவாசா, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(68730)(1,17,18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவிச்சை நாச்சியார் ஆற்றுப் பாலத்தை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு, பெப்.10
முல்லைத்தீவு குருவிச்சை நாச்சியார் ஆற்றின் பாலம் திருத்தப்படாது உள்ளதால் ஆற்றங்கரை அருகே 225 ஏக்கரில் விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகள் குறித்த ஆற்றை கடந்து தங்களுடைய நெல் உற்பத்தியை கொண்டுவருவதிலும், வயலுக்குச் செல்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று காதலியார் சம்மளங்குளம் கிராம விவ சாயிகள் தெரிவித்தனர்.
பாலத்தைப் புனரமைத்து விவசாய நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட காதலியார் சம்மளங்குளம் கிராம மக்களுடன் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து. ரவிகரன் மேற்கொண்ட மக்கள் குறைகேள் சந்திப்பிலேயே அந்த மக்கள் இவ்வாறு கோரிக்கையை முன்வைத்தனர்.
முல்லைத்தீவு குருவிச்சை நாச்சியார் ஆற்றங்கரையை அண்டிய பகுதியில் காதலியார் சம்மளங்குளம் கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் 225 ஏக்கரில் விவசாயத்தை மேற்கொள்கின்றனர். விவசாய நடவடிக்கையின் போது வயல் உழுவதானாலும், விதைப்பதானாலும், அறுவடையானாலும், அறுவடை செய்த நெல்லை வயலில் இருந்து வெளியே கொண்டு வருவதானாலும் சரி குறித்த ஆற்றின் பாலத்தின் ஊடாகவே கொண்டுவரமுடியும். ஆனால் குறித்த பாலம் நீண்ட காலமாகத் திருத்தப்படாது உள்ளது. அதனைத் திருத்தித் தரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அத்தோடு காதலியார் சம்மளங்குளம் புனரமைப்பு செய்யப்படாதுள்ளதுடன், கிராமத்தின் உள் வீதிகள் பலவும் திருத்தம் செய்யப் படாதுள்ளன. உயர்தர மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் இல்லாமை, பாடசாலையில் ஒலிபெருக்கி சாதனம் இல்லாமை என பல குறைபாடுகள் குறித்த கிராமத்தில் காணப்படுகின்றன. அவற்றையும் உரிய முறையில் சீர் செய்து தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
மக்களுடைய குறைகளைக் கேட்டறிந்த ரவிகரன் இது தொடர்பில் விவசாய அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என்று உறுதியளித்தார். உள்வீதிகள் தொடர்பாக பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ளும்படியும் உயர்தர, சாதாரண தரங்களில் கற்கும் ஐந்து மாணவர்களுக்கு மிதி வண்டிகளும் பாடசாலைக்கான ஒலி பெருக்கி சாதனமும் இவ் வருடத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் வழங்கப் படும் என்றும் குறிப்பிட்டார்.
ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட காதலியார் சம்மளங்குளம் கிராமத்தின் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த மக்கள் சந்திப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் மயூரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றிருந்தது. இந்த சந்திப்பில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர். (ற-21)





மட்டக்களப்பு - கொழும்பு புனானை வீதியில் நேற்று முன்தினம் தனியார் பஸ் ஒன்று 10 வயதுடைய யானையுடன் மோதியதில் யானை உயிரிழந்தது. குறித்த பஸ்ஸில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர். (ற-ஐ)

# சாரதி அனுமதிப் பத்திரத்தை வாங்கி கொடுக்க மறுக்கும் பொலிஸ் அலுவலர்

## புதிய சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பிக்குமாறு கூறுகின்றாராம்

சாவகச்சேரி,பெப்.10
பொதுமகனிடம் வாங்கிய சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள நான்கு தினங்களாக பொலிஸ் நிலையத்துக்கு அலைக்கழித்த பொலிஸ் உத்தியோகத்தர், புதிய சாரதிய அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பிக்குமாறும் அதற்கான செலவைத் தான் பொறுப் பேற்கிறேன் என்றும் கூறுகின்றார் என பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.
கடந்த வாரம் கைதடியில் உள்ள வயலில் இடம்பெறும் நெல் அறுவடையைப் பார்வையிட்டு வீடு திரும்பிய வேளையில் கைதடிச் சந்தியில் வாகனத்தில் நின்ற பொலிஸார் ( வீதிப் போக்குவரத்து பொலிஸார் அல்ல) ஆவணங்களைக் கோரியுள்ளனர்.
வாகன வரிப் பத்திரம் தவிர்ந்த ஏனையவற்றைப் பரிசோதித்த வேளையில் குறித்த வாகன வரிப் பத்திரம் வீட்டில் இருக்கின்றது என்று கூறியதால், அதனை எடுத்து வருமாறு கூறி, சாரதி அனுமதிப் பத்திரத்தை பொலிஸ் அலுவலரொருவர் வாங்கியுள்ளார்.
குறித்த நபர் வீட்டிலுள்ளோருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டதையடுத்து, 5 நிமிடத்தில் வாகன வரிப் பத்திரம் அந்த இடத்துக்குக் கொண்டு வரப்பட்டது.
அதனைப் பொலிஸ் அலுவலருக்கு காண்பித்து சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்குமாறு கேட்டபோது பொலிஸ் நிலையத்தில் வந்து பெறுமாறு கூறியுள்ளார்.
குறித்தநபர் மறுநாள் தொடக்கம் தொடர்ந்து 4 தினங்கள் பொலிஸ் நிலையத்துக்கு அலைந்த போதிலும், சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை. வேறு பொலிஸ் அலுவலரின் உதவியுடன் சாரதி அனுமதிப் பத்திரம் தொடர்பாக விசாரித்தபோது குறித்த சாரதி அனுமதிப் பத்திரம் தவறிவிட்டது எனவும், புதிய சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பிக்குமாறும் அதற்கான செலவைப் பொறுப்பேற்கின்றேன் என்றும் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
அரச பணியாளரான குறித்த நபர், சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாததால் தினமும் கடமைக்கு வேறு வாகனங்களில் செல்ல வேண்டியுள்ளது என்று விசனம் தெரிவித்துள்ளார். (ற-ஐ-9)

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு விதை வெங்காயம் வழங்கல்

யாழ்ப்பாணம், பெப்.10
அண்மையில் விடுவிக்கப் பட்ட பலாலி தெற்கு மற்றும் கிழக்கில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு விதை வெங்காயம் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளது.
குறித்த பகுதிகள் விடுவிக்கப்பட்ட பின்னர் அங்கு மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். இவர்களின் தொழில் விவசாய நடவடிக்கைக்கு ஏதுவாக இந்த விதை வெங்காயம் வழங்கப்பட்டுள்ளன.
மீள்குடியமர்ந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட 28 பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டன. விவசாய ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ்ஒருகுடும்பத்துக்குத்தலா 10 பை விதை வெங்காயம் அவ்வாறு வழங்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-4,107)

# ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 39 ஆவது சிரார்த்த தினம்

யாழ்ப்பாணம்,பெப்.10
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 39 ஆவது சிரார்த்த தினம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழில் கடைப்பிடிக் கப்பட்டது.
யாழ். குருநகர் கடற்கரை வீதியில்அமைந்துள்ளஅன்னாரதுஉருவச் சிலைக்கு முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மலர் மாலை அணிவித்ததுடன், மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.
அதன் பின்னர், முன்னாள் நாடளுமன்ற உறுப் பினர் சிறில்மற்றும்ஏனையஉறுப்பினர் களும் மலர்மாலை அணி வித்தும், மலர்தூவியும் அஞ்சலி செலுத்தினர்.
தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், உட்பட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (ற-ஐ-106)

## நிர்வாக சபைத்தெரிவு

வரணி கரம்பைக் குறிச்சி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம முன்னேற்றச் சங்கங்களின் நடப்பு வருட நிர்வாக சபைத் தெரிவு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர், பொருளாதார உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொள்வர். பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ற-ஐ-122)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.10
கலைஞர் வேல் ஆனந்தனின் 'ஆடல் உலகில் எனது சுவடுகள்' எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத் தூது மண்டபத்தில் குரு கோபிநாத் நினைவரங்கில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராசா தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை, பண் பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரத்தினம் ஆகியோரும், கௌரவ விருந்தினராக இசைச் சித்தர் கண்ணனும் கலந்து கொள்ளவுள் ளார்.
நூல் ஆய்வுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவார். உரும்பிராய் கலைக்கோயில் ஆடலகத்தின் ஆடலரங்கும் அதில் இடம்பெறும். (ற-ஐ-7)

## பொலிஸாருக்கு சாராயம் விற்பனை; இளைஞனுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், பெப்.10
சட்ட விரோதமாக சாராயம் வைத்திருந்து அதனைப் பொலிஸாருக்கே விற்றவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப் பட்டது.
வேலணைப் பகுதிய்யச் சேர்ந்த 25 வயதுடைய குறித்த நபரை ஊர்காவற்றுறைப்பொலிஸார் சாராயப் போத்தலுடன் கைது செய்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேக நபர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதன்பின்னர் இந்த அபராதம் விதிக்கப் பட்டது. (ற-ஐ-4,107)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# 23 கிராம சேவகர் பிரிவுகளில் எவருக்கும் சமுர்த்தி இல்லை

## முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் புள்ளி விவரங்களில் தகவல்

முல்லைத்தீவு, பெப்.10

முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட 23 கிராம சேவகர்கள் பிரிவுகளைக் கொண்ட 20 ஆயிரத்து 556 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை. சமுர்த்தி இறுதிப்பட்டியல் தயாரித்த காலப்பகுதியில் குறித்த பகுதிகளில் மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்படாதிருந்தமையே இதற்குக் காரணம்- என்று மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 136 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றில் கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட 23 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 20 ஆயிரத்து 556 குடும்பங்களில் இதுவரை ஒரு குடும்பத்துக்கேனும் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்துக் கேட்டபோதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேச செயலகத் தகவல்களின்படி- கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 13 ஆயிரத்து 743 குடும்பங்கள் வசித்து வருக்கின்றன. அவர்களில் 4 ஆயிரத்து 312 குடும்பங்கள் சமுர்த்தி பயனைப் பெற்றுக் கொள்கின்றன. ஆயினும் இந்தப்

> இறுதியாக 2012 ஆம் ஆண்டு சமுர்த்தி அனுமதிப் பட்டியல் கிடைத்தது. அதன் பிரகாரம் சமுர்த்தி நிவாரணம் விநியோகிக்கப்படுகின்றது.

பிரதேச செயலாளர் பிரிவில் 2002 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மீள் குடியமர அனுமதிக்கப்படாத 10 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 9 ஆயிரத்து 431 குடும்பங்களும், அதே போல் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 19 கிராம சேவகர் பிரிவுகளில் 12 ஆயிரத்து 566 குடும்பங்களும் வாழ்கின்றன. அவர்களில் 13 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 11ஆயிரத்து 125 குடும்பங்களுக்கு இன்று வரை சமுர்த்தி உதவிகள் வழங்கப்படவில்லை. மாவட்டத்தில் உள்ள ஏனைய கிராம சேவகர் பிரிவுகளில் ஒட்டுமொத்தமாக அனைவருக்கும் சமுர்த்தி உதவிகள் வழங்கப்படாவிடினும், ஒரு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள சனத்தொகையின் அரைவாசி மக்களேனும் சமுர்த்தி உதவியை பெற்றுக் கொள்கின்றனர். ஆனால், குறித்த 23 கிராம சேவகர் பிரிவுகளிலும் ஒருவருக்கும் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மொத்தமாக 41ஆயிரத்து 367 குடும்பங்கள் வாழ்கின்றபோதிலும், 11ஆயிரத்து 114 குடும்பங்களுக்கு மட்டுமே சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படுகின்றது. ஏனைய 23 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 20 ஆயிரத்து 556 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை. இது மாவட்டத்தின் மொத்த சனத்தொகையின் 26 வீதமாகும்.

இது குறித்து மாவட்ட அரச அதிபரிடம் கேட்டபோது-

இறுதியாக 2012ஆம் ஆண்டு சமுர்த்தி அனுமதிப் பட்டியல் கிடைத்தது. அதன் பிரகாரம் சமுர்த்தி நிவாரணம் விநியோகிக்கப்படுகின்றது. குறித்த காலத்தில் மேற்படி 23 கிராம சேவகர் பிரிவுகளும் மீள் குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்படாது இருந்த பகுதிகள் என்பதனால் குறித்த கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு இதுவரை சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை. இருப்பினும் எதிர்காலத்தில் இடம்பெறும் மீளாய்வின் விவரத்துக்கமைய சமுர்த்தி அதிகார சபையின் அனுமதியைப் பெற முயற்சிகள் மேற்கெள்ளப்படும் – என்றார். (ற-21,10)

# அரசமைப்பு கருத்தறியும் அமர்வு இன்று மன்னாரில் ஆரம்பிக்கிறது

## இருநாள்கள் நடைபெறும்

மன்னார்.பெப்.10

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்துக்காக நாடளாவிய ரீதியில் மக்கள் கருத்தறியும் விசேட அமர்வு, இன்றும் நாளையும் மன்னாரில் நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொண்டு பொதுமக்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் முன்வைக்குமாறு மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான மக்களுடைய கருத்துக்களை கேட்டறியும் இந்த விசேட அமர்வில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்கள், புத்திஜீவிகள், மதகுருமார்கள், தனி நபர்கள், எனப் பலரும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைக்க வேண்டியது தார்மீக கடைமையும்- பொறுப்பும்- உரிமையும் ஆகும்.

நாட்டில் ஆறு தசாப்தத்துக்கு மேற்பட்ட இன முரண்பாட்டை தீர்க்கக் கூடிய வழிவகையை ஏற்படுத்துவதற்கும், தமிழ் மக்கள் தமது சுய நிர்ணயத் தத்துவத்தின் அடிப்படையில் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யவும், நாட்டில் தனித்துவத்துடனும் சுய கௌரவத்துடனும் வாழ்வதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்துவதற்கும் எம்மாலான பங்களிப்பை நல்கும் பொருட்டு அனைத்துத்தரப்பினரும் பங்கேற்க வேண்டும்- என்று இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-ஐ-56)



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைமைச் செயலகம் நேற்று முன்தினம் திருகோணமலை நகரில் கட்சியின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனால் திறந்து வைக்கப்பட்டது. நேற்றைய 8 ஆம் பக்கத்தில் தொழில்நுட்ப தவறு காரணமாக குறித்த படத்துக்குப் பதிலாக வேறு படம் பிரசுரமாகியிருந்தது. தவறுக்கு வருந்துகின்றோம். (ற-ஐ-40)

# சிறுமி துஷ்பிரயோகம்; இருவர் விளக்க மறியலில்

வவுனியா, பெப்.10

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதின்ம வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்என்றுவவுனியாபொலிஸார் தெரிவித் துள்ளனர்.

குறித்த சிறுமியை வவுனியா காத்தார் சின்னக்குளம் பகுதியில் வசித்து வந்த 25 வயதுடைய இளைஞர் காதலித்து வந்துள்ளார் என்றும், இந்த நிலையில் நேற்றுமுன்தினம்சிறுமியை இளைஞனின் உறவினரின் வீட்டுக்கு அழைத்து துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியா பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் பெற்றோர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் குறித்த இளைஞனை கைது செய்ததுடன், சிறுமியைதுஷ்பிரயோகம்மேற்கொள்ள உடந்தையாக இடம் கொடுத்த இளைஞனின் உறவினரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் வவுனியா நீதிவான் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்ட போது அவர்களை 14 நாள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-4)

# பிராந்திய வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசியப் பொருள் வழங்கல்

வவுனியா. பெப்.10

சுவிசில் உள்ள புங்குடுதீவு மைந்தர்களின் உதவியால் வைத்தியசாலைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் இரண்டாவது கட்டமாக வவுனியா மாவட்ட பிராந்திய வைத்தியசாலைகளுக்கு கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, சுவிஸ் புங்குடுதீவு தாயகம் சமூக சேவை அகம் அமைப்பால் வவுனியா ஓமந்தை, நவ்வி (பாலமோட்டை), புளியங்குளம், நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைகளுக்குத்தேவையான பொருள்களே வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்த்தேசிய இளைஞர் கழகத்தின் தலை வர் சு.காண்டீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் பிரதம அதிதிகளாக வவுனியா நகரசபையின் முன்னாள் நகர பிதாவும், வட மாகாண சபை உறுப்பினருமான ஜி.ரி.லிங்கநாதன் மற்றும் வவு. நகரசபையின் முன்னாள் உப நகர பிதாவும், கழகத்தின் ஸ்தாபகருமான க.சந்திரகுலசிங்கம் ஆகியோர் பொருள்களைக் கையளித்தார்கள்.

இந்த நிகழ்வில் நவ்வி (பாலமோட்டை) பிராந்திய வைத்தியசாலையின் மருத்துவர் எஸ்.சூரியகுமார், ஓமந்தை பிராந்திய வைத்தியசாலையின் மருத்துவர் எஸ்.மதுரகன், நெடுங் கேணி பிராந்திய வைத்தியசாலையின் மருத்துவர் கே.முபாரிஸ், புளியங்குளம் பிராந்திய வைத்திய சாலையின் மருத்துவரும் தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் அமெரிக்க கிளை இணைப்பாளர் கோபி மோகன், கழகத்தின் உறுப்பினர்களான எஸ்.சுகந் தன் எஸ். கஜீரன், எஸ்.ஜனகன், பி.ஹரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-21)

# திறப்பு விழா

கரணவாய், பெப்.10

வடமராட்சி கல்வி வலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மேல்மாடிக் கட்டடத்தொகுதி நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் களான சு.சுகிர்தன், வே.சிவயோகன், எம்.கே. சிவாஜி லிங்கம், கே.தர்மலிங் கம் மற்றும் சி.அகிலதாஸ் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஐ-108)

# கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பெருமெடுப்பில் அன்னாசிச் செய்கை

## ஏற்றுமதி செய்யும் நிலைமை இன்னமும் ஈராண்டில் ஏற்படும்

கிளிநொச்சி, பெப்.10

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அன்னாசிப்பயிர்ச்செய்கை பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இன்னமும் இரண்டு மூன்று ஆண்டுகளில் பெருமளவாகப்பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யக்கூடியதாக இருக்கும். – இவ்வாறு வடமாகாண பிரதி விவசாய பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிய தொழில்நுட்பமாக, இளைய வளர்ப்பு வாழை இனங்களும் பயிரிடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் விவசாயம் சார்ந்த அபிவிருத்தி திட்டங்கள்பற்றித்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2015ஆம் ஆண்டின் புதிய முயற்சியாக விவசாய உற்பத்தியில் பல புதிய திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். ஏனைய மாவட்டங்களில் ஈர வலயங்களில் பயிர் செய்யப்படும் அன்னாசி கிளிநொச்சி மாவட்டத்திலேயும் தற்போது பயிரிடப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டம் வறண்ட இடமாக காணப்படுவதனால் இங்கு பயிரிடப்படும் அன்னாசி ஏனையவற்றில் இருந்து வித்தியாசமானதாகவும், நிறைந்த சுவையுடையதாகவும் காணப்படுகின்றது.

2015ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்தே இந்த அன்னாசிப்பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் பெரிய அளவில் இது பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யுமளவுக்கு வரும் என்ற நம்பிக்கை உள்ளது.

அத்தோடு இளைய வளர்ப்பு வாழை பயிர்ச்செய்கையும் முக்கியமாக தற்போது பயிரிடப்பட்டுள்ளது. இளைய வளர்ப்பின் மூலம் கிட்டத்தட்ட மிளகாய் கன்றினுடைய அளவு சிறிய கன்றுகளாக குறித்த வாழை இனங்கள் நடுகை பண்ணப்படுகின்றது. இந்த வாழை மரங்களில் இருந்து வருகின்ற வாழைப் பழங்களும் ஏனைய வாழைப்பழங்களுடன் ஒப்பிடும்போது வித்தியாசமாகக் காணப்படுகினறது. ஒரு வாழைக் குலையில் இருந்து வரும் வாழைப் பழங்கள் வாழை குலையின் மேலே பெரிதாகவும், கீழே சிறிதாகவும் காணப்படும். ஆனால் இந்த வாழை மரங்களில் இருந்து கிடைக்கும் வாழைப்பழங்கள் எல்லாம் ஒரே மாதிரியான அளவைக் கொண்டவையாகக் காணப்படும். குறித்த இளைய வளர்ப்பு வாழையின் மூலம் கிடைக்கும் வாழைப் பழங்களின் சந்தை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். – என்றார். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம். பெப்.10
ஈவினைப் பகுதியில் ஒரு போத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். அதேபகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
கசிப்பை விற்பனை செய்யும் நோக்கில் எடுத்துச் சென்றபோது, சிவில் உடையில்சென்றபொலிஸார், அவரை மறித்து சோதனையிட்ட போது கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த நபருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுஎன்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-ஜ-107)

# காணி வழங்கி 10 ஆண்டுகள்; தபால் நிலையம் கட்டவில்லை

## அச்சுவேலி மக்கள் விசனம்

அச்சுவேலி,பெப்.10
அச்சுவேலி தபால் நிலையக் கட்டடம் கட்டுவதற்கு பொதுமக்களின் நிதி உதவியுடன் காணி கொள்வனவு செய்யப்பட்டு 10 வருடங்கள் கடந்த நிலையிலும், எந்தவிதமான கட்டுமானங்களும் இன்றி பற்றைகள்,புதர்கள் மூடிய நிலையில் காணி உள்ளது என்று பொதுமக்கள் தெரி வித்துள்ளனர்.
அச்சுவேலியில் தபால் நிலையம் கட்டுவதற்கு காணி இல்லை எனத் தபால் திணைக்கள உயர்மட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு, அச்சுவேலி தபால் நிலைய அபிவிருத்திக்குழு பொதுமக்களிடம் நிதி சேகரித்து 5 பரப்புப் காணியை கொள்வனவு செய்து அஞ்சல் திணைக்களத்துக்குக் கையளித்திருந்தது.

> “2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பல லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இந்தக் காணியில் இதுவரையில் எந்தவிதமான கட்டுமானங்களும் மேற்கொள்ளப்படவில்லை.”

2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பல லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இந்தக் காணியில் இதுவரையில் எந்தவிதமான கட்டுமானங்களும் மேற்கொள்ளப்படவில்லை.
அச்சுவேலி-சங்கானை வீதியில் அச்சுவேலி எரிபொருள் நிலையத்துக்கு அருகில் உள்ள 5 பரப்புக் காணி, பத்துவருடங்களுக்குமேலாக தபால் நிலைய கட்டுமானங்களுக்காகக் காத்துக் கிடக்கின்றது.
இந்த நிலை, அதன் கொள்வனவுக்கு நிதி வழங்கிய பொதுமக்களை விசனம் அடையச் செய்துள்ளது.
இதுவரை காணி துப்புரவு செய்யப்படாத நிலையில், இது தபால் நிலையக் காணி என அடையாளம் எதுவும் இன்றி பற்றைகள் மூடிய நிலையில் காணப்படுகின்றது.
தபால் நிலையத்துக்கான கட்டுமானத்தை மேற்கொள்ளுமாறு பொது அமைப்புக்கள் மற்றும் அச்சுவேலி தபால் நிலைய அபிவிருத்திக் குழு என்பன காலத்துக்குக் காலம் வலியுறுத்தி வந்த போதிலும் இதுவரை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-11)

## வழிகாட்டல் வகுப்பு

கரணவாய்,பெப்.10
வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து கல்வி நிர்வாக சேவை மற்றும் இலங்கை நிர்வாக சேவை ஆகிய போட்டிப் பரீட்சை களுக்குத் தோற்றுவோருக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்பிரதி சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறவு ள்ளன.
பல்துறை சார்ந்த நிபுணர்களால்நடத்தப்படும் இந்த வழிகாட்டல் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும், பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளை இதில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ற-ஜ-108)

## வடமராட்சியில் தீர்த்த உற்சவம்

யாழ்ப்பாணம்,பெப்.10
மஹோதய புண்ணிய கால சமுத்திரத் தீர்த்த உற்சவங்கள் நேற்று முன் தினம் அதிகாலை கற்கோவளம் தொடக்கம் பருத்தித்துறை, சுப்பர்மடம், இன்பருட்டி, பொலிகண்டி, ஊறணி, வல்வெட்டித்துறை உள்ளிட்ட தொண்டமானாறுவரையிலான கடற்பகுதிகளில் சிறப்பாக நடைபெற்றன.
வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள 50க்கும் மேற்பட்ட ஆலயங்களிலிருந்து சுவாமிகள் சமுத்திரத் தீர்த்த உற்சவத்துக்காக பக்தர்கள் புடைசூழ எழுந்தருளியிருந்தனர்.
இந்த நன்னாள் 60 வருடத்துக்கு ஒருமுறை வரும் என்றும் தெரிவிக்கப் பட்டது. (ற-ஜ-173)

## மீள் திருத்தத்தில் மாணவி சித்தி

பளை,பெப்.10
கடந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு தொடர்பாக மீள் திருத்தத்துக்கு விண்ணப்பித்த மாணவிக்கு பரீட்சையில் வெட்டுப்புள்ளி சித்தி கிடைத்துள்ளதுடன், பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் எனவும் பரீட்சைகள் ஆணையாளரால் அறிவிக்கப் பட்டுள்ளது.
பளை இயக்கச்சி அ.த.க. பாடசாலை மாணவியான கார்த்திகேசு பாகினி என்ற மாணவி, புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி பரீட்சைப் பெறுபேறு 150 புள்ளிகள் பெற்றுள்ளார் என்று பெறுபேறுகள்வெளியாகியிருந்தன.
இந்த மாணவி வகுப்பில் கெட்டிக்காரி என்பதால் மீள் திருத்தத்துக்குப் பெற்றோர் விண்ணப்பித்திருந்தனர். மீள் திருத்தத்தின் போது இந்த மாணவி 152 புள்ளிகள் பெற்றுள்ளார் எனவும், பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார் எனவும் பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது என்று பாடசாலை அதிபர் திருமதி இ.விஜயநாதன் தெரிவித்தார்.
இந்தப் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று கிளிநொச்சி கல்வி வலயத்தில் 100 வீத சித்தி பெற்றுள்ளனர்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக் குத் தோற்றி கிடைத்த பெறுபேறுகளை மீள் திருத்தத்துக்கு விண்ணப்பித்த சில மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தி பெற்றுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளதுஎன்று தெரிவிக்கப்பட்டது.
விடைத்தாள்கள் திருத்துவோர் மற்றும் மேற் பார்வையாளர்கள்ஆகியோரின் கவனக் குறைவே இவ்வாறான தவறுகள் ஏற்படக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-9)



மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் 30 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. கல்லூரி அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோர் கட்டடத்தைத் திறந்து வைத்தனர். (ற-ஜ-9)

## டெங்குக் கட்டுப்பாட்டு வாரம்



யாழ்ப்பாணம்,பெப்.10
யாழ்.மாநகர சபையின் டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் நாளை 11 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 13 ஆம் திகதி சனிக் கிழமை வரை மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளது என்று யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.
குறித்த தினங்களில் எதிர்வரும்11ஆம் திகதிவியாழக் கிழமை பசார், ஜே/73, ஜே/74, ஜே/77 கிராமசேவகர் பகுதிகளிலும், மறுநாள் வெள்ளிக்கிழமை குருநகர் ஜே/68 , ஜே/70, ஜே/75 கிராம சேவகர் பகுதிகளிலும், எதிர்வரும் சனிக்கிழமை ஜே/104, ஜே/101, ஜே/102 கிராம சேவகர் பிரிவுகளிலும்களத் தரிசிப்பு நடைபெறவுள்ளதுடன், டெங்கு பரவுவதற்கு சாதகமான நிலமைகள் காணப் படும் பகுதிகளுக்கு உரித்துடையவர்கள் மீது கடுமையான சட்டநடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்றும்யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (ற-ஜ-ரி5)

## உணவகப் பணியாளர்கள் சீருடை அணிவது கட்டாயம்

யாழ்ப்பாணம்,பெப்.10
யாழ்.நகரில் உள்ள உணவகங்களில் பணியாற்றும் பணியாளர்கள் கட்டாயம் சீருடை அணிந்து தான் பணியாற்ற வேண்டும். இந்த நடைமுறை ஏற்கனவே உள்ள போதும், தற் போது கட்டாயமாக்கப் பட்டுள் ளதால் அதனை மீறும் உணவக உரிமையாளர்கள் மீதுஇனி வழக்குத் தொடரப் படும் எனச் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.
குறிப்பாக உணவு பரிமாறுவோர் தலைக்குத் தொப்பியும் கைக்குக் கையுறை அணிவதும் கட்டாயப்படுத்தப் பட்டுள்ளது. இந்தச் சுகாதார நடைமுறையை உணவகங்கள் கண்டிப்பாக நடைமுறைப் படுத்திப் பின்பற்ற வேண்டும்.
ஏற்கனவே உள்ள இந்த நடைமுறையைஅநேகமானஉணவகங்கள் பின்பற்றுவதில்லை.
சுகாதார நடைமுறைக்கு ஏற்ற வகையில் இந்த நடைமுறையைப் பின்பற்றாத உணவகங்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச்சுகாதார பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார்.
உணவகங்கள் மீது மேற் கொள்ளப்படும்திடீர்சோதனை நடவடிக்கையின்போது மேற்படி சுகாதார நடைமுறை அவதானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-17)

## கட்டடத் திறப்பு விழா

புற்றளை மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.
வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறும் [illegible] வலயக் கல்விப் [illegible] சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், க.தர்மலிங்கம், வே.சிவ யோகன் மற்றும் எம்.கே.சிவாஜி லிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ-108)

## திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 10
திருமறைக் கலாமன்றத்தால் வருடம் தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பைச் சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்துக்காக பிரதி வழங்கும் நிகழ்வு தவக் காலத்தின் ஆரம்ப நாளாகிய இன்று புதன் கிழமை மாலை 5 மணிக்கு மன்றத்தின் கலைத் தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை அருள் பணி.ஜே.பி.அன்ரனிதாஸ் அடிகளார் கலந்து கொண்டு இந்த ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள் உட்பட ஏனைய துறைசார்ந்த பிரிவுகளுக்கான பிரதிகளை வழங்கவுள்ளார்.
வழமையாக இதில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், இந்த முறை புதிதாக இணைந்து பங்குபற்ற விருப்பமுடையவர் களையும் இதில் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.
திருப்பாடுகளின் நாடகம் எதிர்வரும் மார்ச் மாதம் 17,18,19,20 ஆம் திகதிகளில் மாலை 6.45 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கிலும், மார்ச் மாதம் 5 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு இளவாலை திருமறைக் கலாமன்ற அரங்கிலும் மேடையேற்றப்படவுள்ளது.
'வேள்வித் திருமகன்' என்னும் பெயரில் 2012, 2014 ஆம் ஆண்டுகளில் மேடையேற்றப்பட்டு மிகுந்த வரவேற்பைப் பெற்ற திருப்பாடுகளின் நாடகமே இந்தமுறையும் மேடையேற்றப் படவுள்ளது. (ற-ஜ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹுசேனின் இலங்கை வருகை மிகப்பெரும் வேடிக்கையானது

## சாடுகின்றார் கோத்தபாய



கொழும்பு, பெப் 10
ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் இலங்கைப் பயணத்தை மிகப்பெரும் வேடிக்கை என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச வர்ணித்துள்ளார்.

போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு எதிரான கையெழுத்துகளைச் சேகரிக்கும் போராட்டத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து நேற்று முன் தினம் ஆரம்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஹுசேன் இளவரசர் இலங்கையில் வாழவில்லை. அவர் வெளிநாட்டைச் சேர்ந்தவர். இந்த நிலையில், ஒருநாளில் அவரால் இங்கு எதைப் பார்த்து உணர முடியும். ஒரு தரப்பினரே அவரைச் சந்திக்கின்றனர். அதுவும் பேசுவதற்கு நன்று பயிற்சியளிக்கப்பட்டவர்களையே சந்திக்கிறார். இவர்களை சந்திப்பதன் மூலம் இலங்கையில் நடப்பவற்றை அறியமுடியுமா? இது மிகப்பெரிய நகைச் சுவை- என்றார். (த-சி)

# வித்தியா கொலை விசாரணை 19 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

## எந்தவித அறிக்கைகளும் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், பெப் 10
புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட வழக்கில், மரபணு உள்ளிட்ட எந்த அறிக்கைகளும் கிடைக்கப்பெறாத நிலையில் வழக்கு எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவில் பாடசாலை சென்று கொண்டிருந்தபோது மாணவியான வித்தியா கடத்தப்பட்டுக் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டிருந்தார்.

அந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் பதில் நீதிவான் இ.சபேசன் முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபர்கள் 10 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கு விசாரணை முடியவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

மாணவியின் பரிசோதனை அறிக்கைகள் எதுவும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த நிலையில் வழக்கு மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வழக்குடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டி சந்தேக நபர்களாக பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் ஆகியோர் முதலில் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் சந்தேக நபர்களாக மகாலிங்கம் சசீந்திரன், தில்லைநாதன் சந்திர காசன், சிவதேவன் துரந்தன், பஜிரு பசிங்கம் குகநாதன், ஜெயதரன் கோகுலன், மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இறுதியாக பியவர்த்தன ராஜ்குமார் கைது செய்யப்பட்டிருந்தார். அவர்களில் 3 சந்தேக நபர்கள் விசாரணைக்காக மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (த-4)

# பொலிஸ் அதிகாரிக்கு எதிரான ஆரம்ப விசாரணைகள் நிறைவு

## பொய் முறைப்பாட்டின் அடிப்படையில் சிறுமியைப் பொலிசுக்கு அழைத்தமை குறித்து

யாழ்ப்பாணம், பெப். 10
சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக வழங்கப்பட்ட பொய் முறைப்பாட்டை ஆராயாமல் சிறுமியைப் பொலிஸ் நிலையத்துக்கும் பின்னர் வைத்திய சாலைக்கும் கொண்டு சென்றமை தொடர்பாக பொலிஸ் அதிகாரிக்கு எதிரான ஆரம்ப விசாரணை நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது பற்றிய மேலதிக நடவடிக்கைக்காக விசாரணை அறிக்கைகள் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

பாடசாலை செல்லும் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகிவருவதாக இரண்டு பேர் பொய்யான முறைப்பாடு ஒன்றைப் பொலிஸாருக்கு வழங்கியுள்ளனர்.

ஆனால் அந்த முறைப்பாடு தொடர்பில் ஆரம்ப ஆதாரங்கள்கூட எதுவுமே இல்லாத நிலையிலும், அந்த மாணவியைப் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்திருந்ததோடு, பின்னர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சட்ட வைத்தியப்பரிசோதனைக்கும் உட்படுத்தியுள்ளனர். அதன்போது மாணவி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படவில்லை என்பது தெரிய வந்தது. அதனால் அந்த விடயத்தைப் பெரிதுபடுத்தாது விடுமாறு அச்சுவேலிப் பொலிஸார் கூறியுள்ளனர்.

ஆனால் அந்தச் சம்பவம் மாணவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்து பொலிஸாரின் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட அந்தச் சிறுமியின் குடும்பம், மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்திருந்தது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக ஆரம்ப விசாரணைகள் நிறைவடைந்து, மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் இறுதிக்கட்ட விசாரணைகளுக்காகச் சிறுமியின் வாக்குமூலம் கடந்த வாரம் பெறப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

கடந்த வருடம் மே மாதம் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமி தொடர்பில் இரண்டு பேர் தொடர்ச்சியாக அவதூறான கதைகளைப் பரப்பிவந்துள்ளனர். அங்குள்ள வியாபாரி ஒருவர் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்வதாகத் தொடர்புபடுத்திக் குற்றம் சுமத்திவந்துள்ளனர். பின்னர் அச்சுவேலி பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனால் மேலதிக விவரங்கள் எதனையும் கவனத்தில் கொள்ளாது பொலிஸார் சம்பந்தப்பட்ட மாணவி உள்ளிட்டவர்களை பொலிஸ் நிலையத்துக்கும் பின்னர் வைத்தியசாலைக்கும் கொண்டு சென்றுள்ளனர்.

ஆனால் அவ்வாறான சம்பவம் எதுவும் நடக்காததனால் அச்சுவேலி பொலிஸாருக்கு எதிராக அந்த விடயம் வழக்காக மாறிவிட்டது. அந்த விடயத்தைப் பொலிஸார் சிறுவர் நீதிமன்றிற்கும் அறிக்கையிட்டிருக்கவில்லை.

இந்தப் பொய்முறைப்பாட்டை நிரூபிக்கும் வகையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த மதகுரு ஒருவரும் பொய்யான கடிதத்தை வழங்கியுள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்த நிலையில், மதகுருவின் கடிதம் உள்ளிட்ட பல முறைப்பாடுகளும், பாதிக்கப் பட்டவர்களது முறைப்பாடுகளும் விசாரணை செய்யப்பட்டுள்ளன என்றும், ஆரம்ப விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்றும் கனகராஜ் தெரிவித்தார்.

அவைபற்றியமேலதிக நடவடிக்கைக்காக விசாரணை அறிக்கைகள் தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகஅவர் மேலும் தெரிவித்தார். (த-4-107)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26 வருடங்களுக்குப் பின்னர் பலாலியில் சடலம் புதைப்பு

யாழ்ப்பாணம். பெப். 10

பலாலி வடக்கு அன்ரனிபுரம் பகுதி கடந்த வருடம் விடுவிக்கப்பட்டதை அடுத்து, அந்தப் பகுதியைச் சேர்ந்த பூர்வீகக் குடியிருப்பாளர் ஒருவரின் இறுதிச் சடங்கு 26 வருடங்களின் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு இடம்பெற் றுள்ளது.

பலாலி வடக்கு பகுதியைப் பூர்வீகமாகக் கொண்ட குடியிருப் பாளர்கள் தற் போது பொலிகண்டி மற்றும் திக்கம் பகுதிகளில் வசித்து வருகின்றனர். அப்பகுதியைச் சேர்ந்த கீதபொன்கலன் மரிய யூட் என்ற இளைஞர் கடந்த சில நாள்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.

அவர் கடந்த வெள்ளிக்கிழமை உயிரி ழந்துள்ளார். இதனையடுத்து அவரது இறு திச் சடங்கைத் தமது சொந்த மண்ணில் செய்ய வேண்டும் என நினைத்த உறவினர்களால் பொலிகண்டிப் பகுதி யில் இருந்து பூதவுடல் பலாலி வடக்கு அன்ரனிபுரம் பகுதிக்கு எடுத்துச் செல் லப்பட்டது. பின்னர் கிறிஸ்தவ முறைப்படி அவரது இறுதிச் சடங்கு இடம்பெற்றது. இந்தச் சேமக்காலைக்கு அருகில் இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலய முன்னரங்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-107)

# இ.போ.ச. பஸ்கள் மீது தொடரும் கல் வீச்சு

யாழ்ப்பாணம், பெப். 10

இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்மீது நேற்றுமுன்தினம் இரவு வெவ் வேறு இடங்களில் கல் வீச்சுத் தாக்குதல் கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கோண்டாவில் சாலை முகாமையாளர் என்.குணபாலசிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத் தில் இருந்து வயாவிளான் சென்ற பஸ் மீது இரவு 9:30 மணியளவில் புன்னாலைக் கட்டுவன் சந்திப் பகுதியில் வைத்துத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் முன்பக்கக் கண் ணாடி உடைந்து சாரதி படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார். எஸ்.ஜெயசீலன் (வயது-42) என்பவரே காயங்களுக்கு உள்ளானவராவார்.

மற்றைய சம்பவம் உரும்பிராய் பகுதி யில் இரவு 10 மணியளவில் இடம்பெற் றுள்ளது. அங்கும் கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் பஸ்ஸின் பக்கக் கண்ணாடி சேதம டைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகக் கோப்பாய், சுன்னாகம் பொலிஸார் தெரிவித்த னர். (த-4-107)








## வெள்ளத்தால் அழிவடைந்த வீதியைப் புனரமைப்பார்களா?

வெள்ளத்தால் அரிக்கப்பட்ட வீதியில் போக்கு வரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குட்பட்ட கைவேலி கிராமத்தில் உள்ள சுண்ணாம்புச் சூளை வீதி கடந்த மாரி காலத்தில் பெய்த அடைமழை காரணமாக முற் றாக அரித்து கால்வாயாகக் காட்சியளிக்கின்றது. இவ் வீதியை 300 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது அன்றாடத் தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் பாடசாலை மாணவர்களும் பெரும் சிரமத்தை எதிர் கொண்டு வருகின்றனர். கடந்த காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் இந்த வீதி முற்றாக அழிவடைந்துள்ளது. இதுவரைக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

"தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகளும் அவர்களு டைய ஆதரவாளர்களும் எமது வீடுகளுக்கு வந்து எங்களுக்கு போடுங்கோ எங்களுக்கு போடுங்கோ. உங்களுக்கு நாங்கள் இருக்கிறம் என்று சொல் லிச்சினம். நாங்கள் போக்குவரத்துக்கு ஒழுங்கான வீதியே இல்லாமல் பெரும் சிரமத்தை எதிர்கொள் வது எவருக்குமே தெரியவில்லை" என அந்தக் கிராம வாசி ஒருவர் ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தார். (து)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அனைத்துலக அரசுகளை ஏய்க்காட்டும் போக்கு மேலும் தொடர வேண்டுமா?

சிங்க லே (சிங்கள இரத்தம்) என்ற தேசிய மட்ட அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட வாகன ஊர்வலம் மற்றும் கூட்டத்துக்கு நீதிமன்றம் (இடைக்கால) தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பண்டாரவளையில் இருந்து வாகனப் பேரணியில் சென்று, முதியங்கனை ரஜமகா விகாரையில், சிங்க லே அமைப்பினால் கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப் படுகிறது என்று கிடைத்த தகவலைத் தொடர்ந்து, பொலிஸார் தடை உத்தரவைக் கோரியிருந்தனர்.

அதேவேளை, அனைத்துலக நீதிமன்றப் பொறிமுறை தேவையில்லை என்று, மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் சித்தார்த்த ஸ்ரீசுமங்கல தேரர் இலங்கை வந்துள்ள ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரிடம் சுட்டிக்காட்டி உள்ளார்.

அத்தோடு--

இந்த நாட்டின் சொந்தப் பொறிமுறையின் மூலம் கலந்துரையாடல்களை நடத்தி, சகல விவகாரங்களுக்கும் தீர்வு காண இயலும் என்றும்-

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அமைதியாக வாழ்கின்றனர் என்றும்-மகாநாயக்கர் ஐ.நா. அதிகாரியிடம் எடுத்தியம்பினார்.

அடுத்த பக்கத்தில்-

சிங்க லே அமைப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்று, கொழும்பு இலங்கை ஆயர் மன்றத்தின் தலைவர் அதி வண.கர்தினால் மல்கம் ரஞ்சித் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

- மக்களை ஒன்றிணைப்பதற்கு முழுக்கவனம் செலுத்த வேண்டியவேளை இது. அவர்களைப் பிளவுறச் செய்யும் நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.
- எங்கள் நாட்டின்-இலங்கையின்- அடையாளத்தை உறுதி செய்யவேண்டும். இன, சமூகங்களின் அடையாளங்களை உறுதி செய்வதற்கு முயற்சிக்கக்கூடாது.
- அனைத்து இனங்கள் மற்றும் அனைத்து மதங்களையும் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.
- இதனைத் தேசியக் கொள்கையாக அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்--என்று கர்தினால் இடித்து உரைத்துள்ளார்.

அதனைக் கருத்தில் கொள்வது இன்றைய காலகட்டத்தின் தறுக்கணிக்கக் கூடாத பிரதான தேவைகளில் முதன்மை வாய்ந்தது என்று வகுக்கத் தக்கதாகும்.

தமிழ் மக்கள் தமக்குரிய, தமக்குச் சேர வேண்டிய, உரிமைகளைக் கோரும் எல்லா வேளைகளிலும்--

அவற்றைப் பூதகரமாகப் புனைந்து காட்டி, பிரிவினைவாதிகள் என்று முத்திரை குத்தி, அவர்களைக் கடலில் தள்ளிவிடும் போக்கை மேலுயர்த்தி பட்டம் விடும் தன்மையே--

தென்னிலங்கை அரசியல்வாதிகள் மற்றும் இனவாதிகளின் (இயற்கை) இயல்பாகி விட்டது!

நல்லாட்சி அரசு என்று தொனிப்பான முத்திரையை நெற்றியில் ஒட்டிக்கொண்டு அனைத்துலக நாடுகளை-அவற்றின் அரசுகளை-ஏய்க்காட்டும் போக்கு இனியும் தொடர வேண்டுமா...?

# நாட்டின் கௌரவத்தைக் காக்கும் விதத்தில் ஐ.நா.தீர்மானம் எதிர்கொள்ளப்படுமா?

## சிக்கலை ராஜதந்திரமுறையில் ஜனாதிபதி நேர் செய்கிறார்

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தவிருக்கும் நீதிமன்றங் களில் வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெறுவதைத் தாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார் என்று கூறியதன் மூலம் உருவாகியிருந்த சர்ச்சைகளை ராஜதந்திரமுறையில் நேர் செய்திருப்பது இப்போது தெரிய வந்துள்ளது.

சுதந்திரதின விழா நிகழ்வில் அவர் நிகழ்த்தியிருந்த உரையானது நாடு முழுவதும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டிருந்தது. ஜெனிவாத் தீர்மானத்தை பொறுமையோடும், ஒழுக்கமுறையிலும் நன்னடத்தையோடும் இலங்கை எதிர்கொண்டாக வேண்டும். அப்பொழுதுதான் முழுச் சர்வதேசத்தினாலும் மரியாதையோடு இலங்கை அங்கீகரிக்கப்படுவதாய் இருக்கும் என்று சிறிசேன தமது உரையில் குறிப்பிட்டார்.

### சர்ச்சைகளை ஏற்படுத்திய நேர்காணல்

அவர் ஏற்கனவே பி.பி.சி.சிங்கள சந்தேசிய ஒலிபரப்புக்கு வழங்கியிருந்த நேர்காணலில் தெரிவித்திருந்த கருத்துக்கள் அமெரிக்கா, பிரிட்டன் உட்பட்ட மேற்கு நாடுகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புலம்பெயர்தமிழர் அமைப்புக்கள் மத்தியில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தன.

கொழும்பிலுள்ள வெளிநாட்டமைச்சுக்கு தொடர்ச்சியாக எதிர்ப்பு அறிக்கைகள் இது தொடர்பாக வந்துகுவிய ஆரம்பித்திருந்தன. இந்த விடயம் ஜனாதிபதி சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஆகியவர்களுடன் நடத்தியிருந்த உரையாடலின் போதும், விரிவாக விவாதிக்கப்பட்டதாகத் தெரிய வந்திருந்தது.

வியாழக்கிழமை ஜனாதிபதி தமது உரையில் குறிப்பிடுகையில், 2009 மே மாதத்துக்குப் பின்னர் அவசியமான நடவடிக்கைகளை நாம் எடுத்திருந்தோமானால், கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டிருக்காது. இந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைக்கவென இந்த நாட்டு மக்கள் எமது அரசுக்கு 2015 ஜனவரி 8ஆம் திகதி தீர்ப்பு ஒன்றை வழங்கி யிருக்கி றார்கள். அதன் மூலம் இந்த நாட்டில் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் மற்றும் மலே மக்களுக்குகிடையில் நல்லிணக்கத்தை உருவாக்கும்படி கேட்டிருக்கிறார்கள். இந்த நாட்டு மக்களின், எமது படைகளின் கௌரவம் பெருமை முதலியவற்றைக் காப்பாற்றவும், சர்வதேச மட்டத்தில்எமதுமுப்படைகளினதும்கௌரவத்தை உயர்த்தவும் இந்தத் தீர்மானங்களுக்கு நாம் முகம் கொடுத்து வருகிறோம்– என்றார். மேலும் இந்தத் தீர்மானம் தொடர்பாக நாம் மேற்கொண்டு வரும் செயற்பாடுகளைத் தவறாக மக்களிடம் பரப்புரை செய்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு சிலர் முயற்சி செய்து வருகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். சிறிசேனவின் சுதந்திரதின உரை நிகழ்த்தப்படுவதற்கு முன்னரே வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் ராஜதந்திரிகள் மற்றும் தமிழ்த் தரப்பினர்களுக்கும் வழங்கிய விளக்கத்தில் மாற்றங்கள் செய்யப்படும் என்று தெரிவித்திருந்தார் என்று தெரியவந்துள்ளது.

> "சிறிசேனவின் சுதந்திரதின உரை நிகழ்த்தப்படுவதற்கு முன்னரே வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் ராஜதந்திரிகள் மற்றும் தமிழ்த் தரப்பினர்களுக்கும் வழங்கிய விளக்கத்தில் மாற்றங்கள் செய்யப்படும் என்று தெரிவித்திருந்தார் என்று தெரிய வந்துள்ளது."




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு பாதுகாப்பு வேண்டும்

**றொஹான் எதிரிசிங்க**

*(புதிய அரசமைப்பின் உருவாக்கத்தில் பக்கச் சார்பற்ற தன்மை என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)*

ஓர் அரசமைப்பு அந்தக் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமானால், அரசமைப்பை உருவாக்கும் செயன்முறையில் மக்கள் முனைப்பான விதத்தில் பங்கேற்று, அதில் ஈடுபாடு கொண்டிருத்தல் வேண்டும். 1972 மற்றும் 1978 ஆம் வருடங்களில் நிறை வேற்றப்பட்ட அரசமைப்புக்களில் ஆட்சியாளருக்குச் சார்பான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குச் சார்பான பாரபட்ச நிலைகள் காணப்பட்டன. அவை அரசமைப்பில் மக்களுக்கு வலுவூட்டும் அம்சங்களைப் புறக்கணித்திருந்தன. இந்த அரசமைப்புக்கள் அரசினால், அரசுக்கென உருவாக்கப்பட்ட அரசமைப்புக்களாக இருந்து வந்தன. அதே தவறு 2016ஆம் ஆண்டிலும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வது முக்கியமானதாகும்.

அரசமைப்புவாத கோட்பாடு, ஒரு அரச அமைப்பின் குறிக்கோள்கள் என்ன வாக இருந்து வர வேண்டு மெனபதை எடுத்துக் காட்டு கின்றது.

அது சமூகத்துக்கான ஒரு அரசியல் சட்டகத்தை வழங்குதல் வேண்டும். அல்லது நாட்டின் ஆளுகைக்கான நிறுவன ரீதியான ஒரு கட்ட மைப்பை வழங்குதல் வேண்டும்.

அது தனி நபரின் சுதந்திரம் மற்றும் சுயாதீனம் என்பவற்றையும், சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளை இனத்துவ மற்றும் சமய சிறுபான்மைச் சமூகங்களின்மட்டுமன்றி அனைத்து சிறுபான்மை சமூகத்தவரின் உரிமைகளை பாதுகாத்தல் வேண்டும்.

சமூகம் ஆளப்பட வேண் டிய விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக அது இருந்து வருதல் வேண்டும்.

ஓர் அரசமைப்பு இந்த மூன்று குறிக்கோள்களையும் எவ்வாறு சாதித்துக் கொள்கின்றது என்ற விடயத்தின் அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகின்றது. இலங்கையில் அரசமைப்புச் சீர்த்திருத்தம் தொடர்பாக இடம்பெற்று வரும் விவாதம் முழுவதுமாக முதலாவது குறிக்கோளின் மீதே கவனம் செலுத்தி வந்துள்ளது. அதாவது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட அமைப்பு ஜனாதிபதியாக இருந்து வர வேண்டுமா அல்லது நாடாளுமன்றமாக இருந்து வர வேண் டுமா என்ற விடயத்திலேயே அது கவனம் செலுத்தி யுள்ளது.

> தென் ஆபிரிக்க அரசமைப்பு மற்றும் இலங்கையின் அரசமைப்பு என்பவற்றின் முதல் இரு உறுப்புரைகளுக்கிடையில் காணப்படும் வேறுபாடு ஆச்சரியமூட்டத்தக்கதாகும். தென் ஆபிரிக்க அரசமைப்பு விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகள் என்பவற்றை எடுத்துக் காட்டுவதுடன், அவை அதி உயர்வானவை எனக் குறிப்பிடுகின்றது.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் முறை, ஆகக் கூடிய வாக்குகளைப் பெறுபவர் வெற்றியீட்டும் முறையைக்கொண்டிருக்க வேண்டுமா அல்லது விகிதாசார முறையைக் கொண்டிருக்க வேண்டுமா போன்ற விடயங்களே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப் பட்டி ருந்தன. இவை முக்கிய மான பிரச்சினைகளாக இருந்துவரும் அதேவேளையில், ஏனைய இரு குறிக்கோள்களும் முக்கிய மானவை என்ற விடயத்தை நாங்கள் அங் கீகரிப்பது அவசியமாகும்.

**அரசமைப்பு தேவைப்படுவது ஏன்?**

எமக்கு ஒரு அரசமைப்புத் தேவைப்படுவது ஏன்? அரசமைப்பின் வரலாற்றை நாம் நோக்கினால், அதாவது பெரும்பான்மை வாதத்தின் மீது ஒரு கட்டுப்பாட்டை எடுத்துவரக் கூடிய ஒரு கருவியாகவே அரசமைப்பு நோக்கப்பட்டு வந்திருப்பதனைக் காணமுடியும். ஜனநாயக அமைப்பொன்றில் பெரும் பான்மையின் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வது மிக முக்கியமான கோட்பாடுகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. குறிப்பாக, மனித உரிமைகள் போன்ற ஒரு சில விடயங்கள் தொடர்பாக பெரும்பான்மை மூலம் முடிவுகளை எடுக்கும் செயன்முறை பொருத்தமற்றது என்ற விடயம் அங்கீகரிக் கப்பட்டுள்ளது. ஏனெனில், அதன் விளைவாக பெரும் பான்மைக் கொடுங்கோன்மை தோன்ற முடியும். எனவே, அத்தகைய பிரச்சினைகள் பெரும்பான்மையின் மூலம் முடிவு களை எடுக்கும் சட்ட சபையின் பரப்பெல்லைக்கு வெளியில் எடுத்து வரப்பட வேண் டும் எனவும், மக்களினால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தின் நியாயாதிக்க எல்லையிலிருந்து அகற்றப்பட வேண்டுமென்றும், அவை அரசமைப்பொன்றின் பரப்பெல்லைக்குள் எடுத்து வரப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான ஓர் உதாரணம், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தும் கூட, மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வ தற்கென அரசமைப்பில் உரி மைகள் தொடர்பான சாசனமொன்றை உள்ளடக்குவதாகும். எனவே, அரசமைப்பு, ஒரு சில முக்கியமான விடயங்களை நாடாளுமன்றம் மற்றும் அரசின் நிறைவேற்று பிரிவுகள் என்பவற்றின் கரங்களிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. ஹார்வர்ட் சட்டக் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதியான யூஜின் ரொஸ்டோ அதனைப் பெரும்பான்மைவாதத்தை எதிர்கொள்ளும் ஆவணம் என எடுத்து விளக்கியிருந்தார்.

அண்மைய வருடங்களில் அரச மைப்பொன்றின் விழுமியங்கள், கோட்பாடுகள் மற்றும் தர நியமங்கள் என்பன எடுத்து விளக்கப்பட்டிருந்தன. உலகின் மிக முற்போக்கான அரச மைப்புக்களில் ஒன்றாகக் கருதப்பட்டு வரும் தென் ஆபிரிக்காவின் 1996ஆம் ஆண்டின் அரசமைப்பு இதற்கான ஒரு மிகச் சிறந்த உதாரணத்தை வழங்கு கின்றது. அந்த அரசமைப்பின் உறுப்புரை 1 பின்வருமாறு பிரகடனம் செய்கின்றது: தென் ஆபிரிக்கா பின் வரும் விழுமியங்களின் மீது உருவாக் கப்பட்ட ஒரு குடியரசாகும். அதன் பின்னர் அது அத்தகைய விழுமியங்களின் ஒரு பட்டியலை முன் வைக்கின்றது. அது மானிட கண்ணியம், இனவாத எதிர்ப்பு, ஆண் பெண் பாலினப் பாகுபாடுகாட்டாமை, சட்டத்தின் ஆட்சி, பல்கட்சி ஜன நாயகம், பொறுப்புக் கூறுதல், திறந்த தன்மை, மக்களுக்கு பதிலிறுத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. உறுப்புரை 2 பின்வருமாறு குறிப்பிடுகின்றது: அரசமைப்பு அதி உயர்வானதாகும். அரசமைப்புடன் பொருந்திச் செல்லாத அனைத்துச் சட்டங்களும் செல்லுபடியற்றவையாகும்.

(தொடரும்)

## நாய்களுக்கும் சகல உரிமைகளும் உண்டு; ஆனால் நடு வீதியில் என்பதுதான் தொல்லை

யாழ்ப்பாணம் நாய்களின் சாம்ராச்சியம் போலாகி விட்டது. இருபத்து நான்கு மணித்தியாலமும் வீதிகளை நாய்கள் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன. வீட்டு நாய்கள், வீதி நாய்கள், விதைவை நாய்கள், வீம நாய்கள், விசர் நாய்கள், வேட்டை நாய்கள், வருத்த நாய்கள், பெட்டை நாய்கள், குட்டி நாய்கள் என்று வீதியெங்கும் ஒரே ரகளை. உரிமைகள் சகல ஜீவராசிகளுக்கும் உண்டு என்பதற்காக நாடு, நகரம், நீதி, நியாயம், சுத்தம், சூழல், பிள்ளை குட்டி, வீதி விபத்து என்பவற்றுக்குக் குந்தகம் விளைவிக்கும்போது அதைக் கவனத்தில் எடுக்காமல் இருப்பதானது முறையுமல்ல,தர்மமுமல்ல, நீதியுமல்ல.

இவை பற்றி எழுதுவதனால், நானும் நாய்களின் கூட்டாளி என்று வாசிப்பவர்கள் கருதி விடலாகாது.

நாய்களின் நடவடிக்கை தொடர்பாகச் சம்பந்தப்பட்ட பெரியவர்கள் கூடிய கவனம் எடுக்க வேண்டும் எனப் பாதசாரிகளின் ஆதங்கம் இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

வீட்டு நாய்களில் பெரும்பாலானவை, தமது காலைக் கடன்களை வீதிகளில் கழிப்பதற்காகத் திறந்து விடப்படுகின்றன. பயிற்றுவிக்கப் படுகின்றன. இதனால் வீதிகள் தோறும் நாய்களின் மலம் சலம் வாகனங்களினால் செப்பனிடப்பட்டு, மீண்டும் கால்கள், செருப்புக்கள் ஊடாகச் சாமியறை, பள்ளியறை, சமையலறை வரையும் சென்று ஈற்றில் அவரவர் சாப்பாட்டுடன் வயிற்றுக்குள்ளும் சென்று விடுகிறது.

வீட்டு நாய்களுக்கான விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்குமாறு சொல்லியா விளங்க வேண்டும்?

நாமெல்லாம் படித்து விட்டோம் என்பதற்காக வழக்கிலும் வெல்லலாம் என்று ஒரு முடிவுடன் வாழலாமா? வீட்டிலே மலசலம் கழிக்கக் கூடிய வகையில் நாய்களைக் கட்டி வைக்கக் கூடாதா? இல்லை நாங்கள் அவிழ்த்துத்தான் விடுவோமென்று அடம்பிடித்தால், உங்கள் வீட்டில் துன்பம் வேறு வடிவத்தில் வருவதற்கு அதிக நேரம் செல்லாது, அப்போது விளங்கும். மற்றும் கட்டாக்காலி நாய்களுக்கும் விரும்பிய வீட்டு நாய்களுக்கும் கருத்தடை செய்வதற்குச் சட்டம் இடம்கொடுக்கும் பட்சத்தில் இதனைப் பூனைகளுக்கும் செய்வது காலத்தின் நியாயமாகும். நாய்களும், பூனைகளும் வீதிகளில் ஒன்று சேர்வதாலும் பிரிவதனாலும் ஒன்றோடொன்று கலைபடுவதனாலும் குறுக்கே ஓடுவதாலும் மனித உயிர்கள் சாவின் விளிம்பில் கொண்டுபோய் விடப்படுகின்றன. இது சரிதானா?

அல்லாமலும் பாதையில் செல்பவர்களைக் கலைத்துத் துரத்திக் கடிப்பது நாய்களுக்கு வழங்கப்பட்ட உரிமையா? தயவு செய்து உரியவர்கள் இதனைப் பரிசீலிப்பீர்களா? விமோசனம் கிடைக்குமா?

**கே.எஸ்.சிவஞானராஜா.**

## ஐயர் கடைத் தோசையில் எனக்கும் ஆசை!

மிருசுவில் தமிழ்தாசனுக்கு முதல் கண் நன்றி கூறுகிறேன்! இந்த நூறு ரூபாய் - இருபது ரூபாய்த்தாள்களால் நானும் பலமுறை தடுமாற்றம் அடைந்த நினைவுகள் - மனதில் நிழலாடுகின்றன. அப்போதெல்லாம் நினைப்பேன் - ஒவ்வொரு எண் ரூபாய்களை வெவ்வேறு நிறத்தில் அச்சடித்தால் குழப்பம் நீங்குமே என்று. பத்திரிகைக்கும் இது பற்றி எழுத யோசனை செய்தபோது - யாரடா? அதிகப் பிரசங்கி? என்பார்களோ என்ற பயம்! இப்போதும் எழுதலாம் - தமிழ்தாசன் உதவி கிடைக்கும். 500உம்-5,000உம் பெரும் பிரச்சினை என்று - ஒருவர் கூறினார். - 5,000 ரூபாவை சில்லறையாக மாற்றி வையுங்கோ! என்றும் அவர் கூறினார். - அதுவும் நல்ல யோசனையே.

ஒரு சமயம் காலை வேளையில் - 20 ரூபாவை 100 ரூபா என ஒரு ஓட்டோ சாரதியிடம் கொடுத்த போது - இது 20 ரூபா என அவர் கூறவும் திரும்பவும் ஒரு தாளை உருவிக் கொடுத்தேன்- பெற்றுச் சென்றார். என்னுடன் வரப் போகும் ஒருவருக்குப் பத்தாயிரம் ரூபா கடனாகக் கொடுக்க எடுத்து வந்தேன் - அவரது வீட்டில் நின்று வேறும் பிரயாணிகளுடன் வாகனத்தில் போவது என ஏற்பாடு - 10,000 ரூபா எடுத்த போது 500 ரூபா குறைந்தது? அட! ஓட்டோ சாரதிக்குக் கொடுபட்டு விட்டது! 20 ரூபா என்று கவனமாகப் பார்த்தவர் 500 பார்க்காமலா போயிருப்பார்? நரி முகத்தில் விழித்தேன் ! என்று மகிழ்ந்திருப்பார் - அவர் அயலில் உள்ளவர் தான் - பரவாயில்லை - ஆண்டவனின் உண்டியலில் போட்டதாக விட்டு விடுவோம்! இதை விட - பலாலி றோட்டில் - பருத்தித்துறை இ.போ.ச. பஸ்ஸும் வரும் - புன்னாலைக்கட்டுவன் செல்லும் பஸ்ஸும்வரும் - அருகில் வந்த பின் தான் தெரியும்- எந்த வாகனம் என்று. நாம் வாகனத்தின் 'போர்ட்'டைப் பார்த்துக் கொண்டிருக்க அது அப்பால் போய்விடும்! இது பலருக்கு ஏமாற் றம்! நான் அந்த வாகனத்தில் இருந்த சமயம் நடத்துநர் கூறினார்- எந்த வாகனம் என்று தெரியாமல் கையைக் காட்டுகினம் என்று- மு.ப. [illegible] மணிக்கு தெல்லிப்பழை பஸ் ஒன்று வரும் என்று காவல் நிற்பர் பிரயாணிகள். இந்தப் பிரச்சினை தீர்வதற்கு வானங்களுக்கும் வெவ்வேறு நிறம் பூசினால் எப்படி? என்று யோசனை செய்தேன்.

**இ.தவபாக்கியம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துக் கண்காணிப்புமுறை இல்லாததால் இந்த அவலம்

**த.சுதாகரன்**

கடந்த 3ஆம் திகதி அன்று பலாலி வீதி, திருநெல்வேலிப் பகுதியில் சனநெரிசல் கூடிய பகுதியில் அரச பஸ் மற்றும் தனியார் சிற்றூர்தி ஆகியவற்றின் போட்டா போட்டியினால் ஏற்பட்ட மற்றுமொரு கோர விபத்து தொடர்பான செய்திகள் மறைந்து விட்டன. இந்த விபத்தால் ஓர் இளம் குடும்பமே சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது என்பது இந்தச் சொற்ப வருமானத்துக்காக குறுகிய தூர இடைவெளியில் போட்டிபோடும் சமூகப் பொறுப்பற்ற சாரதிகளுக்கு எங்கே புரியப் போகின்றது? இளம் தாயொருவர் தனது இரண்டு கைகளும் முறிவடைந்த நிலையில் மிகவும் அவலமாகக் காயப்படுத்தப்பட்டு, வெள்ளைச் சீருடை அணிந்து பல்வேறு கனவுகளுடன் பள்ளிப் பருவமதை ஆரம்பித்து, ஒரு மாதமேனும் ஆகாத அந்தப் பச்சிளம் பாலகனை அரவணைத்து ஆறுதலடைய முடியாத நிலையில், சாவு தந்த வேதனைகள், வலிகள் ஆகியவற்றை பணத்தை மட்டும் இலக்காகக் கொண்ட இந்த வக்கிரமான பிறவிகளுக்கு எங்கே புரியப்போகின்றது?

தமது அங்கத்தவர்கள் ஏதேனும் சம்பவத்தில் தாக்கப்படும்போது அல்லது இலங்கைப் போக்குவரத்து சபை சாரதிகளுடன் ஏற்படும் முரண்பாடுகளின்போது வரிந்து கட்டிக்கொண்டு போராட்டத்தில் குதிக்கும் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினர், இன்று அந்த இளம் குடும்பத்தின் வேதனைகளை அறிவார்களா? இவ்வாறான விபத்துக்கள் ஏற்படும்போது சமூகப் பொறுப்பற்ற முறையில் சங்கம் மௌனம் காப்பது ஏன்? நீங்கள் இந்தச் சமூகத்தின் அங்கம் இல்லையா? பணம் மட்டும்தான் உங்கள் இலக்கா? மனித உயிர்களின் பெறுமதி, அப்பாவிகளின் வேதனைகள் உங்களுக்குப் புரிவதில்லையா?

யாழ். குடாநாட்டில் அரச பஸ்களுக்கும், தனியார் பஸ்களுக்குமான வீதி ஒழுங்கை மீறிய போட்டிகளால் ஏற்படும் அவலங்களின் தொடர்கதைக்கு யார் எப்போது முற்றுப்புள்ளி வைக்கப் போகின்றார்கள்? விபத்துக்கள் ஏற்படும்போது இழப்புக்களைச் சந்தித்த தரப்பினர் இழப்பினால் ஏற்பட்ட மனவேதனையினால் இந்தக் கொலைகாரச் சாரதிகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாதவர்களாக உள்ள நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, இவ்வாறான சாரதிகள் சட்டத்தின் ஓட்டைகள் ஊடாக பண பலத்தைப் பயன்படுத்தி தப்பித்துக் கொள்கிறார்கள் என்பது உண்மையே. ஏனெனில் இந்த விபத்தை ஏற்படுத்திய தனியார் சிற்றூர்திச் சாரதி ஏற்கனவே ஒரு விபத்தில் தொடர்புபட்டவர் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறான விபத்துக்களுக்கு இந்த சமூகப் பொறுப்பற்ற சாரதிகள் மட்டுமல்ல, சட்ட ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரிகளும்கூடவே காரணம். இன்று யாழ். குடாநாட்டில் போக்குவரத்துக்குத் தகுதியற்ற துருப்பிடித்த மிகவும் பழைமை மிக்க சிற்றூர்திகள் அழகாக வர்ணம் பூசப்பட்டு, அவற்றின் உக்கல்கள் வெளித்தெரியாதவாறு உருமறைப்பு செய்யப்பட்டு, வருடா வருடம் பணத்தை செலுத்தி வழித்தட அனுமதியைப் பெற்று வீதிகள்தோறும், கரும் புகையைப் போக்குவரத்து பொலிஸாரின் முகத்திலேயே படும்படியாகக் கக்கியபடி பயணித்துக் கொண்டிருப்பதற்கு யார் பொறுப்பு? பயணிகள் செறிவு குறைந்த பகுதிகளில் மட்டும் நின்று அவ்வப்போது போக்குவரத்துக் கண்காணிப்பில் ஈடுபடும் பொலிஸாருக்கு, சனநெரிசல் மிக்க பகுதியில் இவ்வாறான கொடூர சாரதிகளின் வித்தைகள் கண்களுக்குத் தெரிவதில்லையா? அல்லது தமது பைகளை நிரப்புவதற்கு இவ்வாறான சனநெரிசல் மிக்க பகுதிகள் பொருத்தமற்றது எனத் தவிர்த்துக் கொள்கின்றனரா?

> போக்குவரத்துக் கண்காணிப்பில் ஈடுபடும் பொலிஸாருக்கு, சன நெரிசல் மிக்க பகுதியில் இவ்வாறான கொடூர சாரதிகளின் வித்தைகள் கண்களுக்குத் தெரிவதில்லையா?

காலத்துக்குக் காலம் யாழ். குடாநாட்டில் இவ்வாறான விபத்துக்கள் பல இடம் பெற்றபோதும், இற்றைவரை யாழ். குடாநாட்டில் முக்கிய உள்ளூர் வழித்தடங்களான, பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி, மானிப்பாய் வீதி மற்றும் கொடிகாமத்துக்கான சேவையில் ஈடுபடும் இரு தரப்பு பஸ்களும் ஒன்றையொன்று போட்டிபோட்டு முந்திச் செல்லாதவாறு இரு தரப்பினரையும் ஒன்று சேர்த்து உரியநேர அட்டவணை தயாரிக்கப்படாமைக்கு எவர் பொறுப்பு? மேலும் விதிமுறைகளை மீறிச் செயற்படும் சாரதி தொடர்பாக ஏனைய சாரதிகள் மற்றும் பயணிகள் முறைப்பாடு செய்து உரிய விசாரணை செய்து தண்டிக்கப்படக்கூடிய செயற்றிறன்மிக்க கண்காணிப்புப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

இன்று மிருகங்களைக்கூட வாகனங்களில் துன்பப்படுத்தி நெரிசல் மிக்கதாக ஏற்றிச் சென்றால்கூட சட்ட நடவடிக்கை எடுக்கும் பொலிஸார், மிகவும் நெரிசல் மிக்கதாகத் தமது இயலுமைக்கு அப்பால் அதிகூடியளவுபயணிகளைமிதிபலகையில் கூட ஏற்றிச்செல்வதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில்லையே? ஒவ்வொரு பஸ்சினதும் தகுதிநிலை ஆராயப்பட்டு, அவர்களது வழித்தட அனுமதியுடன் அவர்கள் ஏற்றிச் செல்லக்கூடிய அதிகூடிய பயணிகளின் எண்ணிக்கையும் தீர்மானிக்கப்பட்டு குறிப்பிடப்படல் வேண்டும். வழித்தடங்களில் இந்தநடைமுறையைப்பின்பற்றுகின்றனரா? என்பதைஉரியவர்கள்கண்காணித்தல் வேண்டும். இதனூடாக இவ்வாறான போட்டிகள் தவிர்க்கப் படுவதுடன் விபத்துக்களின்போது ஏற்படும் மனித இழப்புக்களும் குறைக்கப்படும்.




## மகரம்

[உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் மகரம் ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி நேற்றைய உதயனில் பார்த்தோம். மகரம் ராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.]

**மே**

சுக ஸ்தானமான 4-இல் சூரியன், சுக்கிரன் சஞ்சரிப்பது வீண் அலைச்சலை ஏற்படுத்துமென்றாலும் லாப ஸ்தானத்தில் செவ்வாய், சனி சஞ்சரிப்பதால் நினைத்தது நிறைவேறும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். அசையாச் சொத்துக்களாலும் வண்டி வாகனங்களாலும் சிறுசிறு வீண் விரயங்கள் உண்டாகும். குடும்பத்திலுள்ளவர்களை அனுசரித்து நடப்பது நல்லது. எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகிட்டும். எதிலும் எதிர் நீச்சல் போட்டே முன்னேறவேண்டியிருக்கும். லட்சுமி தேவியை வழிபடவும்.

**ஜூன்**

லாப ஸ்தானத்தில் செவ்வாய், சனி சஞ்சரிப்பதும் மாத பிற்பாதியில் 6-இல் சூரியன் சஞ்சாரம் செய்யவிருப்பதும் எல்லா வகையிலும் மேன்மைகளை ஏற்படுத்தும் அமைப்பாகும். கடந்த காலங்களிலிருந்த பொருளாதார பிரச்சினைகள் அனைத்தும் விலகி முன்னேற்றமான பயன்கள் உண்டாகும். பிரிந்த உறவினர்களும் தேடிவந்து ஒற்றுமைக் கரம் நீட்டுவார்கள். விநாயகரை வழிபடுவது சிறந்தது.

**ஜூலை**

லாப ஸ்தானத்தில் செவ்வாய், சனி சஞ்சரிப்பதாலும் மாத முற்பாதியில் 6-இல் சூரியன் சஞ்சாரம் செய்ய விருப்பதாலும் பொருளாதார உயர்வுகளும் அரசுவழியில் அனுகூலங்களும் உண்டாகும். பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிட்டும். குடும்பத்தில் தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்பட்டு ஒற்றுமை குறையும். பணவரவுகளுக்கு பஞ்ச மிருக்காது. சுபகாரிய முயற்சிகளில் தடைகளுக்குப்பின் வெற்றி கிட்டும். உத்தியோகத்தர்களின் திறமைகள் பாராட் டப்படும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் கூட்டாளி களை அனுசரித்துச் செல்வது நல்லது. துர்க்கை அம்மனை வழிபடவும்.

**ஓகஸ்ட்**

லாப ஸ்தானத்தில் செவ்வாய், சனி சஞ்சரிப்பது சாதகமான அமைப்பு என்றாலும் 7, 8-இல் சூரியன் சஞ்சரிப்பதால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. நெருங்கியவர்களால் தேவையற்ற பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும் என்பதால், எதிலும் சிந்தித்துச் செயற்படுவது நல்லது. 2-ஆம் திகதி முதல் குரு 9-ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால் பண வரவுகள் சிறப்பாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமும் அபிவிருத்தியும் பெருகும். தட்சிணாமூர்த்தியை வழிபடுவது சிறந்தது.

**செப்ரெம்பர்**

பாக்கிய ஸ்தானமான 9-இல் குரு, சுக்கிரன் சஞ்சரிப்பதும் 11-இல் சனி சஞ்சாரம் செய்வதும் சாதகமான அமைப்பு என்றாலும், 8-இல் சூரியன், ராகு சஞ்சரிப்பதால் குடும்பத்திலுள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உடல், ஆரோக்கியத்தில் பாதிப்புகளும், குடும்பத்தில் உள்ளவர்களால் மருத்துவச் செலவுகளும் உண்டாகும். எந்தவொரு காரியத்திலும் சிந்தித்துச் செயற்படுவது நல்லது. தொழிலில், இலாபம் அமையும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். விநாயகரை வழிபடவும்.

**ஒக்ரோபர்**

பாக்கிய ஸ்தானமான 9-இல் சூரியனும், குருவும், 10-இல் சுக்கிரனும் சஞ்சாரம் செய்வதால் நினைத்தது நிறைவேறும். பணவரவுகள் தேவைக்கேற்றபடி அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபீட்சமும் உண்டாகும். குடும்பத்தில் மங்களகரமான சுபகாரியங் கள்கைகூடும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமான நிலை இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வுகள் கிட்டும். துர்க்கை அம்மன், விநாயகரை வழிபடுவது உத்தமம்.

**நவம்பர்**

மாதக்கோளான சூரியன் சாதகமாகச் சஞ்சரிப்பதும் 9-இல் குரு, 11-இல் ராசியாதிபதி சனி சஞ்சாரம் செய்வதும் அற்புதமான அமைப்பாகும். நீங்கள் நினைத்ததெல்லாம் நிறைவேறும். செல்வம், செல்வாக்கு உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிலவும். மங்களகரமான சுபகாரியங்கள் கைகூடும். சொந்த வீடு, மனை வாங்கக்கூடியவாய்ப்பும்உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்க்கும் உயர்வுகள் கிடைக்கும். பணம் கொடுக்கல்- வாங்கலில் சரளமான நிலையிருக்கும். துர்க்கையம்மனை வழிபாடு செய்வது நன்மை தரும்.

**டிசெம்பர்**

குரு, சூரியன் சாதகமாக சஞ்சரிப்பதாலும், 11-இல் ராசியாதிபதி சனி சஞ்சாரம் செய்வதாலும் எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகிட்டும். 8இல் ராகு சஞ்சரிப்பதால் கணவன்- மனைவி சற்று விட்டுக்கொடுத்து நடந்து கொள்வது நல்லது. பணவரவுகள் சிறப்பாக இருந்தாலும், ஆடம்பரச் செலவுகளைக் குறைக்கவும். சுப காரியங்களுக்கான முயற்சிகளில் அனுகூலம் ஏற்படும். எடுக் கும் காரியங்களில் சிறுசிறு தடைகள் நிலவினாலும், எதிர்நீச்சல் போட்டு முன்னேறுவீர்கள். விநாயகப் பெருமானை வழிபாடு செய்யவும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மூவினத் தலைவர்களும் போராடியதால் கிடைத்ததே நாட்டின் சுதந்திரம்

**இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின வைபவத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரை**

*- ஜனாதிபதி ஊடகப் பிரிவு.*

இது நாம் அனைவரும் ஒன்றிணைந்து சுதந்திர தின நினைவு வைபவத்தை பேரபிமானத்துடனும், கோலாகலமாகவும் கொண்டாடும் ஒரு இனிய சந்தர்ப்பமாகும். 68 ஆண்டுகளுக்குமுன்ணப்பிரித்தானியகாலனித்துவாதிகளிடம் இருந்து நாம் சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து வருடாந்தம் இடம்பெறும் தேசிய சுதந்திர தின வைபவத்தின் 68 ஆவது சந்தர்ப்பமே இதுவாகும்.

விசேடமாக 1948ஆம் ஆண்டையும் இன்றைய தினத்தையும் நாம் எடுத்துக்கொண்டால் சுதந்திரம்பற்றிக் கதைக்கும்போது பொருளாதார, அரசியல், சமூக, கலாசார ரீதியில் எமது நாட்டைப்போன்றே ஏனைய உலக நாடுகளிலும் பெரிய மாற்றங்கள் பல நிகழ்ந்துள்ளன.

1948ஆம் ஆண்டில் நாம் பெற்றுக் கொண்ட சுதந்திரம் பற்றிய விளக்கமானது, அதனை வரைவிலக்கணப்படுத்துவோமாயின், 1948 ஆண்டு எமது நாட்டு மக்கள் எதிர்பார்த்த சுதந்திரம், 68 ஆண்டுகளின் பின்னர் இன்று நாம் எதிர்பார்க்கும் சுதந்திரம் ஆகியவற்றுக்கிடையே பெரிய மாற்றங்கள் உள்ளதென நான் நம்புகிறேன்.

1948 அல்லது 50ஆம் தசாப்தத்தில் பிறந்த ஒரு பிள்ளையை கலாசார குழந்தையென நான் கருதுகிறேன். இன்றைய கால எல்லையின் 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் கால கட்டமான இன்று பிறக்கும் பிள்ளைகளை தொழில்நுட்பக் குழந்தைகள் என நான் கருதுகின்றேன். அவ்வாறாயின், 50ஆம் தசாப்தத்தில் பிறந்த கலாசாரப் பிள்ளையையும், 21ஆம் நூற்றாண்டின் ஆரம்ப கால கட்டத்தில் அல்லது இன்றைய தினம் பிறக்கும் தொழில்நுட்பப் பிள்ளையையும் ஒன்றிணைத்து தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியையும் நாட்டைக் கட்டியெழுப்பும் பணியையும் எமது ஒன்றிணைந்த முயற்சியின் மூலம் மேற்கொள்ளல் வேண்டுமென நான் நம்புகிறேன்.

### சுதந்திரப் போராட்டத்தில் மூவினத் தலைவர்கள்

அன்பான பிள்ளைகளே, பெற்றோர்களே, நண்பர்களே, காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெறுவதற்காக அன்று போராடிய தேசிய வீரர்கள்பற்றிக் கதைக்கும்போது அந்தத்தேசிய வீரர்களுள் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமகாலத் தலைவர்கள் பலர் சகோதரத்துவத்துடனும் ஒற்றுமையுடனும், நட்புறவுடனும் கருத்தொருமித்து நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காகப் போராடி எமக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தார்கள் என்பதை நாம் நன்கறிவோம்.

நாம் இதுபற்றிச் சற்று விரிவாகப் பார்ப்போமாயின், வெளிநாட்டு ஆக்கிரமிப் பாளர்கள் எமது நாட்டை ஆக்கிரமித்த தினத்தில் இருந்து அல்லது 1505ஆம் ஆண்டு முதல் 1948ஆம் ஆண்டு வரையான கால எல்லையினுள் 400 ஆண்டுகளாக நாம் வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்குட்பட்டிருந்த யுகத்தில் பலவற்றை இழந்தோம். எமது கலாசாரம் பாதிப்புற்றது. பொரு ளாதாரம் வீழ்ச்சியடைந்தது. முன்னைய அரசர்களினால் கட்டியெழுப்பப்பட்டிருந்த சுபீட்சம் நிறைந்த எமது இலங்கை 400 ஆண்டுகள் காலம் காலனித்துவ ஆட்சியின் பயனாக பலவற்றை இழந்தது.

> இன்று எமது நாட்டில் மட்டுமன்றி உலகின் அபிவிருத் தியடைந்த நாடுகளின் தலைவர்கள் எதிர்நோக்கும் சவாலையும் பிரச்சினையையும் நான் காண்கிறேன். உயர் தொழில் நுட்பயுகத்தின் இணையத்துடன் உறவாடும் புதிய தலை முறையினர், ஒட்டுமொத்த பொது மக்கள் ஆகியோர் தமது ஆசாபாசங்கள், தமது எண்ணங்கள், தமது குறிக் கோள்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக ஆட்சியாளர் களை விட எப்போதும் முன்னணியில் இருக்கின்றனர்.

இந்த அழிவு 400 ஆண்டுகள் காலமாக நிகழ்ந்தது. 1505 ஆம் ஆண்டு முதல் போராடிய எமது வீரர்கள், நெற்றிவியர்வை சிந்தி பல்வேறு தியாகங்களுக்கு மத்தியில் பல ஆண்டுகள் போராடி 1948ஆம் ஆண்டு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தனர். நாம் காலனித்துவ வாதத்திலிருந்து சுதந்திரம் பெற்றபோதிலும், 400 ஆண்டுகள்காலம் எமது நாட்டை ஆக்கிரமித்த, எம்மை ஆண்ட வெளிநாட்டவர்கள் இந்த நாட்டில் தோற்றுவித்த பிரச்சினை களை எம்மிடம் விட்டுச் சென்றனர்.

### தீர்க்கப்படாத பிரச்சினைகள்

விசேடமாக 30ஆம், 40ஆம் தசாப்தங்களில் இந்த வீரர்கள் முன்னெடுத்த போராட்டத்தின்போது இன, மத, குல பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து போராடிப்பெற்ற வெற்றியின் பின்னர், எமது நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் இன்று 68 ஆண்டுகள் கடந்துள்ள வேளையில் எமது நாட்டை ஆக்கிரமித்தவர்கள் எம்மிடம் விட்டுச் சென்ற பிரச்சினைகளை நாம் தீர்த்து வைத்துள்ளோமா என்ற வினாவை நாம் அனைவரும் எமது மனச்சாட்சியைத் தொட்டுக் கேட்கவேண்டியுள்ளது.

பெரும்பாலும் அதிகாரத்துக்கு வந்த அரசுகள், பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் முன்னுரிமை அளித்துள்ளன. ஆயினும் இனங்களுக்கிடையே ஒற்றுமை, நல்லிணக்கம், சகோதரத்துவம், நட்புறவு ஆகியவற்றை [illegible] மேற்கொள்ளப்பட்டி [illegible] தசாப்தத்தின் ஆரம்ப கட்டத்தில் ஆரம்பமாகி 26 ஆண்டுகளாகத் தொடர்ந்த கொடிய பயங்கரவாதத்தை எம்மால் தவிர்க்க முடிந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே ஒரு நாட்டின் அபிவிருத்தியில் பொருளாதார அபிவிருத்தி, பௌதிக வள அபிவிருத்தி என்பன முக்கியம் பெறுவதைப்போன்றே, அங்கு வாழும் மக்களின் கலாசார பண்புகள், மதப் பண்புகள், மொழிப் பண்புகள் ஆகிய அனைத்தையும் ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளுதல் மிக முக்கியம் என நான் நம்புகிறேன்.

இன்று எமது நாட்டில் மட்டுமன்றி, உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளின் தலைவர்கள் எதிர்நோக்கும் சவாலையும் பிரச்சினையையும் நான் காண்கிறேன். உயர் தொழில்நுட்ப யுகத்தின் இணையத்துடன் உறவாடும் புதிய தலைமுறையினர், ஒட்டுமொத்த பொதுமக்கள் ஆகியோர் தமது ஆசாபாசங்கள், தமது எண்ணங்கள், தமது குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக ஆட்சியாளர்களைவிட எப்போதும் முன்னணியில் இருக்கின்றனர். இது தொழில்நுட்ப யுகத்தில் நான் ஏற் கனவே கூறியவாறு 30, 40, 50 ஆகிய தசாப்தங்களின் கலாசாரப் பிள்ளைக்கும், இன்று 21ஆம் நூற்றாண்டில் பிறக்கும் தொழில்நுட்பப் பிள்ளைக்குமிடையே காணப்படும் பிரதான வேறுபாட்டின்போது நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு விடயமாக உள்ளது.

### அனைத்துத் துறையிலும் மாற்றங்கள்

ஆகவே அதிநவீன யுகத்தில் வாழும் மக்கள், புதிய சந்ததியினர், புதிய சிந்தனை, புதிய ஆசாபாசங்கள் ஆகியவற்றுடன் செல்லும் பயணத்தில் பெரும்பாலும் அனைத்துத் துறைகளிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. இம்மாற்றங்களின்போது அனைத்துத் துறைகளிலும் புரட்சிகரமான மாற்றங்கள் நிகழ்கின்றன. புரட்சிகரமான சிந்தனைகள் தோற்றம் பெறுகின்றன. புதிய ஆசாபாசங்கள் உருவாகின்றன. இங்கு நாம் பல்வேறு விடயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் விதமாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஆட்சி நடாத்துதல் இன்றியமையாதது. ஆகவே நாடு என்ற ரீதியில் இவ்வனைத்து நிலைமைகளையும் கருத்தில்கொண்டு நான் முன்னர் குறிப்பிட்டதுபோன்று, சுதந்திரத்தின் விளக்கம்பற்றி புதிய கோணத்திலும், புதியதொரு பொருட் தேடலிலும் அதனை நோக்குதல் அத்தியாவசியமாகும் என நான் நம்புகிறேன். இன்று உலகில் வரைவிலக்கணங்கள் பற்றி விளக்கும்போது, சுதந்திரம் எனும் சொல் பற்றி விளக்குவது மிகவும் கடினமாகும். மிகவும் சிக்கல் நிறைந்த சொல் என நான் நம்புகிறேன்.

சுதந்திரம் என்ற சொல் மிகப் பரந்த அர்த்தமுடைய ஒரு சொல்லாக மாறியுள்ளது. இது பல்வேறு கருத்து விளக்கங்களை தருகிறது. அதிநவீன தொழில்நுட்பத்துடன் விரிவடைந்து சென்றுள்ளது. எமது சிறந்த நட்பண்புகள் எமது நாகரிகத்துடன் புதிய உலகம் மற்றும் புதிய சிந்தனைகள் ஆகியவைபற்றி நோக்கும்போது, சுதந்திரம் எனும் மிகப் பரந்துபட்ட சிக்கல் நிறைந்த சொல்லை ஆட்சியாளர்களும் ஏனையவர்களும் பாராதுரமான ஒரு சவாலாக நோக்கும் ஒரு பணியாக இனம் காணலாம்.

ஜனநாயகம் வலுவடைந்துள்ள ஒரு யுகத்தில் நாம் இன்று வாழ்கின்றோம். இங்கு நாம் புரிந்துகொள்ள வேண்டிய பல்வேறு விடயங்கள் உள்ளன். நாம் இன்று அரசர்கள் ஆட்சி புரியும் காலத்தில் வாழவில்லை.

(தொடரும்...)

# பொருளாதார வீழ்ச்சியால் பலம் குன்றி வரும் ஐ.எஸ்.

## ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டு



வொஷிங்டன், பெப்.10
ஐ.எஸ். அமைப்பின் அண்மைய தோல்விகளுக்குக் காரணம் பொருளாதார வீழ்ச்சியே என ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராளிகளுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் உரிய முறையில் வழங்கப்படாமையாலும் அந்த அமைப்பு தொடர் தோல்விகளைச் சந்தித்துள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிபுணத்துவமான ஆய்வாளர்களும், அவதானிகளும் பிரபல ஊடகம் ஒன்றுடன் இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

போரில் இறந்துள்ள போராளிகள் தவிர இதர தரப்பினருக்குச் சம்பளம் வழங்காமையினால் ஐ.எஸ். அமைப்பில் இருந்து சிலர் விலகியுள்ளனர், சிலர் வேறு போராளிக் குழுக்களுடன் இணைந்துள்ளனர். கடந்த மாதத்தில் இருந்து போராளிகளுக்கான சம்பளம் பாதியாக குறைக்கப்பட்டுள்ளது என அவதானிகள் தெரிவித்தனர்.

2014 ஆம் ஆண்டில் ஈராக்– சிரியாவின் சில பகுதிகள் போராளிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டன. அவை தற்போது மீண்டும் படையினர் வசம் போயுள்ளன. இவ்வாறான நலிவுநிலை நிலவுவதால், ஐ.எஸ். இருப்பு நிலையற்றது என நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அதிக எண்ணிக்கையான ஐ.எஸ். போராளிகள், அமைப்பில் இருந்து நீங்குவதாகவும் அல்லது வேறு போராட்டக் குழுக்களுடன் இணைவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

> அமெரிக்கக் கூட்டுப் படைகள் இணைந்து நடத்திய தாக்குதலில் எண்ணெய் வளங்கள், பொருளாதார வளங்கள் என்பன அழிக்கப்பட்டன. இந்த நெருக்கடி நிலையால் வரிப்பணம், இதர இலாபங்கள் முடக்கப்பட்டன என நிபுணர்கள் தெரிவித்தனர்.

மேலும் அதிக சம்பளம், சலுகைகள் வழங்கப்படும் இடத்தில் போராளிகள் இணைந்து கொள்கின்றனர். இலாப நோக்கத்தைப் போராளிகள் கருதுவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நெருக்கடி நிலை இருந்தபோதும், கொள்கை ரீதியாக இணைந்து கொண்ட வெளிநாட்டுப் போராளிகள் வலுவான நிலையில் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். அவர்கள் தொடர்ந்து போரிடத் தயாராகவுள்ளனர். ஒரு வருடத்தின் முன்பு ஐ.எஸ். அமைப்பு மிகுந்த செல்வச் செழிப்புடன் இருந்தது. போராளிகளின் எண்ணிக்கையும் மிக வலுவாக இருந்தது. ஆனால் தற்போது இந்த நிலை வீழ்ச்சி அடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கக் கூட்டுப்படைகள் இணைந்து நடத்திய தாக்குதலில் எண்ணெய் வளங்கள், பொருளாதார வளங்கள் என்பவை அழிக்கப்பட்டன. இந்த நெருக்கடி நிலையால் வரிப்பணம், இதர இலாபங்கள் முடக்கப்பட்டன என நிபுணர்கள் தெரிவித்தனர். நலிவடைந்த நிலையில் ஐ.எஸ். இயங்குவதால் போராளிகளுக்கான சம்பளமும் சலுகைகளும் மட்டுப் படுத்தப்பட்டன என நம்பத்தகுந்த ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. (த-ரி4)




# 300 ஈராக்கியருக்கு சாவுத் தண்டனை வழங்கிய ஐ.எஸ்.

பக்தாத், பெப்.10
ஐ.எஸ். அமைப்பினர், ஈராக்கைச் சேர்ந்த 300 பேருக்கு மொசூலில், சாவுத் தண்டனை வழங்கியுள்ளனர்.

முன்னாள் இராணுவத்தினர், பாதுகாப்புப் பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரை ஐ.எஸ். அமைப்பினர் கொலை செய்துள்ளதாக, ஈராக்கின் இராணுவ ஊடகப் பேச்சாளர் முஹ்முத் சுராஜி தெரிவித்தார். மொசூல் நகரின் பல்வேறு இடங்களில் ஆயுததாரிகளால் இந்தக் கொலைகள் அரங்கேற்றப்பட்டுள்ளன. போராளிகளின் தடுப்பு முகாம்களிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் இவை அரங்கேறியுள்ளன. கடந்த வாரத்தில் ஊடகவியலாளர்கள் பலர் ஐ.எஸ். அமைப் பினரால் கடத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்,

அத்துடன் கொலைசெய்யப்பட்டவர்களின் உடல்கள் பாரிய குழி தோண்டிப் புதைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். அமெரிக்கக் கூட்டு படைகளின் தாக்குதலின் பின்னரே இந்தச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. ஐ.எஸ். அமைப்பினரின் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் இவ்வாறான வன்முறை சம்பவங்கள் தலை தூக்கியிருப்பதாக அவர் தெரிவித்தார். (த-ரி4)

# பிரேசிலில் களைகட்டிய பாரம்பரிய கலை விழா






றியோடி ஜெனிரோ, பெப்.10
பிரேசிலில் றியோடி ஜெனிரோ நகரில் வருடாவருடம் நடைபெறும் கானி வேல் கொண்டாட்டம் இந்தவருடமும் வெகு சிறப்பாக நடைபெற்றது. 5 நாள்கள் கொண்டாடப்படும் இந்த விழா ஈஸ்ட்டருக்கு 40 நாள்களின் முன்பு கொண்டாடப்படும். இந்தக் கேளிக்கை நிகழ்ச்சியைக் காண உலகெங்கிலும் இருந்து 5 லட்சம் சுற்றுலாப் பயணிகள் பிரேசிலில் கூடுவர்.

மிகவும் வண்ணமயமாக கலாசார ஆடைகளுடனும், நடனங்களுடனும் நடனக் கலைஞர்கள் பவனியாக வருவர். இந்த பவனியில் பாரம்பரிய நடனமான சம்பா நடனம் நடனக் கலைஞர்களினால் ஆடப்படும். கடந்த 5 நாள்களாக நடைபெற்ற விழா நேற்றுடன் நிறைவடைந்தது. ஆனால் இந்த வருடம் சிகா வைரஸின் பரவுதலால் ஆபிரிக்க நாடுகளுக்குச் சுற்றுலா செல்லவேண்டாம் என உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்திருந்தது. இதனால் இந்த வருட நிகழ்வில் குறைந்த எண்ணிக்கையில் தான் மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் பட்டது. இதற்கு முரணாக வழமைபோல் மக்கள் ஆரவாரமாக விழாவைக் கொண்டாடினர். றியோடி ஜெனிரோ நகர அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, நுளம்புகள் பரவும் அபாயம் உள்ள இடங்களைச் சுத்தம் செய்தனர். மேலும் நீர் நிலைகள் என்பவை சுத்திகரிக்கப்பட்டன. உடலைமூடிய ஆடையை அணியும்படி மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். தங்குமிடங்கள், வீடுகளில் ஜன்னலைப் பூட்டிவைக் கும்படி அறிவுறுத்தப்பட்டனர். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








பருத்தித்துறை

# குகன் ஸ்ரூடியோ

இடமாற்றம்




வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்குமுகமாகவும் 80ஆவது ஆண்டில் தடம்பதிக்கும் எமது நிறுவனமான குகன் ஸ்ரூடியோவை 10.02.2016 முதல் புனரமைக்கப்பட்ட கட்டடத்திற்கு (பருத்தித்துறை துறைமுகத்தின் முன்புறமாக/ கொட்டடிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்) இடமாற்றம் செய்து திறந்து வைக்கின்றோம் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள்

**அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.**

இல. 28 பிரதான வீதி,
பருத்தித்துறை.

021 - 226 3218
077 - 728 3706

உரிமையாளர்
குகன் ஸ்ரூடியோ,
பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களும் இலக்கியமும்

**தேவி பரமலிங்கம்**

எமது நாட்டில் என்றில்லாமல் உலகின் எந்தப் பாகத்திலும் வாழ்கின்ற மக்களும் இலக்கியங்களும் மூன்றாம்தர இலக்கியங்கள் பாற்பட்டும், உழுத்துப்போன நாகரிகப் பிடியினின்றும் விலகிவாழ எண்ணம் இல்லாதவர்களாகவுமே, இல்லாதவைகளாகவே வாழாவிருப்பதைக் கவனத்தில் கொள்ளலாம்.

எனினும் மக்களை வழிப்படுத்தவல்ல இலக்கியங்கள் இல்லாமலும் இல்லை. அத்தகைய இலக்கியங் கள் சந்தைப் பொருள்களுக்குச் சமனாக அல்லாமல் இலட்சியத்துக்காகப் படைக்கப்படுவதால் மக்கள் மத்தியில் வரவேற்பு இன்றிப் பெரும் பாலானவரின் கவனத்தைப் பெறாதவைகளாக ஒதுக்கப்பட்டும் விடுகின்றன. இந்த நிலையில் இலட்சிய நோக்கைக் கொண்ட இலக்கியங்களை உருவாக்கும் படைப்பாளிகள், பொருளாதார நிலைமையில் மோசமான தளத்துக்குத் தள்ளப்படுகின்றனர். அல்லாமல் அதிக விற்பனையையே நோக்காகக் கொண்ட வெளியீட்டாளர்களின் கவனம் இலட்சியப் படைப்பாளிகள் மீது விழாததாலே அவர்களால் படைக்கப்பட்ட படைப்புக்கள் மக்களிடம் சென்றடையாமல் பெட்டகங்களில் தூங்கி எலிகள், கறையான்களின் வயிற்றை நிரப்புவதால் ஆயுள்காலத்தை முடித்துக்கொண்டு சீரழிந்தும் விடுகின்றன.

இந்த நிலை நீடிக்கையில் இலட்சிய நோக்குடன் இலக்கியம் படைத்துக் கொண்டிருக்கும் படைப்பாளியின் வாழ்வு அதளபாதாளத்தை நோக்கிப் பயணிப்பதைக்கூற வேண்டியதில்லை. அத்தகு படைப்பாளிகளின் சிந்தனைகளை பொருளாதாரம் கழுத்தை இறுக அழுத்தும் வேளையில் அவற்றை மூட்டை கட்டி வைத்துவிட்டு அவர்கள் மக்கள் சமூகத்தைப் பல வீணப்படுத்தும் மூன்றாந்தர இலக்கியம் படைக்கத் தொடங்குவதும் இயல்பே!

**மூன்றாந்தர இலக்கியங்களின் பெருக்கம்**

இத்தகைய பெருந்தொகை மூன்றாந்தர இலக்கியப் படைப்புக்கள் மக்களிடம் ஊடுருவுவதற்கு மக்களே வழி வகுத்துக் கொள்கிறார்கள். என்பதை அவர்கள் இதுவரையில் உணர்ந்துகொண்டதாகவும் தெரியவில்லை. மக்களது அறிவு ரசனையை மட்டுமே தேடும் வானத்துப் பறவைகளாக அலைகின்றனவே அன்றி, அறிவுக்கு விருந்தாகும் நல் இலக்கியங்களைத் தேடுவனவாக இல்லாமல், மழுங்கடிக்கப்பட்டும் உள்ளன. இதற்குக் காரணம் சமூதாயத்தில் புதிய மாற்றத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என்னும் சிந்தனை இல்லாமல், அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கும் அடிமட்டச் சிந்தனைகள் எனலாம். மனிதனுடைய அறிவு வளர வளர அவன் பொருளாதார வளத்தால் மேம்பட்டும், அதனை ஸ்திரப்படுத்தி வாழவும், சிந்தனையைச் செயற்படுத்திநிமிர வேண்டியனவாகவும், தன்னை மாற்றிக்கொள்ளவேண்டிய தேவை உள்ளது.

அத்தகைய அவசியம் மக்கள் ஒவ்வொருவருக்கும் தோன்ற வேண்டியதைச் சிந்திக்காமல் இருப்போர் அதிகம் என்பதாலே மனித சமுதாயம் மேம்படம் வழியைப் புகலும் இலட்சிய நோக்கு உடைய இல்க்கியப் படைப்புக்களை விழுந்தடித்து வாங்காமல் மூன்றாந்தரக் குப்பைகளுக்கு வருவாயில் கணிசமான பணம் வீணடித்து நாட்டின் வளர்ச்சிக்கும் அதனூடே மக்கள் வாழ்வும் மேம்படுவதை சிந்திக்காதவர்களாக வாழ்ந்தும் வருகின்றனர்.

அதனால் இலக்கியச் சந்தையில், குப்பை இலக்கியங்களே முதலிடத்தைப் பிடித்துக் கொள்கின்றன. அத்தகைய படைப்புக்கள் வளர்க்கப்படுவதால் மக்கள் மத்தியில் சீரழிவு நாகரிகம் வளர்வதற்கு அந்த மக்களே காரணிகளாவதைப் பார்த்தோம்.

**இலக்கிய மாற்றத்தில் விழிப்பு**

இந்த நிலை நீடித்து வளர்கையில் நாட்டின் நற்பெயர் நச்சு இலக்கியங்களால் தூர்ந்து போவதையும் கண்டு கொள்ளலாம். நாட்டினது அல்லாமல் மொழியின் சிறப்பையும் உணரச் செய்வது வெளியாகின்ற தரமான படைப்புக்களின் தொகையிலும் வளர்ச்சியிலும் இருந்துதான். என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டபோதும், பெருமையுடன் அவர்கள் வாங்கிப் படிப்பதும் குப்பைப் படைப்புக்களையே என்கின் அது மிகைப்படாது. அதனாலேயே மனித வாழ்வின் மேம்பாட்டையும், ஸ்திரத் தன்மையையும் அழித்துக் கொண்டிருக்கும் நச்சுத் தன்மை வாய்ந்த, நயவஞ்சகக் கருத்தை விதைக்கும், மக்களுக்கு உதவாத இலக்கியங்களைப் புறக்கணிக்க வேண்டப்படுகின்றது. சமுதாயத்தை மேம்படுத்தும் சக்தி தம்மிடமே உண்டென்பதனை மறந்து விடக்கூடாது மக்கள்.

இலக்கியம் என்பது மக்களிடத்து இருந்து பெறப்படுகின்ற அனுபவங்களைத் திரட்டி திரும்பவும் மக்களிடம் புடம் போட்டுக் கொடுப்பதாலே மக்கள் சமுதாயத்தை வழி நடத்த வேண்டிய ஒன்றென்பர். நடக்க முடியாத சிந்தனைகளை கற்பிதங்களை விதைப்பதால் ஊறு விளைவித்து விடக்கூடிய இலக்கியங்களே நச்சு, மூன்றாம் தரக்குப்பை இலக்கியங்களெனக் கொள்ளப்படுகின்றன.

அத்தகு இலக்கியங்களால் மக்களுக்கு எந்த விதத்திலும் நன்மை ஏற்பட்டு விடமுடியாது. மாறாக அவரது ஆற்றல், அறிவுகளை மங்கவைத்தன. உள்ளடக்கங்களால் மழுங்கடித்து விடவே முடிகின்றது. அதன் பொருட்டு மூன்றாந்தர இலக்கியக் குப்பைகளைப் படைப்பவர்களை வளர்த்து விட்டும் வெளியீட்டாளர்களின் பணப்பெட்டியை நிரப்பும் பணி மட்டும்தான் ஏற்படுகின்றது எனக்கருதி விடக்கூடாது. அதன் தாக்கம் சமூதாயம், மக்கள், ஏன் நல்லிலக்கியத்தைக்கூட படுகுழி தோண்டிப் புதைத்துக் கொண்டே தீரும் எனலாம்.

இதுவரை பொதுவாகப் பார்த்த பார்வையை விசாலித்து நோக்கின்,, எமது மக்களையும், இலக்கியங்களையும் ஆராயப்பார்வையை ஆழப்படுத்த வேண்டிய தேவை உண்டு. ஏனைய தேச மக்கள் பாரம்பரியத்தைப் போன்றே எமது பாரம்பரியமும் டச்சு, பிரித்தானியரின் பிடிக்குள் வாழ்ந்தமையால் இரண்டும் கெட்ட, ஒருவகைக் கலப்பு நாகரிக வளர்ச்சி எம்மிடம் ஏற்பட்டுள்ளது என்பதை உணர வேண்டும். எம்மவர் அந்தந்த நாடுகளுக்குச் சென்றும், வந்தும் கொண்டிருக்கும் நிலை நீடித்துக் கொண்டிருக்கும் காரணங்களால், மேற்குலகில் புதிது புதிதாகத் தொடங்கும் நாகரிக முறைகள் இங்கே இறக்குமதியாகிச் சுயம் இல்லாத வாழ்க்கை முறையே பரிணமித்துக் கொண்டுள்ளது.

**மேலைத்தேய நாகரிகத் தாக்கங்கள்**

மக்கள் மத்தியில் மலிந்துள்ள இத்தகைய பாய்ச்சல் [illegible] கெடு[illegible] காரணிகளாகவும் இருக்கின்றன. விரிவாகச் சொல்லப் புகின், கீழ்க்கண்ட விதம்கொள்ள வேண்டும். எம்முடைய சுயநாகரிகம் என்னும் தனித்துவம் இன்மையால், உடை, உணவு, ஆபரணங்களென்ற சகலதையும், வெளிநாடுகளில் இருந்து எதிர்பார்ப்பதால், உள்ளூர் உற்பத்திகளைச் சிந்தனைக்கு எடுக்காமல் எமது செல்வங்களை அந்நிய ஆடம்பரப் பொருள்களுக்காகக் கொட்டிக் கொடுத்து வெறுமையான நிலைமையை உருவாக்கியதே.

இந்தப் பாதிப்பு ஆரம்பரப் பொருள்களில் மட்டுமன்றி, இலக்கியங்களிலும் ஊறு விளைவித்தமையை அவதானிக்கலாம். எமது இலக்கியப் பாரம்பரியம் மிகவும் குறுகிய காலகட்டத்தையே உள்ளடக்கியது. அதன் முன்னர் எங்கள் வாசிப்பு நுகர்வுத் தேவைகள் தென்னிந்திய தமிழகத்தில் இருந்து இறக்குமதியாக்கும் படைப்புக்களைக் கொண்டே நிறைவேறின.

ஆற்றல் வாய்ந்த படைப்பாளிகள் எம்மிடையே இருந்தும், வெளியீடு செய்வதற்குரிய சாதனங்கள் இல்லாமையாலேயே அந்த நிலை தோன்றியது. தற்காலத்தில் இங்கே படைப்புக்களைப் பிரசுரித்து வெளியிடக்கூடிய சாதனங்கள் இருந்தபோதும், இன்னமும் எமது படைப்புக்களை எம்மவர் இரு கரங்களையும் நீட்டி ஆதரவு நல்கின்ற வாய்ப்புத் தோன்றக் காணோம். தமிழக எழுத்துக்களை வாசித்து பழகிப் போனவர்களுக்கு அந்தப் படைப்புக்களே திருப்தியை வழங்கும் என்னும் அபிலாசைதான் இருந்தும் வருகிறது.

> “இலக்கியம் என்பது மக்களிடத்து இருந்து பெறப்படுகின்ற அனுபவங்களைத் திரட்டி திரும்பவும் மக்களிடம் புடம் போட்டுக் கொடுப்பதாலே மக்கள் சமுதாயத்தை வழி நடத்த வேண்டிய ஒன்றென்பர். நடக்க முடியாத சிந்தனைகளை, கற்பிதங்களை விதைப்பதால் ஊறு விளைவித்து விடக்கூடிய இலக்கியங்களே நச்சு, மூன்றாம் தரக்குப்பை இலக்கியங்களெனக் கொள்ளப்படுகின்றன.”

**அறுபதுகளில் நச்சு இலக்கியத் தடை**

எமது பொருளாதாரத்தை அந்நிய நாட்டு மூன்றாந்தர இலக்கியக் குப்பைகளுக்குக் கொட்டிக் குவித்தமையை 1960களில் உணர்ந்து, அப்போதிருந்த சிறிமாவோ அரசால் அந்தச் சஞ்சிகைகள், நூல்களுக்கும் இறக்குமதி வரையறை போடப்பட்டமை எமது நாட்டுப் படைப்பாளிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்தபோதும், மேற்கத்தையப் பொருளாதார நெருக்கடியால் அச்சுத்தாள் விலையேற்றம், அச்சகக்கூலி உயர்வு போன்றவை அந்த வேளையில் எமது இலக்கியப் படைப்பாளிகளின் மடியைச் சுரண்டிக் கொண்டிருந்த நெற்றியடி, பின்னாலே துரத்தி வந்ததும் நினைவை விட்டு அகலாது.

இறக்குமதி இலக்கியக் குப்பைகள் மட்டுப்படுத்தப்பட்டாலும், எமது நாட்டில் மலிந்த அந்நிய நாகரிகத்தைப் புகுத்தும் அதே போன்ற நச்சு இலக்கியக் குப்பைகள் மக்கள் ரசனைக்கு விருந்தளித்து அறிவைச் சூனியம் செய்த கெடுமதி சூழ்ந்ததும் மறப்பதற்கில்லை.

மூன்றாந்தர இலக்கியங்கள் மக்களிடையில் கலாசார சீரழிவுகளைத் தோற்றுவித்து பாழாக்கக் காலநேரங்கள் செல்லாதென்பதையும், நல் இலக்கியப்பிதாமகர் உணர்ந்து செயற்பட முடிவதில்லை. சாதாரண வாசக மக்களது ரசனைகளை அறிந்து தீனி போட்டுப் பணப்பெட்டியை நிரப்ப எத்தனிக்கும் வெளியீட்டாளர், படைப்புக்கள், படைப்பாளிகளைகள் இனம்கண்டு ஒதுக்கும் வரையில், தீயசக்திகளின் ஊடுருவல் இலக்கியங்கள் ஊடாக அடிமைப்படுத்தும் நிலைமை நீடித்துக் கொண்டுதான் இருக்கும். *(தொடரும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு செயலகக் வருடாந்த பண்பாட்டுப் பெருவிழா











புதுக்குடியிருப்பு பிரதேச செயலக வருடாந்த பண்பாட்டுப் பெருவிழா நேற்றுப் பிற்பகல் 2.00மணியளவில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இருந்து காவடி, கோலாட்டம், ஒயிலாட்டம், கும்மி, பண்பாட்டு நடனம் ஆகியவற்றை நிகழ்த்தியவாறு பண்பாட்டு ஊர்தி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தை வந்தடைந்ததுடன் விழா ஆரம்பமானது. புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடந்த இந்தநிகழ்வின் முதல் நிகழ்வாக மங்கல விளக்கேற்றலும் அதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனமும் இடம்பெற்றன. நடனத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவிகள் நிகழ்த்தினர். வரவேற்புரையை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர். வீ. பிரதீபன், நிகழ்த்தினார்.

தொடர்ந்து தலைமை உரைய்ய புதுக்குடியிருப்பு பிதேச செயலர் செ. பிரணவநாதன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி. வனஜா செல்வரட்ணம், உதவி அரச அதிபர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளரும் வரலாற்றாய்வாளருமான அருணா செல்லத்துரை ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அத்தோடு கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெற்றது. இந்த நிகழ்வில் திருமதி. கருணாதேவி அற்புதராஜா, திருமதி பிலோமினா ஜேசுராஜா, கலாபூசணம் நடராஜா இராமநாதன், கலாபூசணம் மயில்வாகனம் இராசதுரை, வைத்தியர் இ. மாதவராஜா, இராசா திருமேனி, சு. நகேஸ்வரன், யோ. புரட்சி, ஜெயம்ஜெகன், அன்னலிங்கம் சதீஸ்வரன் ஆகிய கலைஞர்கள் கௌரவிக்கப் பட்டனர்.

தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களைப் பறைசாற்றும் பல கண்ணுக்கினிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன், சிறப்புரையை சிரேஷ்ட ஊடகவியலாளரும் வரலாற்றாய் வாளருமாகிய அருணா செல்லத்துரை வழங்கினார். அத்தோடு 'புதுவையாள்' என்னும் நூல் வெளியீடும் சிறப்புற இடம் பெற்றது.

(ரி-7)

# இறைவனின் இரக்கத்தினால் கிடைத்த கொடை தவக்காலம்

இரக்கத்தின் ஆண்டாகத் தரப்பட்ட இவ்வாண்டில் மென்மேலும் எம் அனைவர்மேலும் இரக்கம் பொழியப்பட்ட இறைவனின் இரக்கக் கரங்கள் எம் அனைவரையும் காத்து வழிநடத்த இத் தவக்காலம் எம்மை மகிழ்வுடன் வரவேற்கின்றது.

உங்கள் உடைகளையல்ல, உள்ளங்களையும் கிழித்துக்கொண்டு கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள் எனும் யோவேல் இறைவாக்கினரின் அர்த்தமுள்ள செய்தியை உள்ளத்தில் இருத்துவோம். தகுந்த வேளையில் நான் உனக்குப் பதிலளித்தேன். விடுதலை நாளில் உனக்குத் துணையாய் இருந்தேன் என்னும் இறைவனின் ஆறுதல் வார்த்தையை மனதிலிருத்துவோம். இதுவே தகுந்த காலம். இன்றே மீட்பு நாள் என்ற தூய பவுலின் வார்த்தைகள் இத்தவக்காலத்தில் எமது காதுகளில் எப்போதும் கேட்கட்டும். இந்தப் புனித தவக்காலத்தில் மேன்மையை அர்த்தமுள்ளதாக்க வெளிவேடமற்ற இரக்கச் செயல்கள், உள்ளார்ந்த மனமாற்றம், அர்த்தமுள்ள நோன்பு, போன்ற தியாகச் செயல்களைச் செய்து கடவுளுக்குரிய தூய வாழ்வு வாழ்வோமாக.




இறைவனின் இரக்கத்தால் எமக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்ட மாபெரும் கொடை இந்தத் தவக்காலம் என்பதை எமது அன்றாட வாழ்வில் உணர்ந்து கொள்வோம்.

அருட்தந்தை ச. சத்தியராஜ்,
பங்குத்தந்தை, இறம்பைக்குளம்
புனித அந்தோனியார் ஆலயம், வவுனியா

# கண்ணகி நீதி கேட்டு வழக்குரைத்ததும், நீதியை – உண்மையை நிலை நிறுத்தியதும் சோழன் அவையிலா?

நெடுந்தீவு ஐ.யாதவராசன்

காளிதாசனின் 'சாகுந்தலம்' பாரத நாட்டின் மண்ணோடும், மக்களோடும், மன்னரோடும், வரலாற்றோடும் தொடர்புபட்ட மகாகாவியம்.

இளங்கோவின் சிலப்பதிகாரம் - வடவேங்கடம் முதல் தென்குமரி வரையான - தமிழ் மண்ணோடும், முடிவேந்தர்களான சோழ, பாண்டிய, சேரர்களோடும் (கதை நிகழ்வின்படி) தொடர்புடையது. அந்த வேந்தர்களின் அறன், மறம், ஆற்றல், ஆணை முறைமை, குடிபுரக்கும் இறைமை, ஒழுக்கம், ஊக்கம், ஒப்புரவு என விரிந்து ஒளிர்வதால் தான் 'நெஞ்சை அள்ளுஞ் சிலப்பதிகார மென்றோர் மணியாரம்' என்றான் மகாகவி பாரதி.

நாளது ஜனவரி 26இல் வெளியான உதயனின் 17ஆம் பக்கத்தில் 'கண்ணுவரின் சாபம் துஸ்யந்தனுக்கா? (சாகுந்தலம் பற்றி ஒரு கண்ணோட்டம்) என்ற பதிவின் நிறைவில் ' இது தவறென்றால் அன்று சோழக் கொற்றவனிடம் நீதி கேட்டு உண்மையை நிலை நிறுத்திய கண்ணகியால் அவன் கதிகலங்கி நிற்கவில்லையா? என்ற சொற்றொடர் கண்ணுற்றேன்.

'சோழக் கொற்றவன்' என்பது தவறு.

அக்கொற்றவன் பாண்டியன்.


சான்றுகள் (அ) சிலம்பின் 2 - மதுரைக்காண்டம் 11ஆவது காடுகாண் காதை முதல் 23ஆவது கட்டுரைக் காதை வரை.

(ஆ) வழக்குரை காதை 'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே

(வரி : 66)

(இ) யானோ அரசன் யானோ கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங்காவல்
என் முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுள்
(75,76,77)

மூன்றாவது வெண்பா:
மெய்யிற் பொடியும் விரிந்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்– வையைக்கோன்
கண்டளவே தோற்றான் அக்காரிகை தன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மனதில் இடம் பிடித்த மயான காண்டம்

தி.சிவானந்தம், அரியாலை





நீண்ட நாள்களுக்குப் பிறகு, இல்லை.... இல்லை... நீண்டகாலத்துக்குப் பிறகு அரிச்சந்திரா மயானகாண்டம் இசை நாடகம் பார்க்க சந்தர்ப்பம் கிட்டியது. செயற்றிறன் அரங்க இயக்கத்தின் நாடகத்திருவிழா இந்த முறையும் நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள பாணன் குளம் அருகே உள்ள அரங்கில் 12 நாள்கள் நடைபெற்றன. அதில் மயான காண்டம் இசை நாடகம் கடந்த செப்ரெம்பர் 12 ஆம் திகதி மாலை நிகழ்வாக அரங்கேறியது. யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தினரால் நிகழ்த்தப்பட்ட அந்த நாடகத்தை கலாபூசணம் வே.சிதம்பரநாதன் அண்ணாவியார் நெறிப்படுத்தி இருந்தார். 65 ஆம் ஆண்டில் நான் லோகிதாசனாகவும், அரியாலையூர் நடிக கலாமணி செல்வரட்ணம் சந்திரமதியாகவும், ஹார்மோனியச் சக்கரவர்த்தி மு.திரு நாவுக்கரசு அரிச்சந்திரனாகவும்தோன்றி முதல்முறையில் நடித்த மயான காண்ட மேடை அனுபவம் என்மனக் கண்ணில் தோன்றி மறைந்தது.

நாடகம் நிகழ்த்தப்பட்ட மேடை வழக்கமான படச்சட்ட மேடையைப் போலல்லாது மூன்று வட்டங்களை மூன்று உச்சிகளிலும் கொண்ட முக்கோண அமைப்பைக் கொண்டதாக அமைந்திருந்தது. சீன்கள் தட்டிகள் இல்லை. இந்த அரங்கிலே எவ்வாறு நாடகத்தை நிகழ்த்துவது என்ற எண்ணம் என்னுள்ளே தோன்றி இருந்தது. ஆனால் நாடகம் தொடங்கிய பின்னர் அவ்வாறானதோர் வினாவுக்கு இடமே இல்லாமல் அரங்கோடு நாடகம் இணைந்து விட்டது.



மகாரிஷி விஸ்வாமித்திரரின் வரவோடு நாடகம் ஆரம்பமாகின்றது. அவருடைய தோற்றம், ஆடை அலங்காரம், கம்பீரமான பாடல் என்பவை மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. முகபாவம் சற்று மெருகூட்டப்பட்டிருக்கலாம். சத்தியகீர்த்தி பாத்திரம் சோடை போகவில்லை. இருப்பினும் பாடல்களில் சில இசை நுணுக்கங்களைக் கவனித்திருக்கலாம் என்று தோன்றியது. அயலாத்துப் பிள்ளைகளாக வேடம் பூண்டவர்கள் மிகவும் பெரிய தோற்ற முடையவர்களாக இருந்தமை சற்று பொருத்தக் குறைவாக இருந்தது. லோகிதாசன் இறந்த செய்தியைச் சந்திரமதிக்குக் கூறும்போது, எந்தவித உணர்வையும் காட்டாது இருந்தமை என்னவோபோல் இருந்தது. காலகண்ட ஐயர் பாத்திரம் மிகவும் பொருத்தமானதாகவும் சிறப்பாகவும் அமைந்திருந்தது.

நடிக கலாமணி செல்வரத்தினத்தைப்போல் பெண் பாத்திரத்துக்குரிய நடிகர் இனி எவர் வரப்போகின்றார்கள் என்ற ஏக்கம் என்போன்றவர்களுக்கு இருந்தே வந்துள்ளது. ஆனால், அன்றைய நாடகத்தில் சந்திரமதியாகத் தோன்றி நடித்தவர் தனது பாத்திரப் பெறுமானத்தை உணர்ந்து சிறப்பாக நடித்து அனைவரினதும் பாராட்டையும் பெற்றார். பாடலில் தாளப்பிடிப்பு, உடல் அசைவுகள் என்பவற்றில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். மற்றும் சற்றுத் துரிதமாக, கனதியுடன் வசனங்கள் பேசியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். நல்ல எதிர்காலம் அந்த நடிகருக்கு உண்டு.

அரிச்சந்திரனாக நடித்தவர் ஒரு பண்பட்ட கலைஞனாக மேடையில் தன்னை வெளிப்படுத்தியிருந்தார். பாடல்கள், சுருதிப்பிடிப்பு, தாளப்பிடிப்பு, பாவம் என்பவை சிறப்பாக அமைந்து ரசிக்க வைத்தன. இசைஞானம் கைவரப்பெற்ற கலைஞராக அரங்கிலே ஆளுமையுடன் தொழிற்பட்டார். சந்திரமதியை ஏசிப்பாடும் காட்சியில் மகனே, ஆசை மகனே என்ற பாடல் வரிகள் இன்னும் துரிதமாகப் பாடப்படல் வேண்டும். சுடுகோலை நிலத்தில் குத்தி, தனது கோபத்தை இன்னும் சிறந்த முறையில் வெளிப்படுத்தி இருக்கலாம். மயானக் காட்சி, அரங்கில் அமைக்கப்பட்டிருந்தால் காட்சி முழுமையடைந்து பார்ப்பவர்களுக்கு முழுமையைக் கொடுத்திருக்கும்.

ஒட்டுமொத்தமாக இந்த நாடகத்தைப் பார்த்தபோது இசை நாடகம் இளைய தலைமுறையின் கைகளில் உயிர்ப்புடன் உலாவந்து கொண்டிருக்கின்றது என்றே சொல்லத் தோன்றுகின்றது. ஓட்டமும் நடையுமான வாழ்வின் நெரிசல்களுக்கிடையே பாரம்பரிய நாடகங்களை முனைந்து மேடையேற்ற எத்தனிக்கும் நாட்டார் வழக்கியற் கழகம் போன்ற அமைப்புக்களுக்கும், பழைய பொக்கிசங்களான பாரம்பரிய வடிவங்களைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் கலைஞர்களுக்கும் பார்வையாளர்களாகிய நாம் என்றென்றும் ஆதரவை நல்க வேண்டும்.











## மாதாந்த 'கலைநிலா முத்து'

வவுனியாவில் கடந்த சனிக்கிழமை வவுனியா வடமாகாண கல்வியமைச்சினால் மாதாந்த கலைநிலாமுத்து நிகழ்வு வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் கொண்டாடப்பட்டது.

பிரதமவிருந்தினராக வடமாகாண சுகாதாரஅமைச்சர் ப.சத்தியலிங்கமும், சிறப்புவிருந்தினராக வடக்குமாகாணகல்வியமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரனும் கலந்து கொண்டனர். வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் இதில் கலந்து கொண்டார்கள்.

மாற்று வலுவுடையவர்களுக்கான நிகழ்ச்சி, சிங்கள கலாசார நிகழ்ச்சி, இசை நிகழ்ச்சி, கிராமிய ஆடற் கதம்பம், தெம்மாங்கு, பின்னற் கோலாட்டம், இஸ்லாமிய நிகழ்ச்சி, நாட்டார் இசை, இசை நாடகம், வில்லுப்பாட்டு நாடகம் ஆகிய கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் முழுநிலா முத்து என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. (402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்ணபுரம் சுந்தரேசர் புராணமும் பொருணயமும்

பேராசிரியர், கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன்
சப்ரகமுவ பல்கலைக்கழகம்

*(திண்ணபுரம் சுந்தரேசர் புராணமும் பொருணநயமும் என்ற தலைப்பில் கடந்த வார புதன்பொய்கையில் வெளியான கட்டுரையின் இறுதிப்பகுதி இது)*

தவம்புரி சருக்கத்தில் இடம் பெறும் உபதலைப்புக்கள் வருமாறு:- துர்வாச முனிவர், அகத்தியர், தினகர முனிவர், ஆண்டி முனிவர், ஆண்டியர் பிறப்பு, இலங்கைத் தலங்களை வழிபடுதல், வியாவில், ஐயனார் கோயிலின் அழிவுகண்டு கலங்குதல், அரசடி மருங்கெலாம், திருவுருவத் தைத் தேடிக் காணாமை, அரச மரத்தின் கீழே சூலத்தை நாட்டுதல், அம்பலவி முருகர் அறிதல், ஐயனார் வடிவத்தை எடுத்தல், முருகர் திண்ணபுரத்துக்கு வந்து ஐயனார் வடிவைக் காணுதல், ஐயனார் கிடைத்த் வரலாற்றை அறிதல், தொண்டர்கள் வருதல், ஐயனார் வடிவத்தை தாபித்துப் பூசனை செய்தல், சிவமுருகர் சிவப்பற்றில் மேம்படுதல், திருக்கோயிலமைக்க வேண்டுதல், என்பனவற்றுடன் தவம்புரி சருக்கம் முடிந்தது.

இனி, ஐயனார் கோயில் காண் சருக்கம் கொண்டுள்ள செய்திகள் வருமாறு:- இதிலே வியாவில் ஐயனார் வரலாறு, குளக்கோட்டன் கோயில் கட்டுதல், முத்துமாணிக்கச் செட்டியார், திருவுருவங்களைக் கொண்டு வருதல், குடமுழுக்குக் காட்டுதல், போர்த்துக்கீச அரசு வருதல், போர்த்துக்கீசர் கோயில் இடிக்க வந்து இறத்தல், ஒல்லாந்தர் கோயிலை இடிக்க வந்தது என்பவையாகும்.

போர்த்துக்கேய ஒல்லாந்தர் காலங்களில் சைவர்கள் திருநீறு தரிப்பது பெரிய குற்றம். அவர்களுக்கஞ்சிப் பகலிலே சிவபூசை செய்யாது இரவிலே மறைவாகச் செய்யினும் அதுவும் அறிந்தாற் குற்றம். தமது அருமைப் பிள்ளைகளுக்குச் சிவபெருமானது திருநாமங்களைப் பெயராக வைப்பதும்.அந்தப் பெயரை வழங்குவதும் பெரிய குற்றம். கோயில்களில் பூசை செய்வது குற்றம். சிறந்த விரதங்களை அனுஷ்டிப்பதும் தீராத 'குற்றம். ஒப்பற்ற சிறப்புடைய சைவர்களுக்கு ஒல்லாந்தர் செய்த சிறுமைகளைச் சொல்லக்கூடுமோ? அந்தணர் ஐயனாரை வேறிடத்தில் வைத்தல். , ஐயனார் வடிவைத் திண்ணபுரத்திலிடுதல்.அம்பலவி முருகர் திருவருட் குறிப்பில் வாழ்தல், அம்பலவி முருகர் இல்லற நெறியில் நிற்றல், அம்பலவி முருகர் இயல்புகள், ஆண்டி முனிவரும் அம்பலவி முருகரும் திருவருட் பொலிவுடன் விளங்குதல்,குருவைப் பிரிந்த முருகரின் துயரம், குருமொழி சிந்தையில் வளர்தல், கோயில் சமைக்கத் துணிதல்,அடியீடு செய்தல், ஞாயிறு தோன்றுதல், கோயில் நிறைவேறுதல், சிவமுருகர் அடைந்த இன்பம் என்பவை பற்றி ஈழத்துச் சிதம்பர புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


வரைதல், திருவாதிரை விழா வழக்கம், தில்லையைப்போல நிகழ்வித்தல், தில்லைக் கூத்தனை ஐயனாரிற் காணுதல், ஐயனார் வணக்கம் என்ற செய்திகளுடன் ஐயனார் கோயில் காண் சருக்கம் முற்றிற்று.

அடுத்து, சுந்தரேசர் கோயில் காண் சருக்கத்தில் இடம்பெறும் அம்சங்களை நோக்குவோம்.

சிவன் கோயில் கட்டத் தொடங்குதல், தில்லைக் கூத்தனை எழுந்தருளுமாறு வேண்டுதல்,

இதன் பின், தீயரும் நல்லவராதல், பாம்புகள் அருளின் சாயல், சிவலிங்க தாபனத்தை வேண்டுதல், சிவலிங்கம் பெறுதற்கு விழைதல், கனவிலே சிவபெருமான் தோன்றுதல், தில்லைக்குப் போகுமாறு பணித்தல், சிதம்பரத்துக்குப் பயணப்படுதல், தில்லை சேருதல், காதலோடு வழிபடுதல், சிற்பனைத் தலைப்படுதல், கூத்தன் கனவில் தோன்றுதல், சிற்பன் சிவமுருகரைச் சந்தித்தல், சிவமுருகர் எய்திய பேருவகை, சிவமுருகர் வீடு திரும்புதல், ஞாயிறு தோன்றுதல், குடமுழுக்குச் செய்வித்தல், ஈழத்துச் சிதம்பரமாக வேண்டுதல், திண்ணபுரத்து சுந்தரேசப் பெருமானை சிவமுருகர் இறைஞ்சுதல், சிவமுருகரடைந்த பெருமகிழ்ச்சி, திண்ணபுரத்தவரெய்திய மகிழ்ச்சி, அன்று முதல் சிவவாழ்வு ஓங்குதல், ஏனைய வடிவங்களை மண்டபத்தில் வைத்தல், வாழ்த் துரைத்தல் எனும் விவரங்களுடன் சுந்தரேசர் கோயில்காண் சருக்கம் முற்றுப்பெறும்.

இனி, இறை சேருமைவேள் சருக்கம்எனப்படும் சோமாற்கந்தச் சருக்கம் பற்றிய உபதலைப்புக்கள் வருமாறு: சிவமுருகர் சோமாற்கந்த வடிவம் அமைப்பிக்க விரும்புதல், தில்லைக்குப் பயணமாதல், திருவடிவம் செய்யப் பொன் வழங்குதல், கருவோட்டம் சிதைவுறல்,



சிவமுருகர் தில்லைக் கூத்தனை உறைப்ப வேண்டுதல் , திருவருளை வியத்தல், கருச்சிதையாது அமைதல், சித்தர் வடிவத்தை வியத்தல், சிவமுருகர் சிவனடியிற் கலத்தல், எல்லோரும் மனந்தேறுதல், சிவத்தொண்டர்கள் கேள்வியுற்று வருதல் என்பனவாகும். இது குறித்த பாடல் வருமாறு:-

ஈழமெனும் வளம்பதியுஞ் சிவபூதி யென்பரால்
நாளுமிவர் சிவவாழ்வில் நன்றுயர்ந்தா ரென்பரால்
வாழியில ரன்வுக்கு வரம்பில்லை யென்பராற்
நாளினிலே கலந்தார் சீர் தவப்பெரிதே யென்பாரால்

இதனைத் தொடர்ந்து தில்லை நகர்வீதி அழகில் பொலிதல், எல்லாரிடமும் விடை கொள்ளுதல், அவ்வடிவையிங்கு வரவிடுதல், கடலில் கலம்கவிழ்தல், இருவரும் கடலிலே தத்தளித்தல், குற்றிபற்றுக் கோடாதல், அதிராம் பட்டினக் கரையிற் சேர்தல், ஊரவர் உறுதுணையாதல், இருவரும் தமது வரலாறு கூறுதல், இருவரும் காரைநகரை அடைதல், திருவடிவம் தீதின்றி வந்தமை கூறல், சண்முகத்தார் திருவருளை வியத்தல், ஊரவர் எய்திய வருத்தம், அன்னதானம் முதலியன செய்தல், நண்பரை வழிவிடுத்தல் கடவுள் மங்கலஞ் செய்தல், அந்த வடிவம் அருள் வடிவம், வீடுபேறு தருவது, சிறுத்தொண்டருக்குக் காட்சி கொடுத்தது, மகப்பேறு தருவது, முசுகுந்தன் பூமிக்குக்கொண்டு வந்தது, உற்சவ மூர்த்தமாதல், தேரில் வலம் வருதல், சிவன் கோயிலின் தனிப்பெருமை வணக்கம் என்னும் உபதலைப்புக்கள் சோமாற்கந்தச் சருக்கத்திலே இடம் பெற்றுள்ளன.

இனி, திருக்கோயில் பாதுகாவலர் சருக்கத்தில் இடம்பெறும் அம்சங்கள் வருமாறு: துரையப்பர், ஆண்டியையா, முருகேசர், பாதுகாப்பு, காவலர் மரபு வழிவழித்தழைக, பாதுகாவலர் அடையும் பயன், திருப்பணிச் சபை என்பன. அந்தணர் பூசைபுரி சருக்கம் என்னும் பகுதியில் இராமசாமி ஐயர், கலியாண சுந்தரக் குருக்களும் அவர் மரபினரும், மங்களேசுவரக் குருக்கள் காரை நகருக்கு வந்து வியாவிலின் அர்ச்சகராதல், சூரிய நாராயணக் குருக்கள், முத்துமாரியம்மை கோயில் கட்டுதல், கனகசபாபதிக் குருக்கள், கனகசபாபதிக் குருக்கள் வியாவிலை விட்டு மணற காட்டுக்குப் போதல், முத்தையா தோற்றம் என்பன உள்ளன.

விழாவயர் சருக்கத்தில், மார்கழித் திருவாதிரை விழா, தில்லையில் போலத் திண்ணபுரத்தில் திரு வெம்பாவை விழா நிகழும். ஐந்துதேரும் வீதி வலம் வருதல், இலங்கையிலுள்ள சைவரெல்லாம் விழாக்காண வருவர், கூத்தப்பிரான் திருமுழுக்குச் சிறப்பு, திருமுழுக்கின் பயன், திருவாதிரை விரதப்பேறு, என்பன திண்ணபுரத்தில் நிகழ்கின்றன. கூத்தபிரானது வலத் திருக்கரங்கள் இரண்டின் பின்னே உள்ளது உடுக்கையைத் தாங்கும். கூத்தப் பிரான் சுழன்றாடும்போது,இந்த உடுக்கையினின்றும் எழும் நாதத்தினால் சொல்லுலகமும், பொருளுலகமும் உருவாகின்றன என்று நூல்கள் கூறும். முன்னேயுள்ள மற்றைய திருக்கரம் உயிர்களுக்கு அபயம் அருளும். இது பாம்புக் கங்கணத்துடன் பதாகை முத்திரை காட்டியிருக்கும். இடத்திருக்கரங்கள் இரண்டில் பின்னேயுள்ளது நெருப்பகலைத் தாங்கும். திருவடிகள் இரண்டையும் ஊன்றி திருவடி உயிர்களை உலக போகங்களில் அமுத்தி நுகர்வித்து அதுவே வாயிலாக ஆணவத்தை வலிகெடுப்பது. ஊன்றிய திருவடிக் கீழே விழி பிதுங்க உடல் நெரியக் கிடக்கும் முயலகன் ஆணவத்தின் வடிவமென்றும் கூறுவர். தூக்கிய திருவடி உள் வளைந்து திருவடிகளைத்தஞ்சமாயடைந்த உயிர்களுக்கு முத்தியின்பத்தைக் கொடுக்கும்.


இன்னும் அம்மையின் திருவுருவம், திருக்கூத்தர் திருப்புன்முறுவல்,மணிவாசகர் கடையும் தொண்டும், மணிவாசகர் விழா, சிவநெறித் தொண்டரின் விரிவுரைகள், திருவெம்பாவை நாள்களில் அன்னதானம், மார்கழிச் சட்டியில் பிள்ளையார் விழா, அரசடிச் சிவஞான வைரவர் பொங்கல், முத்தலைச் சூலம், வழிபடுவோர் அடையும் பயன் ஆண்டியார் வைத்து வழிபட்ட சூலம், அடியார்கள் பொங்கல் செய்தல், பொங்கல் செய்யும் முறை, தின கான்பிட்டி வைரவ சுவாமி பொங்கல், தைப்பூசத் திரு விழா,சிவராத்திரியில் நான்கு சாமத்திருமுழுக்கும் வழிபாடும், சிவராத்திரி அமாவாசையிலும்,ஆடி அமாவாசையிலும் ஆருந் தீர்த்தம், ஊர்ச்சாந்தி முதலியன,திருக்கோயிலில் விழாக் காலங்களில் அழகுபடுத்தப்பட்டுள்ள கொடிமரம் சிவனைக் குறிப்பதென்று அறிவாய், கொடிமரத்தில் ஏற்றப்படுஞ் சீலையும்,அந்தச் சீலையின் உருவந்தோன்ற வரையப்பட்ட பசுவும், நிலைபெற்ற உயிர் என்று அறிவாய்.

அந்தச் சீலையுடன் சேர்ந்திருக்கும் தருப்பைக்கயிறு உயிரை வருத்தும் பாசமாகும். கொடிமரமும் அதிலே சுற்றப்பட்ட சீலையும், இடபவாகனத்தையுடைய சிவனும்,நிலைபெற்ற உயிரும் முத்தி நிலையில் இரண்டல்லாத தன்மையுடையன என்பதைக் காட்டும் என அறிவாய்.

இந்த விளக்கத்தைத் தொடர்ந்து பலிபீடம், நந்தி, சிவலிங்கம், கொடியேற்றம் முதலிய விழாக்களின் உட்பொருள், திருத்திண்ணபுரத்தில் கொடியேற்றம் முதிலிய விழாக்கள் நிகழ்தல், சந்திரசேகரப் பெருமான் திருவுலா வருதல், வேட்டைத் திருவிழா, தேர்த்திருவிழா, தேர்த்திருவிழாவில் கருஞ்சாந்தணிதல், தீர்த்தத் திருவிழா, விழாக் காணும் பயன், திருமண விழா, பொன்னூசலாடுதல், சண்டேசுவரர் விழா, பெருங்குரவர் விழா, ஐயனார் வேள்வி விழா, ஆடிப்பிறப்பில் சோமாற் கந்தர் திருமுழுக்கு, ஆடித் திங்களின் அம்மை திருவிழா, நவராத்திரி விழா, அம்மைக்கு மகா நவமியிந் திருமுழுக் கட்டுதலும், மா நோன்பு விழாவும், ஐப்பசி வெள்ளித் திருமுழுக்கு, கந்தசஷ்டி விழா, சூரன்போர்த் திருவிழா, ஐப்பசிப் பூரணையில் அன்னமுழுக்கு, கார்த்திகைச் சோம வாரத் திருவிழா, விளக்கீட்டு விழா, பிரதோட விழா, பிரதோடத்தில் பிரதோட நாயகர் வழிபாடு, இந்தப் பதியில் இந்தவிழா நிகழும் முறைமை நால்வர் குருபூசை விழா, சுந்தரேசப் பெருமான் கோயில் வழக்கங்கள், சுந்தரேசப் பெருமான் வணக்கம் என முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்ணம் தீட்டுவோம்...



## குரு

அறிவைத் தருபவர் ஆசான்!
அறிந்து கொண்டிடு நீ தான்
அறத்தைச் சொல்வார் அவர்தான்!
அறிந்து நடந்திடு நீதான்

அவரை மதித்து நடந்திடு!
அன்பால் போற்றி வணங்கிடு!
இறையைப் போலே நினைத்திடு!
இதயம் மகிழ வாழ்த்திடு!

வணக்கத் துக்குரியவர் ஆசிரியர்!
இணக்கமுள்ள நேசனவர்!
பிணக்குகள் வேண்டாம் பிள்ளைகளே!
இனிக்கப் பேசும் பிள்ளைகளே!



# கடமை உணர்வு

மூன்று அறைகள் கொண்ட எங்களது வீட்டில்நடு அறையில் ஒரு சாமிப்பட மேடை அமைத்திருந்தார் அம்மா. விநாயகர், அம்பாள், முருகன் என தெய்வப் படங்களை அழகாய் மாட்டி பூமாலைகள் சூட்டியிருந்தார். மேடைக்கு மேலே அம்மாவுக்குப் பிடித்தமான ரமணர் பகவான் படத்தையும் மாட்டி வைத்திருந்தார்.



மாலைவேளையில் சாமி கும்பிட உட்காரும்போது, அந்த அறை மிகவும் புழுக்கமாக இருக்கும். வேர்த்துப்போகும். சுவரிலுள்ள காற்றாடியை சுழல விட்டாலோ விளக்கெல்லாம் அணைந்துவிடும். ஒரு சின்னதா காற்றாடி வாங்க வேணும் என்று அம்மா சொல்லிக் கொண்டிருந்தார். ஆனாலும் வாங்கின பாடாய் இல்லை.

அம்மாவின் பிறந்தநாள் வந்தது. அண்ணன்வேலை முடிந்து வீட்டுக்கு வரும்போது ஒருபெரிய அட்டைப் பெட்டியோடு வந்தார். எல்லோரும் ஆச்சரியத்துடன் என்னவென்று கேட்பதற்குள் அண்ணன் சாமி அறைக்குள் புகுந்து தான்கொண்டு வந்த அட்டைப் பெட்டியைத் திறந்து அதிலிருந்து ஒரு சின்ன காற்றாடியை எடுத்து வைக்கிறான். பின்பு அருகிலுள்ள சுவிட்சில் பொருத்தி ஓட விடுகிறான்.

"அம்மா உங்களது பிறந்த நாளுக்கு என்னுடைய இந்தப் பரிசு. இந்த விசிறியை உங்கள் வசதிப்பிரகாரம் வைத்துக்கொள் ளலாம். இனிமேல் நீங்கள் சாமி கும் பிடும்போது புழுக்கத்தினால் அவதிப்பட நேரிடாது" என்கிறான். அம்மா அன்போடு அவனைப் பார்த்துப் புன்னகைக்கிறார். அண்ணன் ஒரு முரட்டுப் பிடிவாதக் காரன்தான். ஆனாலும் அவனது மனதில் அம்மா மேல் எத்தனை பாசம்வைத்திருந்தான். அம்மாவின் வசதிக்காக இதை வாங்கி வந்திருப்பான்.

"இராவணன் தன் தாயின் வசதிக்காக லிங்கத்தையே திசைமாறி இருக்கச் செய்தானாம். நீயும் என் வசதிக்காக இந்தக் காற்றாடியை வாங்கித் தந்திருக்கிறாய்'' என்று சொன்ன அம்மா முகத்தில் சந்தோசம் தெரிகிறது.

"இராவணனா... அப்படி அவர் என்ன செய்தார், தன் அன்னைக்காக" அம்மா கதை சொல்லத் தொடங்கினார். இராவணன் ஒரு சிறந்த சிவ பக்தன். அவனது பக்திக்கு மிஞ்சினவர் எவரு மில்லை. இசையில் வல்லவனான இராவணன் "சாமகானம்" பாடுவதில் தலை சிறந்தவன். சிவனைப் போற்றி சாமகானம் பாடியதால் சிவபெருமான் மகிழ்ந்து சந்திரஹாசம் என்ற வாளை அவனுக்கு வழங்குகிறார்.

இராவணனின் தாயாரான கைசியும் சிறந்த சிவபக்தை. இலங்கையிலுள்ள சிவத் தலமான திருகோணமலையின் அருகி லுள்ள கடற்கரையோரத்தில் வடகிழக்குத் திசையில் சுயம்புவடிவமான பெருமாள் எழுந்தருளியிருந்தார்.

இராவணின் தாயார் வசிக்கும் மாளிகையிலிருந்து, இந்த இடம் தொலைவில் இருந்ததால், அவருக்கு அங்குப்போய் பூசை செய்துவிட்டு வர அதிகப் நேரமானது. இதை உணர்ந்த இராவணன் அந்த இலிங்க மூர்த்தியைப் பெயர்த்தெடுத்து தன் தாயாரின் மாளிகையில் வைத்துவிட எண்ணினான்.

அதன்படியே அந்த இலிங்கத்தைப் பெயர்த்தெடுக்க முயன்றபோது, அவனால் என்ன முயன்றும் பெயர்க்க முடியவில்லை... அதனால் கடும் கோபமுற்ற இராவணன் தனக்குச் சிவபெருமானால் வழங்கப்பட்ட சந்திரஹாசம் என்ற வாளினால் அந்தப் பாறையை ஓங்கி அடித்துப் பெயர்க்கப் பார்த்தான். அந்தப் பாறை வெட்டுப்பட்டுப் பிளந்ததேதொழிய அவனால் சிலையை அசைக்க முடியவில்லை.

தனது ஆத்திரத்தாலும் ஆற்றலினாலும் சிவபெருமானை அடைய முடியாது என்பதை உணர்ந்த இராவணன், பெருமானின் உள்ளம் உருகும்படி வேண்டினான். அவனது பிரார்த்தனையைச் செவிமடுத்த இறைவன் அவனது தாயின் அரண்மனை உள்ள திக்கில் தன் தலையை வளைத்து "இனிமேல் இங் கிருந்தே உன்தாயின் பூசையை ஏற்றுக் கொள்கிறேன்" என்று அருள் புரிந்தார்.

தன் தாயின் சிரமத்தையுணர்ந்த இராவணன் லிங்கத்தையே திசைமாறச் செய்தார் என்று சொல்லி முடித்தார் அம்மா. இத்தனை நாள்களாக இராவணன் கெட்டவன் என நினைத்திருந்த எங்களுக்கு அவனது தாயின் பாசமும் கடமையுணர்வும் மெய்சிலிர்க்க வைக்கின்றன.

## வரலாற்றில் இன்றைய தினம்

1258 -பாக்தாத் மொங்கோலியரிடம் வீழ்ச்சியடைந்தது.
1846 -முதலாவது ஆங்கிலேய சீக்கிய சப்ரோன் சண்டையில் பிரித்தானியர் சீக்கியரைத் தோற்கடித்தனர்.
1870 - கத்தோலிக்கப் பெண்கள் சங்கம் நியூயோர்க் நகரில் ஸ்தாபிக்கப்பட்டது.
1923 - டெக்ஸாஸ் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் டெக்ஸாஸ் தொழில் நுட்பக் கல்லூரி என்ற பெயரில் டெக்ஸாஸ் லுப்போக்கில் தொடங்கப்பட்டது.
1940 - கிழக்கு போலந்திலிருந்து சைபீரியாவுக்கு போலந்து குடி மக்களை சோவியத் ஒன்றியம் மாபெரும் இடம்பெயர்ப்பு செய்தது.
1954 -அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி வைற் ஐசநோவர் வியட்நாமில் அமெரிக்காவின் தலையீட்டைக் கண்டித்தார்.
1997 - முல்லைத்தீவு கடற்பரப்பில் சைப்பிரஸ் கப்பல்மீது புக்காரா விமானம் குண்டு வீச்சுத் தாக்குதல் அதிலிருந்த கியூபா நாட்டவர் பற்றி தகவல் இல்லை.
1997 - தமிழ்- முஸ்லிம் கலவரம், இறந்தோர் தொகை 10 ஆக அதிகரிப்பு.
1997- வவுனியா அகதிகள் நிலை குறித்து அமெரிக்க அமைச்சர் கவலை தெரிவிப்பு

## பழமொழிகள்

1.அளவில்லாத ஆசை, எமது நல்ல குணங்களை அழிந்து விடும் -மகாவீரர்
2. சிந்திக்காமல் பேசத் தொடங்குவது, குறி பார்க்காமல் அம்பை விடுவது போன்றது - ஆஸ்கர் ஒயில்ட்
3. மனிதன் தோல்வியின் மூலமே மேலும் புத்திசாலி ஆகின்றான் - விவேகானந்தர்
4. மன்னிக்கும் உள்ளத்தில் கடவுள் குடியிருக்கின்றார் -புத்தபகவன்
5. நறுமண மலர்களோ மெதுவாக மலரும். களைகளோ வேகமாக வளரும் -ஷேக்ஸ்பியர்
6. நாம் படிக்கப் படிக்க எம்மிடமிருக்கும் அறியாமையை அறிந்து கொள்கிறோம் -மகாத்மா காந்தி
7. சிறிய தவறுகளைத் திருத்திக் கொள்ளாவிட்டால் பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது -கன்ஃபூசியஸ்
8. சிறிய கடன் கடனாளியை உருவாக்கும். பெரிய கடன் எதிரியை உருவாக்கும் - சைரஸ்
9. பக்தியோடுபிரார்த்தனைசெய். ஆனால்சுத்தியலைபலமாகஅடி -இங்கிலாந்து
10. உன் அயலானை நேசி, ஆனால் வேலியை எடுத்து விடாதே - டென்மார்க்
11. அதிர்ஷ்டசாலிக்குச் சேவல் கூட முட்டையிடும் -கிரீஸ்
12. நல்ல மனச்சாட்சி கடவுளின் குரல் - எஸ்தோனியா
13. ஒரு நல்ல நண்பன் நூறு இனத்தார்க்குச் சமம் - பிரான்ஸ்
14. நரி உபதேசம் பண்ணத் தொடங்கினால், உன் கோழிகளைக் கவனி -அல்பேனியா
15. அறிவு தலைக்குக் கிரீடம், அடக்கம் காலுக்குச் செருப்பு - ஹீப்ரு
16. தேவையில்லாததை நீ வாங்கினால் தேவையானதை நீ விற்று விடுவாய் -கிளாரண்டன்

## பொது அறிவு

- குங்குமப்பூ விளையும் ஒரே இந்திய மாநிலம் காஷ்மீர்.
- முதல் அஞ்சல் வழிக்கல்வி தொடங்கிய பல்கலைக்கழகம் டெல்லி பல்கலைக்கழகம்.
- முதன் முதலில் ஒரு நாட்டின் வரைபடத்தை உருவாக்கியவர்கள் பாபிலோனியர்கள்.
- இந்தியாவின் முதல் அச்சடிக்கும் நிலையம் அமைக்கப்பட்ட இடம்- கோவா.
- சிறந்த நாவலுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசு புக்கர்.
- வெறிநாய்க் கடிக்கு மருந்து கண்டுபிடித்தவர் லூயிஸ் .
- ஹெலிகொப்டரின் இன்னொரு பெயர் விர்லிபேர்ட் .
- மிக வேகமாக ஓடும் பறவையினம் நெருப்புக்கோழி .
- தட்டச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் கிறிஸ்தோபர் .
- மனிதர்களின் நாக்கு 10 செ. மீ. நீளமும், 50 கிராம் எடையும் கொண்டது.
- உலகத்தின் தங்கம் உற்பத்தியில் பாதியளவு தென் ஆபிரிக்கச் சுரங்கங்களில் இருந்து கிடைக்கிறது.
- இந்தியாவின் மிகப் பழைமையான அணை கல்லணைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கணம் மொழியின் அமைப்பு
# இலக்கியம் மொழியின் வனப்பு

செ.மகேஷ்

கடந்த 20 ஆம் திகதி அன்று உதயனில் வெளிவந்த புதன் பொய்கையில் "இலக்கியம் என்றால் எது?" என்ற தலைப்பிட்ட கட்டுரையை வாசித்தேன் அதன்வழி எழுந்த சில மயக்கங்களைத் தவிர்த்து இக்கட்டுரையின் மூலம் இலக்கியம் பற்றிய கருத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.



> இலக்கிய வடிவங்கள் வாசிக்கவும், நயக்கவும், இரசிக்கவும், பொருள் தெரிந்துணரவும் தக்கனவாக ஆக்கப்படும்போதுதான் அவை வாழும் வலிமையைப் பெறும். விடயம் விளக்கமுறவும், இரசிக்கும் வகையிலும் சொல்லப்படுவது மொழியின் இலக்கியப் பண்பின் செறிவிலேயே தங்கியுள்ளது.

ஒரு மொழியின் பிறப்பிலும், அதன் பயன்பாட்டிலும் சிறப்பான இரண்டு மொழிப் பிரிவுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று இலக்கணம், மற்றையது இலக்கியம்.

இலக்கணம் ஒரு மொழியின் அமைப்புக்கு ஆதாரமாகித் துணைநிற்கும் தன்மையுடையது. இதற்கமைவாகவே இலக்கண விதிகளுக்கு உட்பட்டு எழுத்துக்கள், சொற்கள் சொற்றொடர்கள், வாக்கியங்கள் என விரியும் மொழிக் கோவையைப் பயன் கொண்டு நாம் சரியாகவும் வழுவின்றியும் பேசியும் எழுதியும் துலங்குகிறோம்.

இலக்கியம் என்பது மொழியின் வனப்பை, வலிமையை வெளிப்படுத்தும் வகையில் சொற்களுக்குள், வாக்கியங்களுக்குள் நின்று உயிர்ப்புடன் துலங்குகிறது. மொழியின் இனிமைக்கும் இசைப்புக்கும் இவையே காரணமாகின்றன. கட்டுரைகள் கவிதைகள், கதைகள், நாவல்கள், நாடகங்கள் என்பவை இலக்கிய வடிவங்களாகும். இவ்வகை இலக்கிய வடிவங்கள் ஒரு மொழியின் வழி பிறந்தாலும், அம்மொழிக்குரிய ஆக்கத்தினுள் செறிந்திருக்கும். சொற்செறிவும், பொருட்செறிவும் நயத்தகு மொழி நடையில்வெளிப்பட்டுத் தோன்றும்போது அவை இலக்கியங்களாகின்றன.

ஓர் இலக்கியப் படைப்பாளி தானே ஆக்கி வெளிப்படுத்தும் இலக்கியப் பண்புகள் செறிந்த ஆக்கங்கள், வாசகரின் மூலம் இரசிக்கப்படுவதும்– நயக்கப்படுவதும்– விரும்பப்படுவதாகும். அத்துடன் நின்றுவிடாமல், அவற்றை வாசிக்கும் வாசகர்கள் அவ்வாக்கம் சார்ந்து பொருளுரைத்தலும், நயமுரைத்தலும் மேலும் வேண்டப்படுவதாகும். படைப்பாளியை எழுதத் தூண்டுவதும் வாசகனை வாசிக்கத் தூண்டுவதும் ஓர் ஆக்கம் சார்ந்த மொழிநடையிலும், பொருட்செறிவிலும் நிறைந்துள்ள மொழிவளம் தரும் வலிமையின் சிறப்பாகும். அந்நிலையிலேயே அவ்வாக்கம் சிறந்ததோர் இலக்கியப் படைப்பாகக் கணிக்கப்படலாம்.

ஓர் ஆக்கத்தை வெளிப்படுத்தத் தூண்டும் நோக்கத்தையும், அதன் வெளிப்பாட்டுக்காகப் பயன்படுத்திய மொழிச் சிறப்பையும் உள்ளடக்கத்தையும் வாசித்துத் தெளிந்து இரசிக்கும்போது அவ்வாக்கத்தின் இலக்கிய வலிமை புலப்படும். இலக்கியம் தமிழில் மாத்திரமல்ல, உலகமொழிகள் அனைத்திலும் அந்தந்த மொழிகளின் இலக்கியச் சிறப்புக்கள் வெளிப்படத் தோன்றியுள்ளன ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் ஆங்கில மொழி இலக்கியத்துக்கான சிறப்பான எடுத்துக்காட்டுகளாகும். அவை ஆங்கில மொழியின் இலக்கியப் பண்பைச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. இலக்கியம் எந்த எல்லைக்குள்ளும் கட்டுப்பட்டு நின்றுவிடுவதில்லை. வாழும் வளரும் வலிமை கொண்டதாக ஒரு மொழி செழிப்படைய இலக்கியமே ஒவ்வொரு மொழிக்குள்ளேயும் விளைந்து மொழியை வாழவைக்கின்றது.

சொல்லும் பொருளும், சொல்லும் வகையும் மொழியின் வனப்பையும், வல்லமையையும் மொழிவழி வெளிப்படுத்தும்போது இலக்கியங்கள் பிறக்கின்றன. அவ்வகை இலக்கியங்களில் மனித மனம் இலயிக்கிறது, நயக்கிறது, இரசிக்கிறது. அவற்றின்வழி ஒவ்வொருவரையும் வசப்படுத்துகிறது.

இலக்கியம் கற்பதும் – கற்பிப்பதும், மொழிவழி தோன்றும் வனப்பையும் வல்லமையையும் அறிந்து தெரிந்து சொற்களஞ்சிய விருத்தியைப் பெறவும் புதிய இலக்கிய ஆக்கங்களை வெளிப்படுத்தும் உத்வேகத்தைப் பெறவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும். அவ்வாறு வெளிப்பட்ட ஆக்கங்கள் ஒவ்வொருவரதும் வாழ்க்கையைச் சீர்செய்யும் வகையாக வழிகாட்டும் எனவும் எதிர்பார்க்கலாம்.

தமிழ் இலக்கியம் என்றால் என்ன? என்ற வினாவுக்கான விடையாக இலக்கிய வினைவிடைகளை வாசித்து மனப்பாடம் செய்து பரீட்சை எழுதினால், இலக்கிய பாடத்தில் சித்தி அடையலாம். ஆனால் இலக்கியம் என்பது மொழிவழி பிறந்த சொற்கள், உயிர்ப்புற்று உணர்ச்சிப் பெருக்கோடு உங்கள் ஒவ்வொருவரையும் உசுப்பும் சக்தி கொண்டவை. அத்தகைய சொற்செறிவும் பொருட்செறிவும் கொண்ட ஆக்கங்களே இலக்கியங்கள் என்பதைத் தெரிந்து கொள்வோம். கட்டுரை, கவிதை, சிறுகதை என்பவை மொழியின்வழி சிறப்பாக ஆக்கப்படும் போதுதான் அவை இலக்கியங்களாகின்றன.

மொழிவழி பிறக்கும் இலக்கியங்களை வாசிப்பவன் அவற்றை இரசிக்கவும், நயக்கவும், மனதிற்பதிக்கவும், அவை காட்டும் நல்வழி நடக்கவும் தூண்டுதலே இலக்கியத்தின் மகிமையாகும்.

இலக்கிய வடிவங்கள் வாசிக்கவும் - நயக்கவும் - இரசிக்கவும் - பொருள் தெரிந்துணரவும் தக்கனவாக ஆக்கப்படும் போதுதான் அவை வாழும் வலிமையைப் பெறும். விடயம் விளக்கமுறவும் இரசிக்கும் வகையிலும் சொல்லப்படுவது மொழியின் இலக்கியப் பண்பின் செறிவிலேயே தங்கியுள்ளது.

பண்டைய இலக்கிய நூல்களான மகாபாரதம், இராமாயணம் போன்றவை செய்யுள் வடிவிலே ஆக்கப்பட்டவை என்பதை அறிவோம். ஆறுமுகநாவலர் உரைநடை மூலம் ஆக்கிய புராணங்கள் போன்றவையும் இலக் கிய ஆக்கங்களாகவே உள்ளன. இலக்கியத்தை நயத்த லும் இரசித்தலும் அவசியமாகும் அதாவது மொழியை நயத்தலும் இரசித்தலும் அவசியமாகும்.

உதாரணமாக: இராமாயணம் தரும் ஒரு செய்யுளை இங்கு பார்ப்போம். இராம– இராவண போரின்போது போருக்குக் கும்பகர்ணனையும் அழைத்துவருமாறு கூறுகின்ற சந்தர்ப்பத்தில், அவனைத் தூக்கத்திலிருந்து விழிக்கச் செய்து அவனிடத்தில் தோன்றிய பசியின் கோரத்தையும், அதனைப் போக்க அவர்கள் எடுக்கும் முயற்சிகளையும் பெரும் புலவரான கம்பர் இலக்கிய வடிவமான ஒரு செய்யுளின் மூலம் நயம்படத் தருகின்றார்.

ஆறு நூறு சகடத்தடிசிலும்
நூறுநூறு குடங்களும் நுங்கினான்
ஏறுகின்ற பசியை எழுப்பினான்
சீறுகின்ற முகத்திரு செங்கணான்

இச்செய்யுள் விளக்கும் சம்பவத் திரள் சிறுசிறு சொற்களால் இரசிக்கவும்– நயக்கவும்– தக்கனவாகச் சொல் லப்படுகின்றது. தமிழ் இலக்கியம் தரும் சுவை மிகுந்த இலக்கிய வடிவம் இது. இவ்வாறு பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் இலக்கிய நயம் செறிந்த ஆக்கங்கள் பிறக்க வேண்டுமெனில், மொழியறிவுடன் இலக்கிய வளம் செறிந்த மொழிப்பிரயோகத்திலும் அனுபவம் பெற வேண்டும். சொற்களஞ்சியம் மிகுந்து காணப்பட வேண்டும்.

இலக்கணம் மொழியின் அமைப்பு. இலக்கியம் மொழியின் வனப்பு என்பதை மேலும் வலியுறுத்த விரும்புகிறேன். இலக்கியம் என்பது மொழியின் பண்பைக் குறிக்கும் ஒரு பெயர்ச்சொல். இதனை ஒரு குணப் பெயர் எனலாம். இவ்வகை இலக்கியப் பண்பு செறிந்த ஆக்கங்களே கட்டுரை, கவிதை, சிறுகதை, நாடகம், நாவல் போன்ற இலக்கிய வடிவங்களாகின்றன. இத்தகைய ஆக்கங்களை வெளிப்படுத்துவோர் இலக்கிய கர்த்தாக்கள் எனப்படுகின்றனர். இங்கே மொழியின் இலக்கியச் சிறப்பினால், அந்த மொழியுடன் தொடர்புறும் ஆக்கங்கள் இலக்கியங்களென்றும் அவற்றை ஆக்கியோன் இலக்கியப் படைப்பாளி என்றும் அழைக்கப்படுகிறான். இலக்கியம் என்பது மொழியின் வனப்பை வெளிப்படுத்தும் பல்சுவை வண்ணங்களைக் கொண்டது.

இன்று பாடசாலைகளில் கற்பிக்கப்படும் தமிழ் இலக்கியம் தெளிவுதரும் வகையில் கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியமும் உணரப்பட வேண்டும். மொழியின் வனப்பையும் வலிமையையும் புறந்தள்ளித் தமிழ் கற்பிக்கப்படுமெனில் இன்றே தமிழ் சாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிராண சக்தியும் மனித வளமும்

## நூல் விமர்சனம்

ம.ஜெயராமசர்மா

ஸ்ரீ நந்தகுமாரால் ஒரு புதிய முயற்சி வெளிவந்திருக்கிறது. தமிழில் ஒரு புது விடயம் எழுத்தில் வந்திருக்கிறது. அனேகமாக ஆங்கிலத்தில் இப்படி வருவதைப் பார்த்திருக்க முடிகிறது. தமிழில் துணிந்து ஸ்ரீ நந்தகுமார் இந்த விடயத்தைத் தர முயன்றமைக்கு முதலில் அவரைப் பாராட்டவே வேண்டும். தெய்வம் என்றால் அது தெய்வம், வெறும் சிலை என்றால் வெறும் சிலைதான்- உண்டென்றால் அது உண்டு-இல்லை என்றால் அது இல்லை-இல்லை என்றால் அது இல்லை-இந்தப் பாடல் சாதாரண பாடல் போலத்தெரிந்தாலும் இதில் மிகப் பெரிய தத்துவமே பொதிந்து காணப்படுகிறது. உண்மையை உணர்த்தும் பாடல். எமக்கெல்லாம் நல்ல ஒரு பாடத்தைப் புகட்டும் பாடல் எனலாம். இந்தப் பாடலின் உட்பொருளே நம்பிக்கைதான். நம்பிக்கைதான் வாழ்க்கையே. இதனைப் பலர் விளங்கிக் கொள்வதேயில்லை.

நம்பினார் கெடுவதில்லை, இது நான்கு மறைத் தீர்ப்பு. இங்கும் நம்பிக்கைதான் வலியுறுத்தப்படுகிறது. இவையெல்லாம் ஸ்ரீ நந்தகுமார் உள்ளத்தில் நன்கு பதிந்து விட்டிருக்கிறது. அவரது பிறப்பு, அவரது தாய் தந்தையின் பாரம்பரியம், அவர் வளர்க்கப்பட்ட பாங்கு, அவரது கல்வி அவர் வளர்ந்த சூழல் அவருக்கு வாய்த்த மனைவி யாவுமே அவரை இறை நம்பிக்கை மிக்கவர் ஆக்கிவிட்டிருக்கிறது.

முதன்முதலாக ஸ்ரீ நந்தகுமாரை நான் கண்டதே வக்கிரதுண்ட விநாயகர் ஆலயத்தில்தான். முதற் சந்திப்பு முக்கியமானது என்பர். அந்தச் சந்திப்பில் ஸ்ரீ நந்தகுமாரைப் பண்ணிசை பாடிய பண்பாளராகவே சந்தித்தேன். ஆனால், அவருக்குள் இத்தனை பொக்கிசங்கள் நிறைந்திருக்கின்றன என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை.

'பிராண சக்தியும் மனித வளமும்' நூலை வாசித்த பின்னர்தான் தேவாரம் பாடியவரா இவ்வளவு சிரத்தையான விடயத்தைச் சொல்லியிருக்கிறார் என்று வியப்பே ஏற்பட்டது.

அவரது முகத்தில் எந்தநேரமும் ஒரு புன்சிரிப்புத் தவளும். அவரது கண்களில் ஒருவித கவர்ச்சி காணப்படும். இவையெல்லாம் இணைந்துதான் அவரது பிராணா சிகிச்சைக்கு உதவி நிற்கின்றன என எண்ணுகின்றேன்.

இந்த நூல்.. சமயமா? தத்துவமா? வைத்தியமா? அல்லது யோகம் சார்ந்ததா என வாசிப்பவர்களைச் சிந்திக்க வைக்கிறது. சித்தர்கள், யோகிகள், சமயச் சான்றோர், வைத்தியர்கள் எல்லாம் இந்த நூலில் வந்து நிற்கிறார்கள். அவர்கள் சகலரும் இறை நம்பிக்கை கொண்டவர்களாக, செய்வதில் முழு நம்பிக்கை கொண்டவர்களாக, செயலில் தூய்மையைப் பேணுபவர்களாகவே காட்டப்படுகிறார்கள். இந்த நூலின் அடிநாதமே நல்ல நம்பிக்கைதான். குருவை நம்பு. செயலை நம்பு. ஒழுக்கத்தை நம்பு. செய்யும் செயற்பாட்டை முழுமையாக நம்பு. நம்பிக்கை விடுபடின் யாவுமே பயன் அற்றதாகிவிடும் என்பதை இந்த நூல் மிகவும் தெளிவாகச் சொல்லி நிற்கிறது.

ஆரம்பத்தில் வாசிக்கும் பொழுது ஒன்றுமே புரியாத மாதிரியே இருக்கும். வகுப்பில் கணிதம் படிப்பிக்கும்பொழுது பலருக்கும் புரிவதே இல்லை. ஆனால், நாளடைவில் அந்தக் கணிதமே எவற்றுக்கும் தேவை என்பதைத் தெரிந்து விடுகிறோம் அல்லவா? அப்படித்தான் இந்த நூலின் ஆரம்பமும். வாசிக்க வாசிக்க இத்துடன் ஏன் நின்று விட்டது. மேலும், தொடர்ந்து விளக்கங்கள் தந்திருக்கலாமே என்னும் எண்ணத்தையே எழச் செய்யும் விதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு சகலருக்கும் பயனுள்ள விடயங்கள் இதில் இடம்பெற்று இருக்கின்றன. பிராணாயாமம் என்பது யோகப் பயிற்சியில் மிகவும் முக்கிய அம்சமாகும். பிராணாயாமம் செய்தால் சகல சித்திகளும் எமது புத்திக்குள் வந்துவிடும் என்பது ஆன்றோர் அனுபவமாகும். அந்தப் பிராணாவைப் பயன்படுத்தி உடலுபாதைகளைக் குணப்படுத்தலாம் என்பதை மிகவும் நம்பிக்கையுடன் இந்த நூல் சொல்லி நிற்கிறது.

இந்தப் பயிற்சியில் குருவின் முக்கியத்துவம் சிறப்பாகச் சொல்லப்படுகிறது. அதேவேளை ,

> பிராணாயாமம் என்பது யோகப் பயிற்சி யில் மிகவும் முக்கிய அம்சமாகும். பிராணாயாமம் செய்தால் சகல சித்திகளும் எமது புத்திக்குள் வந்துவிடும் என்பது ஆன்றோர் அனுபவமாகும்.

குருவுக்கு நூலின் ஆசிரியர் தரும் வரைவிலக்கணம் மனதில் சகலரும் பதிய வைக்க வேண்டிய ஒன்றாகும். அந்த அளவுக்கு குருவை அவர் இந்த நூலில் காட்டுகிறார். குரு என்பவர் எம்மில் பலர் நினைப்பதுபோல் எம் மனதிலும் உடலிலும் ஒரு கிளர்ச்சியை மனமகிழ்ச்சியை அவர் ஆற்றும் அதிசயங்களாலும், பேச்சு வன்மையாலும், ஆன்மிக ஒளியாலும் உருவாக்குபவர் அல்ல. எம்மிடையேயுள்ள சில அவசியமற்ற சுயதிணிப்புக்களையும், மூடநம்பிக்கைகளையும் தகர்த்தெறிந்து புரியாத சில எல்லைக்குள் கட்டுப்படாது எதிர்ப்புக்களைச் சமாளித்து துணிவாக நாம் சில நல்ல காரியங்களை, சேவைகளைச் செய்யும் மன உணர்வுகளை வெளிக் கொண்டுவர உதவுபவரே குருவாகும். உணர்ச்சி வசமூட்டுவதும், கிளர்ச்சியை மனதில் தருவதும் குருவின் வேலையல்ல. மதத்தலைவர் வேறு குரு வேறு. குறித்த இலக்கை அடைய வேண்டிய வழிவகைகளை நாம் முன்னெடுத்துச் செல்லத் தேவையான உடல் உள வலிமையை நாம் உருவாக்கிக் கொள்ள வழி அமைத்துத் தருவதே நல்ல குருவின் இலக்கணம். இவ்வாறு குரு பற்றிச் சொல்லி பிராணாயாமச் சிகச்சையில் குருவினது வழிகாட்டலும், அவரது முக்கியத்துவத்தின் தன்மையையும் எவ்வளவு இன்றியமையாதது என்பதை நூலின் ஆசிரியர் சுட்டுவது நோக்கத்தக்கதாகும்.

குருவில் நம்பிக்கை வை. குரு சொல்வதில் நம்பிக்கை வை. உன்னில் நம்பிக்கை வை. உனக்கு உண்டான சிக்கல் தீரும் என்பதில் நம்பிக்கை வை. அப்பொழுது யாவும் நலமாக வந்துவிடும் என்று இந்த நூல் கூறுகிறது.

நம்பிக்கை இல்லையேல் எதை எவர் செய்தாலும் அது ஒரு பொழுதும் சித்திக்காது. செய்பவர்க்கும் முழு நம்பிக்கை வேண்டும். அதனை ஏற்பவர்க்கும் முழு நம்பிக்கை வேண்டும். இது இந்த நூலின் ஆதாரமும் அடிப்படையான கருத்தும் எனலாம்.

பிராணா சிகிச்சையைச் செய்ய முற்படுபவர் தூய்மையுடன் இருக்க வேண்டும். அந்தச் சிகிச்சையைச் செய்த பின்னரும் தன்னைச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர் அப்படிச் செய்யாதுவிட்டால் செய்தவருக்கே அது தீங்காகிவிடும் என்பதைத் தக்க உதாரணம் மூலம் ஸ்ரீ நந்தகுமார் காட்டுகின்றார். அதுவும் அவரே இந்தச் சிகிச்சையை வேறொருவருக்கு மேற் கொண்டவேளைதான், நிகழ்ந்தது சிகிச்சை முடிந்த பின் தன்னைச் சுத்திகரிக்காமல் சென்ற வேளை உயிர் போகும் அளவுக்கு தனக்கு நேர்ந்த வாகன விபத்துப் பற்றிச் சொல்லி, இந்த சிகிச்சையின் உண்மை நிலையை எமக்கெல்லாம் சுட்டிக்காட்டுகின்றபொழுது, இந்தப் பிராணா சிகிச்சையின் மகத்துவம் எப்படிப்பட்டது என்பதை நூலை வாசிப்பவர்கள் நிச்சயம் உணர்ந்து கொள்ள முடியும் என்று நான் நினைக்கின்றேன்.

அதேவேளை, நம்பிக்கையற்றவருக்கு இந்தச் சிகிச்சை அளிப்பதால் எந்தவிதப் பயன்களும் ஏற்படாது போனதையும் அந்தச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர் அவசரப்பட்டதையும்- உடனே தனக்கு யாவும் குணமாகி விடவேண்டும் என எண்ணியதாகவும், அதேவேளை, ஏனோ தானோ என எண்ணியதாகவும், அதனால் அந்த இடத்தில்... சிகிச்சையின் செயற்பாடு ஸ்தம்பித்து விட்டதாகவும் ஸ்ரீ நந்தகுமார் இந்த நூலில் சுட்டிக் காட்டுகின்றார்.

ஸ்ரீ நந்தகுமாரின் சிகிச்சை அனுபவங்கள் பல இந்தநூலில் சொல்லப்பட்டிருக்கின்றன. மூட்டுவலியால் அவஸ்தைப்பட்ட பெண்மணியைக் குணமாக்கியது, உறவுக்காரப் பெண்பிள்ளையான ஒன்பது வயதுப் பிள்ளையின் வயிற்றுக்குத்தை மாற்றியது, வக்கிரதுண்ட விநாயகர் கோயிலின் சமையற்காரரின் வயிற்று எரிவைக் குணமாக்கியது, கர்ப்பப்பையில் இருந்த கற்களை ஆங்கில வைத்தியத்தாலும் அகற்ற முடியாமல் அவதிப்பட்டபோது அதனைப் பிராணா சிகிச்சையால் குணமாக்கியதோடு நல்ல ஆரோக்கியத்துடன் அந்தப் பெண்மணி குழந்தைகளைப் பெற்றெடுக்கத் துணையாக இருந்ததும், தனது மாமியாரிடம் இந்தச் சிகிச்சையைக் கையாண்டு சில நல்ல பயன்களைப் பெற்றதையும், படிக்க முடியாமல் இருந்த உடல் தடையைப் போக்கி அந்தப் பிள்ளையை நன்கு படித்து நல்ல பெறுபேற்றைப் பெற உதவி நின்றதும் என, பல உண்மையான சம்பவங்களை ஸ்ரீ நந்தகுமார் இந்த நூலில் எமக்கு நல்ல உதாரணங் க்ளாகக் காட்டி பிராணா சிகிச்சையின் மெய்மையை... அறிய வைத்துள்ளார்.

நுட்பமான விடயத்தைத் தேர்ந்தெடுத்து எவருக்கும் பயன்பட வேண்டும் என்னும் நோக்கில் ஸ்ரீ நந்தகுமார் இந்த நூலை எழுதியுள்ளார். சில விடயங்களைத் தொட்டு எழுதப் பலர் விரும்புவதில்லை. காரணம் அதன் கனதி கருதி எனலாம். ஆனால் ஸ்ரீ நந்தகுமாரோ துணிந்து இந்தக் கஷ்டமான விடயத்தை எடுத்து எழுதியுள்ளார். இதற்காக இவரைப் பல முறைபாராட்டலாம்என நினைக்கின்றேன். இந்த நூலை ஆரம்பத்தில் வாசிக்கும் பொழுது கணக்குச் செய்வது போலவே இருக்கும். ஆனால் தொடர்ந்து வாசித்தால் பல விடயங்கள் எங்களுக்கே ஆச்சரியமாகத் தென்படும். வாசிக்க வாசிக்க ஆவலைத்தூண்டும் விதத்தில் நூல் எழுதப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு ஸ்ரீ நந்தகுமாரின் எழுத்து ஆளுமை இந்த நூலில் வெளிப்பட்டு நிற்கிறது எனலாம்.

பிராண சிகிச்சை முறை என்பது ஓர் ஆயுள்வேத அணுகுமுறையாகும். இது மீள்சக்தியூட்டத்தை மனிதர்களது முழு உடலுக்கும் வழங்குகின்றது. அதாவது உடல், மனம், உணர்வு இதனால் பயனடைகின்றது. இதுதான் இதன் கருப்பொருளாகி இருக்கிறது எனலாம்.

நூலை வாங்குங்கள்.. படித்துப் பாருங்கள்... இதன் தொடர்ச்சி ஏன் தொடரவில்லை என்று ஸ்ரீ நந்தகுமாரை நீங்களே கேட்பீர்கள். அந்த அளவுக்கு ஆவலைத் தூண்டுவதாக அறிவுக்கு நல்ல மருந்தாகவும், விருந்தாகவும், பிராணசக்தியும் மனி தவளமும் நூல் அமைந்து இருக்கிறது என்பதை மனமகிழ்வுடன் சொல்லி மகிழ் கின்றேன்.

கட்டுரையாளர் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation

## சர்வதேச

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹுசேன்.
இலங்கைக்கான நான்கு நாள் பயணத்தின் முடிவில் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
முன்னைய மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட வேளை காணப்பட்டதை விட, தற்போது அதிகளவு நட்புறவான சூழல் காணப்படுகிறது.
கடந்த ஒரு ஆண்டில் இலங்கை முன்னேற்றங்களைச் சந்தித்துள்ளது. ஊடகங்களுக்கு இது நன்கு தெரியும். விரும்பியதை எழுதுவதற்கு அதிக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.
அச்சமான சூழ்நிலை கொழும்பிலும் தெற்கிலும் கணிசமாக குறைந்துள்ளது. எனினும் வடக்கு-கிழக்கில் அது உருமாற்றமடைந்துள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அச்ச நிலை இன்னமும் தொடர்கின்றது.
முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்ற போதிலும் இந்த முன்னேற்றத்தின் அளவு குறித்து மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

**பொலிஸார் வன்முறை**

வெள்ளைவான் கடத்தல்கள், சித்திரவதைகள் குறித்த முறைப்பாடுகள் குறைவடைந்துள்ள போதிலும், புதிய முறைப்பாடுகள் தொடர்பில் சமீபத்திய இரண்டு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. பொலிஸார் அடிக்கடி வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.
இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த முறை சுதந்திர தினத்தில் தேசிய கீதம் சிங்களம், தமிழ் மொழிகளில் பாடப்பட்டமையானது சிறந்த விடயம். 1950 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வாறு தமிழ் மொழி யில் தேசிய கீதம் பாடப்பட்டுள்ளது.
இதனை வரவேற்று, மறுநாள் வடக்கு மாகாண முதலமைச்சர், பௌத்த விகாரைக்குச் சென்றிருந்தார்.
அத்துடன், கடந்த மாதம் ஜனாதிபதி, தம்மைப் படுகொலை செய்ய முயற்சித்த நபருக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார்.

**சிறந்த பாதையில்**
**நல்லிணக்கம்**

குறித்த இரண்டு செயற்பாடுகளும் பல ஆண்டுகாலமாக வடுக்களை சுமந்த மக்களுக்கிடையே நல்லிணக்கப் பாதையில் சிறந்த படிகளாகும். அத்துடன், வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு ஆளுநர்களாக சிவில் சேவை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.
மேலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டபூர்வமாக – சுயாதீனமாக மறுசீரமைக்கப்பட்டமை கடந்த ஆண்டில் நடைபெற்ற மற்றொரு சிறந்த செயற்பாடு.
அரசமைப்புச் சபை ஊடாக ஒருமைப்பாட்டுடன் குறித்த ஆணைக்குழுவுக்கு தலைவர் நியமிக்கப்பட்டு பிரதான தேசிய நிறுவனமாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது.
இந்த முன்னேற்றங்கள் இருந்தாலும் மற்றும் பல விடயங்களை நான் குறிப்பிடவேண்டும். கடந்த 30 ஆண்டு கால பல்லாயிரக்கணக்கான மக்களை பாதிப்புக் குள்ளாக்கிய போர் மற்றும் மனக்கசப்பான விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசு நடவடிக்கை எடுப்பதற்குப் பல விடயங்கள் இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளன.
எனது பயணத்தில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை சந்தித்தேன். விடுதலைப்புலிகள் மற்றும் துணை இராணுவக் குழுக்களால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
வடக்கில் இருந்து முஸ்லிம்கள் சொந்த வீடுகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.
அத்துடன், போரினால் இரண்டு தரப்பிலும் பல்லாயிரக் கணக்கானோர் விதவைகளாக உள்ளனர்.

**அனைத்தையும்**
**அவதானித்தேன்**

மேலும், பல ஆண்டுகால அச்சமூட்டிய குண்டுத் தாக்குதல்கள், படுகொலைகள் மற்றும் சமூகத்தின் மீது திணித்த ஏனைய துஷ்பிரயோகங்கள் போன்ற பல துன்பங்கள் அனைத்தையும் நான் அவதானித்தேன்.
படையினரால் கைது செய்யப்பட்டு அல்லது சரணடைந்து பின்னர் காணாமற்போனவர்களின் தாய்மார்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்தேன். குற்றச்சாட்டுக்கள் எதுவுமின்றி அல்லது பலவந்தமாக வாக்குமூலம் பெறப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்களைச் சந்தித்தேன்.
கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஜே.வி.பி கிளர்ச்சியின்போது, படையினரால் பாலியல் வன்முறைக்குள்ளான பெண் ஒருவரையும் சந்தித்தேன். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் வலி கொடூரமாகவுள்ளது. அந்தக் கொடுமைகள் அகற்றப்படுவதற்கு வழிகள் இருக்கின் றன.

**போரில் பாதிப்புற்ற**
**பெண்களுக்கு அரசு**
**உதவவில்லை**

போரில் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்கு உதவ இலங்கை அரசு தவறியுள் ளது.
வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி, மலையகத்திலுள்ள தமிழ் மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்.
இவ்வாறு சிறுபான்மை இனத்தவரைப் புறக்கணித்த விடயங்கள் தற்போது உருவாக்கப்படும் புதிய அரசமைப்பில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுமென நான் நம்புகின்றேன்.
மகத்தான சிக்கலான ஒரு பணி ஒரு நீண்டகால மோதலினால் ஏற்பட்ட சேதங்களை சீர்படுத்த உள்ளது. தவறுகள் சீர் செய்வதற்குச் சில ஆண்டுகள் தேவைப்படும்.
எனவே, உண்மை – பொறுப்புக்கூறல் – இழப்பீடு வழங்கல் மற்றும் நிறுவன ரீதியான மறுசீரமைப்பு போன்றவை இடம்பெறவேண்டும்.
படையினர் வசமுள்ள பொதுமக்களின் நிலங்களை மீளகையளிப்பதை துரிதப்படுத்த வேண்டும். யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் நிலங்கள் பல விடுவிக்கப்படவேண்டியுள்ளன. அவை உடனடியாக மீளக் கையளிக்கும்போது, இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது சொந்த வீடுகளுக்கு திரும்ப முடியும்.

**படைக்குறைப்பு**
**வேண்டும்**

அத்துடன், வடக்கு-கிழக்கில் படைகள் மறுசீரமைப்பு மூலம் குறைக்கப்படவேண்டும்.
நாட்டில் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சிறைபிடிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க அரசு துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மேலும் காணாமற்போனவர்களில் பலர் உயிரிழந்துவிட்டார்கள் எனப் பிரதமர் அண்மையில் வெளியிட்ட கருத்தினால், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பெரும் வேதனை அடைந்துள்ளன.
குறிப்பாக, அவர்களில் யார் உயிரிழந்தவர்கள் மற்றும் யார் உயிருடன் இருக்கிறார்கள் அல்லது கொல்லப் பட்டமைக்கான துல்லியமான அடையாளம் அல்லது உயிரிழந்தமைக்கான காரணம் மற்றும் சீரான கணக்கு என்பவை இல்லாமல் குறித்த அறிவிப்பை பிரதமர் வெளியிட்டுள்ளார்.
எனது இந்தப் பயணத்தின் நிகழ்ச்சி நிரலில் அனைத்தும் ஜெனிவா ஐ.நா மனித உரிமைகள் சபையில் கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பானதாகவே அமைந்தது. குறித்த தீர்மானம் இலங்கையின் இணை அனுசரணையுடன் 44 நாடுகளால் நிறைவேற்றப்பட்டது.
குறித்த தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டமை தொடர்பில் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெறும் அமர்வில் எனது அலுவலகம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கடந்த ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தலின் பிரதிபலிப்பாகும்.
இதன்மூலம், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் நீடித்த அமைதி ஏற்படுத்தும்.

**அரசின் ஒத்துழைப்பு**
**மிக அவசியமானது**

மனித உரிமையை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசு ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும்.
போரின்போது இலங்கை இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினாலும் பொதுமக்கள் இடர்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதை, எனது பயணத்தில் கண்டறிய முடிந்துள்ளது.
நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பாக, இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றவேண்டும்.
ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நாட்டுக்கு எந்த வகையிலும் அச்சுறுத்தலாக அமையாது.
ஜெனிவா தீர்மானம் குறித்து பல கட்டுக் கதைகள் உலாவுகின்றன, இலங்கையர்கள் தீர்மானத்தைப் புரிந்து கொள்ளவேண்டும், அவர்கள் கடந்த காலங்களின் பயங்கரங்களை எதிர்கொண்டு அவற்றை தோற்கடிக்க வேண்டும் .இலங்கையில் மிகச் சிறந்த நீதிபதிகள், சட்டவாளர்கள், நீதியை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் உள்ளனர். ஆனால் கடந்த பல ஆண்டுகளாக நீதிப் பொறிமுறை அதிகளவு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக, நிலையற்றதாக, நம்பமுடியாததாக உள்ளது.
கடந்த சில தசாப்தங்காக, நாட்டின் வரலாற்றில் நீதித் துறையின் தோல்விகள் பரவிக் கிடக்கின்றன. கிட்டத்தட்ட அனைவரும் இதனை ஏற்றுக்கொள்கின்றனர்.
கடந்த ஜனவரி 27ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இதனைப் பற்றி மிகப் பெரியளவில் உரையாற்றியது போற்றத்தக் கது.
விசாரணைகளின் தோல்விகள் குறித்து, நீதிமன்ற அறையினுள் அத்துமீறி நுழைந்தது குறித்து, தண்டனை விதிக்கப்படாத குற்றங்கள் குறித்து ஒவ்வொரு வாரமும் செய்திகள் வெளியாகின்றன.

**பாலியல் வன்முறைகளுடன்**
**படையினருக்குத் தொடர்பு**

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், குற்றங்கள் பரவலாக காணப்படுகின்றன. அவற்றுடன் தொடர்புடையவர்களாக பெருமளவில் படைகளில் அங்கம் வகிப்போரே இருக்கின்றனர்.
இருதரப்பினாலும் இழைக்கப்பட்ட சர்வதேச குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் பற்றிய பொறுப்புக்கூறல் பொறிமுறையில், சர்வதேச பங்களிப்பு பரிந்துரைக்கப்பட்டமைக்கு இவையே காரணம்.
இது நடைமுறைப் பிரச்சினைகளுக்கு, தீர்வுகாணக் கூடிய நடைமுறைச் சாத்தியமான ஒரு யோசனை.
ஒரே ஒரு வருடம் முன்பு, இலங்கையர்கள் பெரும் எண்ணிக்கையில் மாற்றம் –சமரசம் – உண்மைக்காக, நீதிக்காக வாக்களித்தனர்.
இலங்கையின் புதிய அரசு மனித உரிமைகள் குறித்து தான் வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்குகிறது என்ற அச்சத்தை வடக்கு கிழக்கு மற்றும் கொழும்பில் இருந்து கூடப் பலர் என்னிடம் வெளியிட்டிருந்தனர்.
எனினும் இன்று (நேற்று) காலை ஜனாதிபதியும், பிரதமரும் தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக உத்தரவாதத்தை வழங்கியுள்ளனர்.
[illegible]
ஆனால் சர்வதேசம் இலங்கையை [illegible]கொள்வதற்கே விரும்புகின்றது. இலங்கையை வலுவான பொருளாதாரம் கொண்ட நாடாக மாற்ற அவை விரும்புகின்றன.
அத்துடன், கறைகளற்ற படையினரின் புகழை வெளிக் கொண்டுவர விரும்புகின்றனர்.இதன்மூலம் சர்வதேச அமைதி காக்கும் படையில் அங்கம் வகிக்க முடியும்–என்றார். (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** அவமதித்தவர்களும் உங்களிடம் அன்பு பாராட்டுவர். தொழில் வளர்ச்சியில் புதிய சாதனை படைப்பீர்கள். சேமிப்பு அதிகரிக்கும். பெண்கள் வெகுநாள் வாங்க நினைத்த பொருள்களை வாங்குவர்.

**இடபம்:** குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். நிலுவைப்பணமும் கிடைக்கும் வெகுநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கையை வளர்ப்பது அவசியம். தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். நிர்வாகச் செலவு அதிகரிக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**கடகம்:** அடுத்தவரை நம்பி, முக்கிய செயலை ஒப்படைக்கக் கூடாது. தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். குடும்பச் செலவுக்கு கூடுதல் பணம் தேவைப்படும். வெளியூர் பயணத்திட்டத்தில் மாறுதல் உண்டாகும்.

**சிங்கம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில், வியாபார வளர்ச்சி திருப்தியளிக்கும். வழக்கு விவகாரத்தில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். விரைவில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** சிறு செயலையும் நேர்த்தியாக செய்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். ஆரோக்கியம் பலம் பெறும். பெண்களுக்கு பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

**துலாம்:** புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். பெண்கள் சகோதரர்களின் ஆதரவைப் பெறுவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**விருச்சிகம்:** அனுபவசாலியின் ஆலோசனை, நன்மைக்கு வழிவகுக்கும். தொழில் வளர்ச்சிக்கான புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். சொத்து ஆவணத்தைப் பிறர் பொறுப்பில் தரக் கூடாது.

**தனுசு:** உறவினர்களின் மத்தியில் நற்பெயர் கிடைக்கும். தொழில் வளர்ச்சியால், இலாபம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மகரம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழிலில், சுமாரான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உடல் நலனுக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**கும்பம்:** இயன்ற அளவில் தானதர்மம் செய்வீர்கள். தொழில் வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். சுபவிடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**மீனம்:** எதிரிடையாக பேசுபவர்களிடம் விலகிச் செல்வது நல்லது. தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடும். இஷ்ட தெய்வ வழிபாடு செய்வது நல்லது.

### நாளை

தை-28
வியாழக்கிழமை 11.02.2016
திதி: திருதியை பி.ப.03.44
நட்சத்திரம்: பூரட்டாதி பி.ப.02.35
ராகுகாலம்: 02.04-03.34 வரை
சுபநேரம்: 08.04-09.34 வரை
சதுர்த்தி விரதம்

## கருத்தறியும்

செவ்வாய்க்கிழமையும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.
முற்பகல் 9.30 தொடக்கம் மாலை 4.30 வரை இந்த அமர்வு இடம்பெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.
அரசமைப்புக்கான மக்கள் கருத்தறியும் குழுவின் அமர்வு வடக்கில் தற்போது நடைபெற்று வருகின்றது.
யாழ்.மாவட்டத்தில் இந்த அமர்வுகளில் பொதுமக்கள் அனைவரும் பங்குபற்றித் தங்கள் யோசனைகளை ஆணைக்குழுவிடம் முன்வைக்கலாம்.வாய்மொழி மூலமான யோசனைகளை முன்வைப்பது மாத்திரமன்றி அது தொடர்பான சாராம்சங்கள் உள்ளடங்கிய பிரதியையும் குழுவிடம் வழங்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கு-4-ரி2)

## ஊடகங்களை

களால் பேசப்படும் எந்தவொரு விடயமும் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்கு உட்படுத்தப்பட முடியாதவை. பேரவைச் செயலகத்தில் வெளியிடப்படும் கருத்துக்களைப் பிரசுரிக்கும் எந்தவொரு ஊடகத்தையும் கண்டிக்க முடியாது. பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதாவது குறைபாடுகள் - கருத்துத் தெளிவூட்டல் இருந்தால் அது தொடர்பில் பேரவைச் செயலகத்துக்கே அறிவிக்க முடியும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வின்போது, ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன் எழுப்பிய சிறப்பு உரிமை மீறல் தொடர்பான பிரச்சினையின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன், 'கடந்த அமர்வில் கிளிநொச்சி கூட்டுறவுச் சங்கங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகளை தெரிவித்தேன். இதற்காக மாகாணசபை அங்கத்தவர்களுக்குக் கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில், சம்பளத்துக்கு வேலை செய்யும் ஊழியர்கள் சங்கத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டதாகக் கூறி, வடமாகாண சபைக்கு எதிராகப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர். இந்தப் போராட்டம் உறுப்பினர்களின் சிறப்பு உரிமையை மீறும் செயலாகும். இங்கு பேசிய விடயத்தை, செய்தியாகப் பிரசுரித்தமைக்காக ஒரு ஊடகத்தின் மீது வழக்குத் தொடர முடியுமா?' என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து பதில் வழங்கிய அவைத் தலைவர், மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் உறுப்பினர்களால் பேசப்படும் எந்தவொரு விடயமும் நீதிமன்ற நியாயாதிக்கத் துக்கு உட்படுத்தப்பட முடியாதவை. பேரவையில் பேசப் படும் விடயங்கள் அனைத்தும் ஊடகங்களில் வெளி யிடப்படுவதற்கு உரித்துடையவை. மாகாண சபையின் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்ட கருத்துக்களை வெளியிடுவதை ஊட கங்கள் தவிர்த்துக் கொள்ளலாம்.

மாகாணசபையில் பேசப்பட்ட விடயங்களால் தாம் பாதிக்கப்பட்டதாகக்கருதுபவர்கள் மற்றும் இவை கருத்து வேறுபாடுடைய விடயங்கள் என்று எண்ணுபவர்கள், மாகாண சபைக்கு இந்த விடயம் தொடர்பான அறிவித்தலை வழங்க முடியும். சபை அதனை பரிசீலினை செய்து திருத்துவது தொடர்பில் ஆராயும் - என்றார். (த-5-ரி5)

## ரணிலுடன்

இடையில் அலரிமாளிகையில் நேற்று முற்பகல் முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையில் சட்டம், ஒழுங்கை வலுப்படுத்துதல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், இருவருக்கும் இடையிலான சந்திப்பில் பல்வேறு

பட்ட நடைமுறைச் சவால்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது என்று ஐக்கிய நாடுகள் சபை விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-சி)

## ஐ.நா. தீர்மானம்

வந்துள்ளது.

அதேவேளை, நேற்றுக் காலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தான் நடத்திய பேச்சின்போது கூட்டமைப்பினர் விடுத்த கோரிக்கைகளையும் ஜனாதிபதியிடம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்தார் என்றும் அறியமுடிகின்றது.

இந்தச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.அபயக்கோன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-சி)


## மரண அறிவித்தல்

### இராசையா சச்சிதானந்தன்

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர் P.W.D )



யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் அன்னை இல்லம் சங்குவேலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சச்சிதானந்தன் 07.02.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாம்பிகை, ஞானாம்பிகை ஆகியோ ரின் அன்புக் கணவரும் கருணாநிதி, மனோகரன், கலாமதி, வசீகரன், பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேஸ்வரி, இரதிதேவி, தனலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சத்தியராணி, குணசேகரம்(முன்னாள் நீர்வேலி ப.நோ.கூ சங்க கணக்காளர்) ரேவதி, செல்வமலர், கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கமலசேகரம், பவளரத்தினம், தெய்வேந்திரம், இந்திரன் காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாளினி, சுபாசினி, கஜதாஸ், கோபிதா, பார்த்தீபன், சயந்த்,ஷஜீத், சாருத், ஷவிந்த, கமலதர்சி, ஆரண்யா, ஷாருஜன், ஷாருகான், ஷாய்கிருஷி, ஷாய்கிருத்தி, ஷாய்லியா ஆகியோரின் அன்புப் பேரனும் மியா . ரிம் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (11.02.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் ந.ப 12.00 மணியளவில் சங்குவேலி காட்டுப்புலம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சங்குவேலி வடக்கு. (68790) (14.18.20) குடும்பத்தினர்.

தொடர்பு : 021 225 6351, 077 798 6781

## மரண அறிவித்தல்கள்

### நாகேந்திரம் தங்கராசா



தோற்றம் 15.12.1942 | மறைவு 09.02.2016

கொக்குவில் கலட்டியை பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் தங்கராசா நேற்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - இராசாத்தி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை-தையலம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் நிலாந்தினி, காலஞ்சென்ற கேமலதா, மலர், ரவிச்சந்திரன், ஜெயச்சந்திரன், சந்திரமோகன், சந்திரகுமார்(பிரான்ஸ்), சந்திரசேகர், பிறேமச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் அரசவோல்ட்டன், நீலவேணி, சுவிதா, சர்னா, சிவறெஜி, ஜெனந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் றோமியா, றெனோஸ்ரன், றெசான், றொபின்சியா, றொனிஸ்ரன், றம்மியா, சோயன், கஜானன், சந்தோஷ், சகானா, சம்சிகா டிலக்ஷன்,கவிசாந்த் ஆகியோரின் அன்புப் பேரனும் டெனிஸ்கா, புலோறா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2016) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(68600) (12.17.16.20)

077 5890243, 077 668 8522

### சுந்தரமூர்த்தி உருத்திரகுமாரன் (பாபு)

(சுந்தரமூர்த்தி & சன்ஸ், யாழ்ப்பாணம்)



தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி உருத்திரகுமாரன் (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி (சுந்தரமூர்த்தி & சன்ஸ் ஸ்தாபகர்) கமலாம்பாள் தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வரும் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளையின் பூட்டனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - லட்சுமிப்பிள்ளை (மலாயன் பென்சனியர்) தம்பதியினரினதும் முத்துத்தம்பி - மீனாட்சி அம்மா தம்பதியினரினதும் பேரனும் சிவபாலன்(சுவிஸ்) காலஞ்சென்ற மகாதேவன் கிரிஜா(லண்டன்) மற்றும் பிரேமலதா(லண்டன்), இராஜரெட்ணகுமாரன்(லண்டன்), சுதாயினி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2016) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

210, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம். (68787) (14.18.20)
தகவல்:
சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை குணபாலசிங்கம்



தோற்றம் 05.09.1949 | மறைவு 09.02.2016

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை குணபாலசிங்கம் 09.02.2016 செவ்வாய்க் கிழமை அதிகாலை 4.35 மணியளவில் கொழும்பில் காலமா னார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்சாலையில் நடைபெற்று 2மணியளவில் பூதவுடல் கல்கிசை கனத்த மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
(Mary Lavanya.K) & Thurkajini.K
(c 29245) (14.18.20)

தொடர்பு : 076 693 4154

### சபாபதிப்பிள்ளை பாலச்சந்திரன்



வேலணை கிழக்கு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இணுவில் வீதி, மானிப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை பாலச்சந்திரன் 07.02.2016 ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை மற்றும் இராசலெட்சுமி ஆகியோரின் பாசமிகு மருமகனும் கலாதேவியின் அன்புக் கணவரும் அஜந்தன்( மென் பொறியியலாளர்), யாழினி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மருத்துவபீடம்- 4 ஆம் வருடம்), துஷியந்தன் (கொழும்பு பல்கலைக்கழகம் 4 வருடம் மருத்துவப்பீடம்), சாயினி(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மருத்துவபீடம் 3 ஆம் வருடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரேகாவின் (கணினி பொறியியலாளர்) அன்பு மாமனாரும் நீலாதேவி, கமலாதேவி, விஜயலட்சுமி, புஸ்பராணி, காலஞ்சென்ற செல்வராணி மற்றும் உதயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனேந்திரன், காலஞ்சென்ற அம்பிகைராசா மற்றும் யோகநாதன், இராஜேஸ்வரன், பிரேம்குமார், காலஞ்சென்ற சாந்தகுமாரன் மற்றும் ஸ்ரீதரன் காலஞ்சென்ற தர்மராசா மற்றும் யோகராணி, வரதராசா (சுவிஸ்), விமலாதேவி(சுவிஸ்), ஆனந்தராசா ஆகியோரின் மைத்துனரும் திருநாவுக்கரசு, நகுலேஸ்வரி(ஜெகதா) தம்பதியரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2016) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விசகடி லேன், இணுவில் வீதி,
மானிப்பாய். (68757) (12.17.18)
தகவல்:
குடும்பத்தினர்.

077 044 0024, 077 449 4241


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பார்வதி (இராசம்மா) சுப்பையா



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07.07.1924 | 09.02.2016 |

பளை அரசர் கேணியைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும், தற்கால வதிவிடமாக முகமாலை வடக்கில் வசித்தவருமாகிய காலஞ்சென்ற சுப்பையா அவர்களின் அன்பு மனைவி பார்வதி (இராசம்மா) நேற்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா, சங்கரப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் சின்னம்மா, தம்பு, தங்கம்மா, அன்னம்மா ஆகியோரின் மைத்துனியும் வீரசிங்கம், தவமணி, யோகேஸ்வரி, குமரகுரு (பிரதிப்பிரதம செயலாளர் - நீதி கிழக்கு மாகாணம்), தர்மராசா (லண்டன்), தேவமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும்அன்னலட்சுமி, இராமச்சந்திரன்(கொலண்ட்), கந்தசாமி, பரிமளம், புஸ்பமலர் (லண்டன்), காலஞ்சென்ற பாலசுந்தரம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜெயா, பிரியா (பிரான்ஸ்), ராஜாத்தி - சுமன், நேசன், வனிதா, பாஸ்கரன் - விஜிதா (விவசாய அமைச்சு - வடமாகாணம்), கண்ணன் - ராகினி, ராகவன், ராகுலன், கலையரசி - பரணன் (அவுஸ்திரேலியா), பரிமேலழகன் - நிலோஷிகா (சிங்கப்பூர்), ராஜீவ் - மெய்கா (ஜேர்மனி), ரவீன் (லண்டன்), பாபு - வித்தியா (லண்டன்), சுதன் - தர்சா (லண்டன்), வாகீசன் - சாமந்தி, சாந்தன் - மீரா, சயந்தன், சங்கவி, ஸஞ்சயன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் கனோஜன், சுவேனி, பானுஷன், பதுஷன், பரணிகன், புருஷோத், சாருஷன், சஜீவ், சஜிக்கா, குருபரன், மிதுனேஸ்வரன், கபிசன், கரீஸ் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2016) புதன்கிழமை முகமாலையில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் கொடிகாமம், வடக்கு வேவில் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(68819) (15.17)

## கண்ணீர் அஞ்சலி



யாழ் கல்வி வலயத்தைச் சேர்ந்த
இசை ஆசிரியை
திருமதி
சுபத்திரா இராதாகிருஷ்ணனின்
(யா/கோண்டாவில் பரஞ்சோதி
வித்தியாலயம்) தாயார்
திருமதி ஆறுமுகம் புவனேஸ்வரி
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இசை ஆசிரியர் கழகம்
யாழ் கல்வி வலயம்

(68818) (10.17)

## மரண அறிவித்தல்கள்

### அரியராசா இராசகோபால்
(ஆங்கில ஆசிரியர்)

வளலாய் மேற்கு அச்சுவேலியைச் சேர்ந்த அரியராசா இராசகோபால் (ஆங்கில ஆசிரியர்) நேற்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் வளலாய் கூனன் காட்டு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

---

விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### திருமதி புவனேஸ்வரி ஆறுமுகம்



யாழ் வண்ணார் பண்ணை, நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி ஆறுமுகம் அவர்கள் நேற்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சிவக்கொழுந்து - வள்ளியம்மை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்க ளான இராசையா - மீனாட்சி (மாவிட்டபுரம்) தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் (மாவிட்டபுரம்) அன்பு மனைவியும் சீதா, குமரன், சுபத்திரா (ஆசிரியை - யாழ் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தாயாரும் முத்தையா, இராதா கிருஸ்ணன், சூரியஜெயந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விஜிதன் - வஜிதா, வாகிசன், நிரோஜன், ஜாயினி, ஆதித்தன், தரணிதன், கோபிதன், அபிராகவி, சுபராகவி, லக்ஸ்மன், லக்சனா, கிருஸ்ணவி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஹரிஸின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (10.02.2016) புதன்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 9184 026

தகவல்:
மகன் - ஆ.குமரன்.

(68817) (15.17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகமணி சின்னையா



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமணி சின்னையா 08.02.2016 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியகலாநிதி முத்துக்குமாரு கந்தையா - தெய்வநாயகி தம்பதியரின் மகளும், சிறுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா சின்னையாவின் (முகாமையாளர் இலங்கை வங்கி) அன்பு மனைவியும், மனோகரி (ஆசிரியை- கொழும்பு), Dr.லோகேஸ்வரன் (Veterinary Surgeon-லண்டன்) சுதேஸ்வரன் (ஜேர்மனி) ஜெயகரி (நோர்வே) ரமேஸ்வரன் ஆகியோரின் தாயும்,ஜெகதீஸ்வரன் (கொழும்பு), அருள்நேசன் (நோர்வே) கிரிசாந்தி (ஜேர்மனி) ஆகி யோரின் மாமியும், செந்தூரன், சிறிநாகராஜன், சில்லிகா, திவாகரன், விக்கினேஸ், யமிரா, ஜெனிமேசி, கிரிஸ்ரீனா, யோணாஸ் ஆகியோரின் பாட்டியும், காலஞ்சென்றவர்க ளான தனலட்சுமி, தவராசா (ஆசிரியர்) மற்றும் நகுலேசதேவி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை, இராஜமனோகரன், சறோஜினிதேவி, சதாசிவம், மாணிக்கவாசகர், வீரவாகுதேவர், சின்னத்தம்பி, சரவணமுத்து ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் வைத்து, இன்று (10.02.2016) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P: 0114903136,
0770870125

தகவல்:
பிள்ளைகள்

(68811)(10.17.20)

### ஜெகநாதன் இராக்கினிதேவி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13.04.1945 | 08.02.2016 |

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகநாதன் இராக்கினிதேவி கடந்த 08.02.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெகநாதனின் அன்பு மனைவியும் நெல்சனின் அன்புத்தாயாரும் தேவநேசராணி, மதியநாயகம், ஜோஜ்கிங், அருட்சகோதரி பற்றிமாநாயகி ஜோச்டியூக் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.02.2016) புதன் கிழமை மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மல்வம் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காவியவத்தை,
உடுவில்.

தகவல்:
மகன் - நெல்சன்
077 6393868

(68814)

---

திருமதி
### மாலா சந்திரமோகன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13.09.1961 | 09.02.2016 |

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாலா சந்திரமோகன் நேற்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சந்திரமோகன் (முகாமைத்துவ உதவியாளர் கட்டடத்திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற சுப்பிரமணியம் மற்றும் கைலாயம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் சுந்தராம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும் வினிஸ்ரன், கிருஷிகன், சங்கீர்த்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் யமுனாராணி, பிரபாகரன், சுகுமதி, ஞானசேகரன், அனுரா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திராதேவி, ஜெயக்குமார், சுரேஸ்குமார், உமாரஞ்சினி, குணரட்ணம், அரவிந்தன், நிர்ம லாராணி, மனோரஞ்சிதம், கௌசல்யா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜதீபா, துசீபா ஆகியோரின் அன்புச் சித்தியும் டஜீந்திரனின் அன்புப் பெரியம்மாவும் டிலக்ஷன், தனுஷன், தாரிஸ் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(68805) (12.17.18.20)

077 412 0679

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





| இராமன் யோகராசா | துரைராஜசிங்கம் துரேந்திரா |
|---|---|
| (கிராம அலுவலர் J.P) | (ஹற்றன் நஷனல் வங்கி - கிளிநொச்சி) |
| அன்னைமடியில் 27.05.1949 — ஆண்டவன் அடியில் 10.02.2013 | பிறப்பு 23.01.1988 — அழிப்பு 14.02.2013 |

நாம் கேட்பதை எல்லாம் நீ கொடுத்தாய் - இறைவன் போல
ஆதலால் தன்னை மறந்து விடுவார்களென
உங்களை கடவுள் கவர்ந்தானோ....?
அல்லது நீங்கள் இறைவனுக்கு அன்பைப் போதிக்க சென்றீரோ...?
எமக்கான வேராய் இருந்தீர்கள் வேறாகிப் போனீர்கள்
உடலால் மட்டுமே என்றும் உணர்வுகளால் அல்ல....

யோகராசா நிஜேந்திரா
(நிஜே ன்)

நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

(68790) 13.18.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### முருகேசு சுப்பிரமணியம்

மண்ணில்
06 . 08 . 1942



விண்ணில்
07 . 02 . 2016

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வவுனியா,வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சுப்பிரமணியம் 07.02.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தர் முருகேசு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கனகசபை, இராசலட்சுமி, நடராசா, பொன்னம்பலம் மற்றும் சிவபாக்கியம், பரமேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசன் (லண்டன்), கலைச்செல்வி (லண்டன்), கலாதேவி(லண்டன்), சந்திரகுமார்(லண்டன்), சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாமினி(லண்டன்), செல்வசோதி(லண்டன்), மகேந்திரராசா (லண்டன்), றேச்சல்(லண்டன்) தனுசா ஆகியோரின் அன்பு மாமனாரும் லதுசா, சஞ்சிகா, இளங்குமரன், துளசிகா, திரவியன், லக்ஷிகா, காருணியா, சமந்தா, நித்தியா, கிருஷிகன், யனுசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 09.02.2016 செவ்வாய்க்கிழமையிலிருந்து 11.02.2016 வியாழக்கிழமை வரை அவரின் இல்லத்தில் (கருங்காலி, காரைநகர்) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கருங்காலி,
காரைநகர்.

கணேசன் (கீர்த்தன்ஸ் கொமினிகேசன் - வவுனியா)
World Tel கொமினி கேசன் - வெள்ளவத்தை

**தொடர்பு : 077 599 8151**

## துயர்பகிர்கின்றோம்

பிஞ்சுமனதைப் பறித்தெடுக்க
காலனுக்கு ஏன்தான் அவசரமோ???



### பார்த்தீபன் சுவஸ்திகன்

கடந்த 08.02.2016 அன்று சிவபதமடைந்த புனித ஜோன்பொஸ்கோ மாணவனான பார்த்தீபன் சுவஸ்திகனின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.


**ரூபி ஜுவலறி**

உரிமையாளர்களும்,
ஊழியர்களும்.

**227, 229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(68812)(15.17)

# மரண அறிவித்தல்



### சோமசுந்தரம் ஜெகநாதன்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஜெகநாதன் (ஓய்வு பெற்ற களஞ்சிய காப்பாளர் - காணி அபிவிருத்தித் திணைக்களம்) அவர்கள் (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் வழக்கம்பரையைச் சேர்ந்த நாகரத்தினம் (அம்மம்மா ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியை, பிரதான உறுப்பினர் மானிப்பாய் சத்தியசாயி நிலையம்) அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - நாகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், குகதாசன் (லண்டன்) அவர்களின் அன்புச்சகோதரனும், பத்மாவதி (லண்டன்) அவர்களின் அன்பு மைத்துனரும் சத்தியபாமா (பாமா - லண்டன்), சிவகுமார் (ரஞ்சன் - லண்டன்), சுந்தரகுமார் (கரன்), ஜெயக்குமார் (குகன் - லண்டன்), விஜயலக்ஷ்மி (விஜயா - லண்டன்), ஜெனலக்ஷ்மி (ஜெனா - லண்டன்), ஜெனக்குமார் (லவன் - லண்டன்) அவர்களின் அன்புத்தந்தையும் ரதி (லண்டன்), ரவி (லண்டன்), ஷீலா (லண்டன்) அவர்களின் அன்பு சிறிய தந்தையும் காலஞ்சென்ற வேதரத்தினம் - கெங்காதரம் (இருபாலை) காலஞ்சென்ற தங்கரத்தினம் - இராமசிவம் மற்றும் முத்துக்குமாரசாமி (அப்பர் - வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்) - திலகவதி, காலஞ்சென்ற சிவஸ்ரீ சுந்தரராஜ குருக்கள் (வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்) மற்றும் விஜயலக்ஷ்மி, இராசரத்தினம் (இராசாத்தி) - ஜெயரட்ணம் (கனடா), காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் (துரை) மற்றும் லோகநாயகி (சந்திரா) - தெய்வக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் இரட்ணசபாபதி (லண்டன்), சிவகௌரி (ஜீவா - லண்டன்), மலரினி, கௌஷல்யா (கொழும்பு), சிவேந்திரன் (லண்டன்), கணேஸ்வரன் (கணேஷ் - லண்டன்), சாரதா (லண்டன்) அவர்களின் அன்பு மாமனும் ஷாயினி - மயூரன், ஷிவானி - பிரணவன், பிரேமசாயி, வீஷ்பன், கிருஷன், சாயிமா, விபூஷன், அஷ்வின், பிரவீன், சொனாலி, சிவேஷன், ஜனுஷன், கபர்தினி, லக்ஷன், ஆதிகீர்தனன், சௌமியா, மேதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஷகானா, மீனாக்ஷஷி, லக்ஷ்மி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஆஸ்பத்திரி ஒழுங்கை,
மானிப்பாய்.

**தொடர்புக்கு: 021 492 1308**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐங்கரநேசனுக்கு

கட்சியின் வவுனியா மாவட்ட உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனினால் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரேரணை கொண்டு வரப்பட்டது.

அதில், வவுனியா மாவட்டம் விவசாயத்தை மையமாகக் கொண்டது. ஆனால் வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில், மூங்கில் தோட்டம், மதுரை மல்லிகைத் தோட்டம், கறுவா - எள்ளுத் தோட்டம் என்பவற்றை வவுனியாவில் முதலீடு செய்வதற்குப் பலரும் முன்வந்திருந்தனர். ஆனால் இவற்றை வடக்கு மாகாண விவசாய அமைச்சின் அனுமதி பெற்றால் மாத்திரமே செய்ய முடியும் என்று சொல்லி அனுமதிக்கவில்லை. தன்னிச்சையாக விவசாய அமைச்சு செயற்படுவதை அனுமதிக்க முடியாது. இவற்றைக் கண்டும் காணாமலும் இருக்க முடியாது. இவற்றைப் பாதுகாக்கும் அரசியலை எம்மால் செய்ய முடியாது. ஆளும் தரப்பு என்கின்ற கூட்டுப் பொறுப்புக்குள் எமது பிழைகள் சுட்டிக்காட்டப்படுவதைக் கைவிட்டு விட முடியாது.

**குற்றச்சாட்டுக்கள்**

இரணைமடு நீர்பாசனத் திட்டம் தொடர்பிலான வடக்கு மாகாணத்தின் செயற்பாடுகள், பாதீனிய ஒழிப்பு தொடர்பிலான செயற்திட்டங்கள், பளைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற காற்றாலை மின் உற்பத்தி நிலையம் தொடர்பான விடயம், சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைதல் தொடர்பில் எமது பங்குபற்றுதலும் செயற்பாடுகளும், மருதங்கேணி கடல் நீரை நன்னீராக்கும் செயற்திட்டம், 'கார்த்திகை மரநடுகை மாதம்' உறுப்பினர்களோடு கலந்தாலோசிக்காமலும், அவர்களது பங்குபற்றுதல்கள் இன்றியும் முன்னெடுக்கப் பட்டமை, இடர் நிவாரணங்கள் உறுப்பினர்களோடு கலந்தாலோசிக்காமலும் அவர்களது பங்குபற்றுதல்கள் இன்றியும் முன்னெடுக்கப்பட்டமை, ஜனரஞ்சக நிகழ்வுகளான 'உழவர் திருநாள்', 'கார்த்திகை மரம் நடுகை மாத தொடக்க நிகழ்வு', 'கார்த்திகை மலர்க் கண்காட்சி', 'விவசாய தினம்', 'பேரிடர் தவிர்ப்பு நாள்', 'மண்தினம்', போன்றன பேரவையின் உரிய அனுமதியும் அமைச்சரவையின் உரிய அங்கீகாரமும் இன்றி முன்னெடுக்கப்பட்டதோடு நிதி தொடர்பிலான வெளிப்படைத்தன்மை பேணப்படவில்லை, கூட்டுறவுத் துறையில் இடம்பெற்றுள்ள பல்வேறு முறைகேடுகள் இதுவரை உரிய அமைப்பில் சீராக்கப்படாமை, விவசாயத்துறையில் எத்தனையோ செயற்திட்டங்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படாமை, சிறு குளங்களைப் புனரமைக்கும் மத்திய அமைச்சின் அழைப்பை நிராகரித்தமைபோன்றபல்வேறு முறைகேடுகள் நடந்திருக்கின்றன. இவை தொடர்பில் முதலமைச்சர் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

**திட்டமிட்ட நாடகம்**

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணை கொண்டு வரப்படுவதானால் முற்பகல் 10 மணிக்கு முன்னரே சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அறிவிக்கப்படவேண்டும். அப்போதுதான் பதில் வழங்க முடியும். இது திட்டமிட்ட நாடகம் என்றார். 'யாரையும் குறை சொல்ல வேண்டிய அவசியமில்லை. நேரகாலத்துடன் தந்தால்தான் எமக்கும் அவகாசம் இருக்கும். பதில் வழங்க கால அவகாசம் இருக்கவேண்டும்' என்று முதலமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

மீண்டும் கருத்துத் தெரிவித்த லிங்க நாதன், தற்போது பிரச்சினையைக் கேளுங்கள். அதற்குப் பின்னர் பதில் சொல்லுங்கள். எங்கள் மாவட்டத்துக்கு வரும் திட்டங்களை விவசாய அமைச்சர் தடுக்கின்றார் என்று தெரிவிக்க, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், நான் தடுக்கவில்லை. திணைக்களத்தின் ஊடாகக் கொண்டு வாருங்கள் என்றுதான் தெரிவித்தேன். இது உள்நோக்கம் கருதிய திட்டமிட்ட செயற்பாடு என்பதுடன், அவைத் தலைவரின் அனுமதியுடன்தான் இந்த நாடகத்தை நடத்துகின்றீர்கள் என்று தெரிவித்தார்.

**சதத்துக்கும்
பெறுமதியில்லாத
நிகழ்வு**

இதன்போது குறுக்கிட்ட அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், உங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மறைப்பதற்கு என் மீது பழி சுமத்தாதீர்கள்-என்றார்.

'மரம் நாட்டு விழா நடந்தது. ஒரு சதத்திற்கும் பெறுமதியில்லை. வவுனியாவில் நட்ட மரங்கள் அழிவடைந்து விட்டன. கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடப்பட்ட மரங்கள் ஒன்றுகூட இல்லை. வவுனியாவில் ஆயிரம் குளங்கள் இருக்கின்றன. இந்த அமைச்சர் ஒரு குளத்தையாவது புனரமைத்துத் தந்தாரா? ஏன் பாதீனியம் யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் இருக்கின்றதா? ஏன் ஏனைய இடங்களில் இல்லையா ? யாழ்ப்பாணத்தில் மட்டும் பாதீனியம் ஒழிப்பை நடத்தினார் ? ஏனைய அமைச்சுக்களின் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஆனால் விவசாய அமைச்சின் ஆலோசனைக் கூட்டங்கள் இதுவரை எத்தனை நடத்தப்பட்டன. முதலமைச்சர் இதற்குப் பதில் சொல்வாரா ? இது மகிந்த ஆட்சியை விட மோசமான ஆட்சி' என்று வவுனியா மாவட்ட உறுப்பினர் ம.தியாகராசா தெரிவித்தார்.

இதன் பின்னர் ஆளும் கட்சி உறுப்பினர்களான ச.சுகிர்தன், இ.ஆனோல்ட், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர், இரணைமடுக் குடிதண்ணீர் திட்டம் மற்றும் கடல் நீர் நன்னீராக்கல் திட்டம் தொடர்பில் விவசாய அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பில் விமர்சித்துப் பேசினர்.

**பகிரங்க மன்னிப்பு
கோருகின்றேன்**

ஆளும் கட்சியின் உறுப்பினர் கே.சயந்தன், கூட்டுப் பொறுப்பு என்ற அடிப்படையில் கடந்த இரண்டரை வருடங்களும் நாங்கள் வாய் மூடிக் கொண்டிருந்தோம். இதனால் பல விடயங்களில் பேசாமல் இருந்து விட்டோம். இதற்காக மன்னிப்புக் கோருகின்றேன். இனி இருக்கின்ற இரண்டரை வருடங்களிலாவது ஏதாவது செய்ய வேண்டும். கடந்த சில நாள்களாக நிபுணர்களைச் சந்தித்தபோது இந்த அமைச்சர் உறுப்பினர்களை எவ்வளவு ஏமாற்றியிருக்கின்றார் என்பது தெரியவந்தது.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் ஐங்கரநேசன், அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று இங்கு வந்து சொல்லிக் கொண்டிருக்காதீர்கள் என்று தெரிவிக்க, இது எனது நேரம் நீங்கள் குறுக்கிடவேண்டாம் என்று தெரிவித்த உறுப்பினர் சயந்தன், அதிகாரி ஒருவருக்குப் பதவியைக் கூட லஞ்சமாகக் கொடுக்க முற்பட்டிருக்கின்றார் என்று குறிப்பிட்டார். இதனை சத்தியக்கடதாசி முடித்து இங்கு கொண்டு வந்து சமர்ப்பிக்கவும் நான் தயாராக இருக்கின்றேன் என்றார்.

**காதில் பூச் சுற்றாதீர்கள்**

அமைச்சர் ஐங்கரநேசன், இவ்வாறு குற்றச்சாட்டுக்களை அபாண்டமாகச் சுமத்தாதீர்கள். அவைத் தலைவரே இந்த விடயங்களை எடுக்கமாட்டேன் என்று தெரிவித்து விட்டு நீங்களே பொதுப் பிரேரணை என்ற அடிப்படையில் இதனை இங்கு கொண்டு வந்திருக்கின்றீர்கள். நீங்கள் எங்களுக்குக் காதில் பூச் சுற்றாதீர்கள் -என்றார்.

இதன் பின்னரும் தொடர்ந்த ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன், பாதீனியம் விடயத்தில் பெருமளவு நிதி ஒதுக்கிப் படம் எடுத்து பத்திரிகையில் போட்டார்கள். அதன் பின்னூட்டல் என்ன ? பாதீனியம் முழுமையாக ஒழிக்கப்பட்டுவிட்டதா ? ஜனாதிபதி மைத்திரிபால இரணைமடுவில் வந்து திட்டம் ஒன்றைத் தொடக்கி வைக்க அதே பிரதிபண்ணி செம்மணியில் மரம் நடுகை விழா நடந்தது. அதற்கு முதல்நாள் தமிழினியின் சாவு வீட்டில் அழுதுவிட்டு, மறுநாள் இங்கு ஆடம்பரமாக மரநடுகை விழா நடந்தது. அந்தப் பணத்தை தமிழினியின் வீட்டை முழுமைப்படுத்துவதற்குக் கொடுத்திருக்கலாமே.

**நிதியை ஒழுங்காக
செலவு செய்யுங்கள்**

அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதிகள் செலவு செய்யப்படாமல் புதிய புதிய தினங்கள் உருவாக்கப்பட்டுச் செலவு செய்யப் படுகின்றன. காசு ஏதாவது வழியில் செலவு செய்ய வேண்டும் என்பதற்காகச் செலவு செய்வது வினைத்திறன் அல்ல. மக்களுக்கு அதன் பயன் கிடைக்க வேண்டும். மக்களுக்குச் சேவை செய்யாமல் விட்டு, பரபரப்பு மூலம் அதனைச் சமப்படுத்த முடியாது - என்றார்.

இதன் பின்னர் பிரேரணையைச் சமர்ப்பித்த லிங்கநாதன், அண்மையில் கவிப் பேரரசு வைர[illegible] வந்திருந்தார். இவரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருமாறு வன்னி மாவட்டக் கவிஞர்கள் அமைச்சரிடம் கேட்டனர். அதற்கு அமைச்சர், பாதுகாப்புக் காரணங்களுக்காகச் செய்ய முடியாது என்று அவர்களிடம் தெரிவித்தார். மறுநாள் யாழ்ப்பாணத்தில் கவிஞர்களை, வைரமுத்து சந்தித்திருக்கின்றார். அப்படியானால் வன்னிக் கவிஞர்கள் தீவிரவாதிகளா ? இவ்வாறு மக்கள் எங்களைக் கேட்கின்றார்கள்.

எனவே இந்தப் பிரேரணையை முன்மொழிகின்றேன். நாம் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முதலமைச்சர் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டும் - என்றார். சபையில் பிரேரணை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது.(த-5-ரி5)

## ஐ.நாவின்

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இதற்குப் பதிலளித்த ஆணையாளர், தீர்மானத்தை செயற்படுத்தாமல் இலங்கை அரசு விலகி நிற்கமுடியாது. அளித்த வாக்குறுதிகளிலிருந்தும் இலங்கை அரசு பின்வாங்க முடியாது. நடந்த சம்பவங்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக்கூறியே ஆகவேண்டும். இதனை ஜனாதிபதி, பிரதமரிடம் எடுத்துரைப்பேன் என்று உறுதியளித்தார்.

நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அல் - ஹுசேன் தனது பயணத்தின் இறுதி நாளான நேற்றுப் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தினார்.

கொழும்பு சினமன் லேக் சைட் ஹோட்டலில் நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, ரெலோவின் தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், புளொட்டின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் மற்றும் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். இந்தச் சந்திப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசும் வழிமொழிந்தே ஏற்றுக்கொண்டுள்ளது. ஆகவே, இது இலங்கை அரசுக்குச் சொந்தமான தீர்மானம். வெளித்தரப்பினரால் கொண்டுவரப்பட்டதொன்றல்ல. எனவே, இந்தத் தீர்மானத்தை அமுல்படுத்த முடியும். இதனை அமுல்படுத்த முடியாது என இலங்கை அரசு கூறமுடியாது. முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களையும் இலங்கை அரசு வெளியிட முடியாது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் நாங்கள் வலியுறுத்தினோம்.

அதன்போது நாங்கள் குறிப்பிட்ட கருத்தை முழுமையாக ஏற்றுக்கொண்ட ஆணையாளர், தாம் இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசிடம் திணிக்கவில்லை. அவர்களே சர்வதேச சமூகம், தமிழ் மக்கள் பிரதிநிதிகளுடன் பேசி இணக்கப்பாட்டுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இது. ஆகவே, அத்தகையதொரு தீர்மானத்தை அமுல்படுத்தாமல் இலங்கை அரசு விலகி நிற்க முடியாது. அளித்த வாக்குறுதிகளிலிருந்தும் இலங்கை அரசு பின்வாங்க முடியாது. நடந்த சம்பவங்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக்கூறியே ஆகவேண்டும். இதனை ஜனாதிபதி, பிரதமரிடம் எடுத்துரைப்பேன் என்று அவர் கூறினார்.

நாங்கள் நாட்டில் தற்போது காணப்படும் உண்மையான நிலைமையினையே அவரிடம் எடுத்துரைத்துள்ளோம். காணாமல்போனோரின் உறவுகளும் தமது பிரச்சினைகளை அவரிடம் எடுத்துரைத்துள்ளனர். நாமும் அவ்விடயங்களை அவரிடம் விளக்கிக் கூறியுள்ளோம்.

காணாமற்போனோர் தொடர்பான அலுவலக[illegible] அமைப்பதாக இலங்கை அரசு வாக்குறுதி அளித்திருந்த போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை. குறித்த விடயம் தொடர்பில் அவர் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடியுள்ளார். அவர் போதிய தகவல்களையும் யதார்த்த நிலைமையினையும் பெற்றிருப்பார். ஆகவே, தகவல்கள் போதியளவில் கிடைக்கவில்லை என்று கூறமுடியது.

காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம் தொடர்பான விடயங்களையும் அவரிடத்தில் எடுத்துக்கூறினோம். அது தொடர்பாகவும் அவர் கவனம் செலுத்தியுள்ளதோடு அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாக அவர் உறுதியளித்தார் - என்றார். (த-சி)

## நிர்ணய

எனக் கோரும் பிரேரணை வடக்கு மா காண சபையில் நேற்று நிறைவேற்றப் பட்டுள்ளது.

கடந்த காலங்களைப் போன்று அரச அதிபர்களுக்கு நெல் கொள்வனவுக்குரிய நிதி ஒதுக்கப்பட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், உடனடியாக ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் இதற்கான கோரிக்கையை வடக்கு மாகாண முதலமைச்சர் முன்வைக்கவேண்டும் என்றும் அந்தப் பிரேரணையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், வவுனியா மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாத னினால் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அதில், வடக்கு மாகாணத்தில் தற்போது நெல் அறுவடை நடைபெறுகின்றது. நிர்ணய விலையில் முன்னைய அரசினால் நெல் கொள்வனவு செய்யப்பட்டது. அரச அதிபர்களுக்கு இதற்குரிய நிதி வழங்கப்பட்டு அவை கூட்டுறவுச் சங்களின் ஊடாகக் கொள்வனவு செய்யப்பட்டன.

தற்போது அது நிறுத்தப்பட்டுள்ளது. அரசினால் நெல் கொள்வனவு நிர்ணய விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், கொள்வனவு இடம்பெறவில்லை. இதனால் விவசாயிகள் தென்பகுதியிலிருந்து வரும் தனியாருக்கும், இங்குள்ள தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களும் மிகக் குறைந்த விலையில் கொடுக்கின்றனர். ஒரு மூடை ஆயிரத்து 500 ரூபா வரையிலேயே கொள்முதல் செய்யப்படுகின்றது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் நட்டம் ஏற்படுகின்றது. இதனைத் தவிர்க்க கூட்டுறவுத்துறை மூலமோ அல்லது விவசாயத் திணைக்களத்தின் மூலமோ நெல் கொள்வனவு செய்யப்படவேண்டும் என்று லிங்கநாதன் கேட்டுக் கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் கமலேஸ்வரன், பிரேரணையை வழிமொழிந்து கருத்துத்தெரிவிக்கையில், இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பேசப்பட்டது என்றார். பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனிஜெகநாதன், இதனை விவசாய அமைச்சின் ஊடாக மேற்கொண்டால், நெல்லைக் கொள்வனவு செய்ய நிதி போதாது. எனவே வடக்கு முதலமைச்சர் இந்த விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனடியாக ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் முதலமைச்சர் தொலைநகல் அனுப்பவேண்டும். கடந்த காலங்களைப் போன்று அரச அதிபர்களுக்கு, நிர்ணய விலையில் கொள்வனவு செய்வதற்குரிய நிதி ஒதுக்க வேண்டும். இன்னும் 20 தொடக்கம் 25 நாள்களுக்குள் இவை இடம்பெறாவிட்டால், விவசாயிகள் மிகக் குறைந்த விலைக்கு தனியாருக்கு வழங்கிவிடுவார்கள். இதனால் விவசாயிகள் மிகப் பெரிய நட்டத்தை அடைவார்கள் - என்றார்.

விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், இதனைப் பிரேரணையாக இல்லாமல் ஆலோசனையாக ஏற்கலாம் என்று தெரிவித்தார். ஏனெனில் இது பிரேரணையாக நிறைவேற்றப்பட்டால், விவசாயிகள் நாளை சகல கூட்டுறவுச் சங்கங்கள் முன்பாகவும் நிற்பார்கள். எனவே, இதனை ஆலோசனையாக முன்வைக்கலாம். மேலும், கடந்த காலங்களில் அரச அதிபர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்தவில்லை. இதனால் அரச அதிபர் நிதி வழங்க பின்னடிக்கின்றார் - என்றார்.

(த-5-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இரண்டாவது இடத்தில் இலங்கை நீடிப்பு

## அதிவேக வீரராக ஹிமாசா எசான் இதுவரை இலங்கைக்கு 17 தங்கம்



இந்தியாவின் குவாத்தி நகரில் இடம்பெற்று வரும் 12 ஆவது தெற்காசிய விளையாட்டு போட்டியில் இதுவரை நடைபெற்ற போட்டிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை இரண்டாம் இடத்தில் நீடிக்கிறது.

நேற்று இடம்பெற்ற ஆண்களுக்கான உயரம் பாய்தலில் மஞ்சுள குமார 2.17மீற்றர் உயரத்துக்கு பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், பெண்களுக்கான 100மீற்றர் ஓட்டப்போட்டியில் ருமேசிக்கா ரத்நாயக்க 11.71நிமிடத்தில் ஓடி தங்கப்பதக்கத்தையும், ஆண்களுக்கான 100மீற்றர் ஓட்டப் போட்டியில் ஹிமாசா எசான் 10.28 நிமி டத்தில் ஓடி தங்கப்பதக்கத்தையும் பெற்றார். இவர் தெற்காசியாவின் அதிவேக ஒட்ட வீரர் என்பதும் தெரிந்ததே. இதே பிரிவில் மொஹமட் அசரப் 10.69 நிமிடங்களில் ஓடி வெண்கலப்பதக்கத்தை யும் பெற்றார். பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் கே.எல்.ஏ.நிமாலி லியானாலாச்சி 2.09 நிமிடங் களில் ஓடி தங்கப்பதக்கத்தையும் இதே போட்டியில் ஜீ.ரி.ஏ. அபேரத்ன வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றார்கள். அத்துடன் பெண்களுக்கான 50 மீற்றர் (பின் நோக்கி) நீச்சல் போட்டியில் கிமிக்கோ ரஹீம் தங்கப்பதக்கத்தையும் பெற்றுள்ளார். அவர் மொத்தம் 4 தங்கப்பதக்கம் பெற்று மீண்டுமொரு சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

அத்துடன் ஆண்களுக்கான 100மீற்றர் தகுதிகாண் ஓட்டப்போட்டியில் ஹிமாசா எசான் 10.26 நிமிடங்களில் ஓடி இலங்கை வீரர் சிந்தக்க நிலைநாட்டியிருந்த சாதனையைத் தகர்த்தார். சிந்தக்க 1999 ஆம் ஆண்டு 10.29 நிமிடங்களில் ஓடி முடித்து இந்தச்சாதனையை நிலை நாட்டியிருந்தார். 17 வருடங்களுக்குப் பின்னர் அது எசானின் பெயரில் எழுதப்பட்டுள்ளது. பெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் இலங்கை வீராங்கனை டபிள்யு.ரி.கே.பெர்ணான்டோ 14.87 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். இலங்கை அணிக்கு வில்வித்தைப் போட்டியில் வெள்ளிப் பதக்கமும் கிடைக்கப் பெற்றுள்ளது. ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் எல்.ஏ.டி.ஈ.பி.அலன்சன் 46.38மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும், பெண்களுக்கான நீளம் பாய்தலில் எஸ்.எல்.எஸ். சில்வா வெண் கலப்பதக்கத்தையும் பெற்றனர். அத்துடன் பெண்களுக்கான 5000மீற்றர் ஓட்டப் போட்டியில் யு.கே.என். ரத்நாயக்க 17:00.85 நிமிடங்களில் ஓடி வெண் கலப்பதக்கத்தைப்பெற்றார்.

குழுநிலைப் போட்டிகளின் அடிப்படையில் கரப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை அணிக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்துள்ளது. ஆண்களுக்கான கரப்பந் தாட்ட இறுதிப்போட்டியில் இந்திய அணி இலங்கை அணியை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை பெற்றது. இலங் கைக்கு வெள்ளிப்பதக்கமும் பாகிஸ்தான் அணிக்கு வெண்கலப் பதக்கமும் கிடைத்தது.

ஒட்டுமொத்த பெறுபேறுகளின் அடிப்படையில் 76 தங்கப்பதக்கங்கள், 36 வெள்ளிப்பதக்கங்கள், 10 வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 122 பதக்கங்களுடன் இந்தியா முதலிடத்திலும், 17 தங்கப்பதக்கங்கள், 37 வெள்ளிப் பதக்கங்கள், 33 வெண்கலப்பதக்கங்கள் உட்பட மொத்தமாக 87 பதக்கங்களைப்பெற்று இலங்கை இரண் டாம் இடத்திலும், 5 தங்கப்பதக்கங்கள், 12 வெள்ளிப்பதக்கங்கள், 20 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 37 பதக்கங்களைப் பெற்று பாகிஸ்தான் மூன்றாவது இடத்திலும் உள்ளன. நான்கு முதல் எட்டு வரையான இடங்களுக்குள் முறையே பங்களாதேஷ், நேபாளம், ஆப்கானிஸ்தான், பூட்டான், மாலைதீவு ஆகிய அணிகள் உள்ளன. (ம)

## உலகக்கிண்ண இறுதியில் இந்தியா அரையிறுதியுடன் இலங்கை வெளியே

19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற அரையிறுதியில் இலங்கையை வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது இந்தியா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பத்தில் சிறிது தடுமாற்றம் கண்டாலும் மத்திய வரிசை வீரர்களின் நிதானமான ஆட்டத்தால் 50 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் 9 இலக்குகள் இழப்புக்கு 267 ஓட்டங்களைப் பெற்றது. அன்மோல்பீரித் சிங் 72 ஓட்டங்களையும், சர்பராஸ் கான் 59 ஓட்டங்களையும், சுந்தர் 43 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை சார்பாக பெர்னான்டோ 4 இலக்குகளையும், குமார, நிமேஸ் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய இலங்கைக்கு ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. பண்டார 2 ஓட்டங்களுடனும், பெர்ணான்டோ 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க 13 ஓட்டங்களில் ஆரம்ப வீரர்களைப் பறிகொடுத்துத் தவித்தது இலங்கை. மெண்டிஸ், அசான் இருவரும் சிறிது போராட்டம் காட்டினாலும் நீண்ட நேரம் நிலைக்க முடியவில்லை. முடிவில் 170 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை. அதிகபட்சமாக மெண்டிஸ் 39 ஓட்டங்களையும், அசான் 38 ஓட்டங்களையும், சில்வா 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக டாகர் 3 இலக்குகளையும், அவிஸ்ஜுகன் 2 இலக்குகளையும், அகமட், பதாம், சுந்தர் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

நாளை நடைபெறவுள்ள மற்றொரு அரையிறுதியில் பங்களாதேஷ்- மேற்கிந்தியத் தீவுகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இதில் வெற்றிபெறும் அணி 14ஆம் திகதி நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்திய அணியுடன் பலப்பரீட்சை நடத்தும். (ம)



ஆஸ்திரேலிய நாட்டின் கூடைப்பந்தாட்டப் பயிற் றுநர் டமைன் கொட்டர் யாழ்ப்பாணம் வருகை தந்து யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந் தாட்டத் திடலில் இடம்பெறும் கூடைப்பந்தாட்டப் பயிற்சிமுகாமில் பங்குபற்றி பயிற்சிகளை வழங் குகின்றார். நேற்று யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிகளுக்கு பயிற்சி வழங்கிய இவர், இன்று யாழ். மாவட்டப் பாடசாலைகளின் அணிகளுக்குப் பயிற்சி வழங்கவுள்ளார். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப்.10

***றோயல் வி.கழகத் தொடர்***

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம்பெறும் சுப்பர் 8 அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

***குணபாலசிங்கம் ஞாபகார்த்தத் தொடர்***

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதவுள்ளது.

***யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்***

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல் ஹிஜிரா அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதவுள்ளது. (ம-23)

## இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

**புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை**

புலோலி கிழக்கு அ.த.க. பாட சாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளன. வித்தியாலய அதிபர் எஸ்.ஜெயச்சந்திரன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராசா கலந்துகொள்ளவுள்ளார். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது ரி-20 ஆட்டத்தில் இந்தியாவை வீழ்த்தியது இலங்கை

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் முதலாவது ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றிபெற்ற இலங்கை 1:0 என்று முன்னிலையில் வகிக்கிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. புற்களுடன் கூடிய மேலெழும்பிய ஆடுகளம் பந்துவீச்சுக்கு சாதகமாக அமைந்தது. ஆரம்ப வீரர்களாக ரோகித் மற் றும் தவான். இலங்கையின் இலக்குக்காப்பாளராக அறிமுகமானார் டிக்வெல, வேகப்பந்துவீச்சாளராக அறிமுகமானார் ராஜித. சர்வதேச ஆட்டத்தின் முதல் பந்தில் ரோகித்தை வெளியேற்றினார் ராஜித. அதே பந்துப்பரி மாற்றத்தில் ரகானேயும் வீழ்ந்தார். சரிவுடன் ஆரம்பித்தது இந்தியாவின் இன்னிங்ஸ். தவானும் சிக்கினார் ராஜி தவிடம். யுவராஜ், ரெய்னா இருவரும் இரட்டை இலக் கங்களில் ஓட்டத்தை ஆரம்பித்தனர். இருப்பினும் நீடிக்க வில்லை. வந்தவேகத்தில் விடைபெற்றார் டோனி. அஸ் வின் நிலைத்துநின்றாலும் ஆட்டம் கண்டது பின்வரிசை. முடிவில் 101 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந் தது இந்தியா. பந்துவீச்சில் இலங்கை சார்பாக ராஜித, சாணக இருவரும் தலா மூன்று இலக்குகளையும், சமீர இரு இலக்குகளையும், சேன நாயக்க ஓர் இலக்கையும் கைப் பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கைக்கும் ஆரம்பம் சோதனையாகவே அமைந் தது. முதல் பந்துப்பரிமாற் றத்திலேயே டிக்வெலவை வெளியேற்றினார் நெக்ரா. குணதிலகவும் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழந் தார். சந்திமல், கப்புக்கெதர நிலைத்து நிற்க இலங்கை வெற் றியை நோக்கி நடைபோட ஆரம் பித்தது. வீணடிக் கப்பட்ட பந்துக ளால் இந்தியாவுக் கும் வாய்ப்புக்கள் அவ்வப்பொழுது தேடிவந்தன. 35 ஓட்டங்களுடன் சந்திமலும், 25 ஓட்டங்களுடன் கப் புக்கெதரவும் ஆட்ட மிழந்தனர். இருப் பினும் நம்பிக்கை தந்து வெற்றியுடன் முடித்துவைத்தார் சிறிவர்தன. பந்துவீச்சில் இந்தியா சார்பாக நெக்ரா, அஸ்வின் இருவரும் தலா இரு இலக்குகளையும், ரெய்னா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



(ம)


## அல்வாய் வேவிலந்தை
## ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

புதிதாக நிர்மாணிக்கப்படவிருக்கும் நுளைவாயில்
ராஜகோபுர
அடிக்கல் நாட்டு விழா -12.02.2016

கணபதி ஹோமம் – காலை ௬.௦௦ மணி (வெள்ளி)
ராஜகோபுர அடிக்கல் நாட்டுதல் – காலை௯.௦௦ முதல் ௧௦.௩௦ வரை

### சதசண்டிகா ஹோமம்

13.02.2016 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

உபயகாரர்கள் உரியநேரத்துக்கு வருகை தரும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

**அனைவரும் இந் நிகழ்வுகளில் பங்குகொண்டு அம்பாளின் அருள் கடாட்சத்தைப் பெறுக.**

– பரிபாலன சபையினர் –

(சி/29072)(15.17)



FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர்: MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி - 1037 மாணவர்கள் French கற்றுள்ளனர்
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973
FLCentre



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 16 . 02 . 1941
மறைவு 12 . 01 . 2016

### அமரர் தம்பையா சின்னராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (11.02.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமி ஆசிரியர் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.
குடும்பத்தினர்.
(68809)(10.17.20)


### அறிவிக்கப்பட்டது ஆஸ்திரேலிய அணி

இந்தியாவில் அடுத்த மாதம் நடைபெற வுள்ள ரி-20 உலகக் கிண்ணத் தொடருக் கான ஆஸ்திரேலிய அணியை அந்த நாட்டு கிரிக்கெட் கட் டுப்பாட்டுச்சபை நேற்று அறிவித்துள் ளது.

இந்தியாவுக்கு எதி ரான ரி-20 தொடரை 3:0 என்ற கணக்கில் இழந்தமையால் தலைமைத்துவத் தில் இருந்து பின்ஞ் நீக்கப்படலாம் என்று எதிர்வுகூறப்பட்ட தைப்போல் அவர் நீக்கப்பட்டு ஒருநாள், டெஸ்ட் அணிகளின் தலைவரான சிமித் ரி-20 ஆட்டங்களுக் கும் தலைவராக நிய மிக்கப் பட்டுள்ளார்.

ரி-20 உலகக்கிண் ணத் தொடருக்கான அணி - சிமித் (தலை வர்), டேவிட் வோர் னர், ஆரோன் பிஞ்ச், வற்சன், மக்ஸ் வெல், மிட்செல் மார்ஷ், ஆஸ்டன் அகர், உஸ் மான் கவாஜா, பீற்றர் நெவில், பல்க்னெர், ஹஸ்டிங்ஸ், நாதன் கோல்டர், கசில்யூட், ரைட், அடம் ஜம்பா.

(ம)







## வாகனங்கள் விற்பனை

எமது சங்கத்தின் பெயரில் பதிவின் கீழ் காணும் விவரப்படியான வாகனங்கள் விற்பனை செய்யப்படவுள்ளது.

இதற்கான தங்களின் கூறுவிலை விவரத்தினை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் இதற்கென உரிய விண்ணப்ப படிவத்தினை ரூபா. 200.00 செலுத்தி பெற்று தங்களின் கூறு விலை விவரத்தினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

| தொடர் இல. | எஞ்சின் அளவு | வாகன/ இலக்கம் | அதன் வகை | அளவு | உற்பத்தி வருடம் |
|---|---|---|---|---|---|
| 01 | 2000 CC | 24-5521 | பென்ஸ் லொறி | 01 | 1969 |
| 02 | 815 CC | NPFJ 7924 | லான்ட் மாஸ்ரர் | 01 | 2003 |

மேற்படி வாகனங்களை அலுவலக நாள்களில், காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை பார்வையிடலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:** 2016.02.17

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

தலைவர்,
**யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**இல. 127, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/29063)(10.17.18.19)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.